உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை (05.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 283

# அரசமைப்புச் சட்டத் திருத்தம்

# 160 வாக்குகளால் நிறைவேறும்!

## அரச தரப்பு வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன

கொழும்பு,செப்ரெம்பர்5

எதிர்வரும் புதன்கிழமை எட்டாம் திகதி அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசமைப்புச் சட்டத்துக்கான பதினெட்டாவது திருத்தம், மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமாக - ஆகக்குறைந்தது 160 வாக்குகளுடன் - நிறைவேற்றப்படும் என்று அரசதரப்பு வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

எதிர்க்கட்சிகளில் இருந்து ஏற்கனவே அரசாங்கப் பக்கத்துக்கு மாறியவர்கள், ஆதரவு தரவுள்ளதாக அறிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் மற்றும் இடதுசாரி அமைச்சர்கள், எம்.பிக்கள் என்று மொத்தம் 160இற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்டத்திருத்தத்துக்கு ஆதரவளிப்பர் என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (28ஆம் பக்கம் பார்க்க)

## சச்சின் டெண்டுல்கர் விமானப்படை அதிகாரி!

சென்னை,செப்.5

இந்தியக் கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கருக்கு இந்திய விமானப்படை, அதிகாரி பதவியை வழங்கிகௌரவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவத்தில் இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் பி.வி.நாயக், டெண்டுல்கருக்கு குறூப் கப்டன் பதவியை வழங்கினார். கிரிக்கெட் துறையில் எட்டவே முடியாத சாதனைகளை நிகழ்த்தி இந்திய மண்ணுக்குப் (28 ஆம் பக்கம் பார்க்க)

### சுவரொட்டிகளை ஒட்டிய வேளை

## ஜே.வி.பி. உறுப்பினர் இருவர் யாழ்.நகரில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம்,செப்.5

அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிரராக யாழ்.நகரப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவர் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக மக்களை ஒன்றுபடுமாறு கோரும் சுவரொட்டிகளை யாழ். பஸ் நிலையப் பகுதியில் ஜே.வி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் லலித்(வயது 29) என்பவரும் இன்னொரு ஜே.வி.பி. உறுப்பினரும் நேற்று அதிகாலை 5 மணியளவில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தனர். அப்போது திடீரென அங்கு வந்த பொலிஸார் ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவரையும் கைது செய்து யாழ்.பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர் யாழ்.நீதிவான் நீதிமன்றப் பதில் நீதிவான் க.கேசவனின் இல்லத்துக்கு கைதுசெய்யப்பட்ட இருவரும் கொண்டு செல்லப்பட்டனர். எதிர்வரும் 6ஆம் திகதி இருவரும் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமெனக் கூறிய நீதிபதி இருவரையும் சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார். இரவு 8.30 மணியளவில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவரும் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

மக்கள் நலனைப் பாதிக்கும் வகையில் கொண்டுவரப்படவுள்ள அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் நாடெங்கும் ஒட்டுவதற்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## சுங்கத் திணைக்கள அலுவலகம் விரைவில் யாழ்.நகரிலும் செயற்படும்

### தபால் மா அதிபர் நேற்றுத் தகவல்

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்ப்பாணத்தில் சுங்கத் திணைக்களத்தின் கிளையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.திஸநாயக்க தெரிவித்தார்.

உலக அஞ்சல் தின நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று கொண்டாடப்பட்டபோது அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் யுத்தம் முடிவடைந்து சமாதான சூழலில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இங்குள்ள மக்களுக்கு முன்னேற்றகரமான சேவையை வழங்கும் காலம் கனிந்துள்ளது.

ஆசியாவிலேயே மிகச்சிறந்த சேவையாக எங்களுடைய தபால் சேவையை முன்னேற்றக் கடினமாக உழைக்க வேண்டும். வழமையான ஒரே பாங்கினை தபால் (02ஆம் பக்கம் பார்க்க)

### மழைகாலம் தலைகாட்டத் தொடங்கியிருப்பதால்

## டெங்கு விஸ்வரூபம் எடுக்கும் அபாயம் யாழ்.குடாநாட்டு மக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.குடாநாட்டில் அடுத்துவரும் மாதங்களில் மழைக்கான பருவகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் மீண்டும் ஆள்கொல்லி நோயான டெங்கு விஸ்வரூபம் எடுக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

கடந்த வாரங்களில் பெய்த மழையின் காரணமாக நுளம்புப் பெருக்கம் தீவிரமடைந்துள்ளதால் இவற்றைக் கருத்திற்கொண்டு குடாநாட்டு மக்கள் முன்னெச்சரிக்கையாக டெங்கு ஒழிப்பில் தொடர்ந்து கவனம் செலுத்துமாறு சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

இதேவேளை, இந்த வருடம் ஜனவரி தொடக்கம் கடந்த மூன்றாம் திகதி வரை டெங்கு நோய்த்தொற்றுக்கு ஆயிரத்து 800 பேர் இலக்காகியுள்ளனர் என்பது மருத்துவப் பரிசோதனைகள் மூலம் உறுதிப் (02 ஆம் பக்கம் பார்க்க)


உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவ காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....
www.uthayan.com

## வலி.வடக்கு மக்கள் சொந்த மண்ணில் கால்பதிக்கும் வாய்ப்பு மிக விரைவில்

### யாழ்.அரச அதிபர் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

இருபது வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்து, உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தமது இடங்களைவிட்டு வெளியேற்றப்பட்ட வலிகாமம் வடக்கு மக்கள் விரைவில் தங்களின் சொந்த மண்ணில் - சொந்த இடங்களில் - மீளக்குடியமரும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார்.

உலக அஞ்சல் தினம் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடப்பட்டபோது அந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதற்காக பலாலி (02ஆம் பக்கம் பார்க்க)


சக்திTV இன் ஏற்பாட்டில் இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிமுதல்
யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில்...
கலைமாமணி Dr. நித்தியஸ்ரீ மஹாதேவன் குழுவினரும் யாழ் இசைக் கலைஞர்களும் பங்கேற்கும்
சக்தி யாழ் சங்கமம்
யாழ் இசைக் கலைஞர்களுக்கு கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.
சக்தி
இசை விழா! எங்கள் பெருவிழா! அனைவரும் வாரீர்! அனுமதி இலவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



சக்தி ரி.வியின் ஏற்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் "சக்தி யாழ் சங்கமம்" நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.நுண்கலைப் பீடத்தைச் சேர்ந்த தாரணி, யாழ். பிரபல பாடகர் சுகுமார் ஆகியோர் பாடுவதை முதலிரு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை இறுதிப் படத்திலும் காணலாம். இந் நிகழ்வுக்கான அச்சு ஊடக அனுசரணையை "உதயன்" வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: டிலீப்)

# அரசமைப்புத் திருத்தம் சமர்ப்பிக்கும் புதனன்று ஐ.தே.கவினர் சபை அமர்வுகளைப் புறக்கணிப்பர்

**எம்.பி.சாகும்வரையான உண்ணாநோன்பிலும் குதிப்பார்**

கொழும்பு,செப்.5

அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன் றில் சமர்ப்பிக்கப்படவுள்ள எதிர்வரும் 8ஆம் திகதி, சபை அமர்வுகளைப் புறக்கணிக்கவும் அன்றைய தினம் நாடாளுமன்ற நுழைவாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் ஐ.தே. கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

அதே சமயம் அன்றைய தினம் ஐ.தே. கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட் டத்தில் குதிக்கவும் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன் றில் சமர்ப்பிக்கப்படவுள்ள அத்தினத்தில் மாகாண சபை சட்டமூலத் திருத்த நகலை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் அதாவுல்லா சமர்ப்பிக்கவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## டெங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ளது என்றும் அதேசமயம் இந்தக் காலப்பகுதி யில் டெங்கு நோயின் காரணமாக 22 உயிரிழப்புகள் குடாநாட் டில் ஏற்பட்டுள்ளன என்றும் யாழ். மாவட் டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் மாதத்திலும் இருவர் டெங்குக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். இந்த மாதத்தில் 180 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் எனும் சந்தேகத்தின் பேரில் வைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் பணிப்பாளர் கூறினார்.

டெங்குநோயின் தாக்கம் கடந்த மாதங்களில் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள்ளது எனினும் அண்மையில் பெய்த மழையின் காரணமாகவும் அடுத்த மாதத்தில் மழைக்கான பருவ காலம் ஆரம் பிப்பதனாலும் டெங்கு நோய்க் காரணி யான நுளம் பின் பெருக்கத்துக்கு வாய்ப்பாக அமையலாம்.

இந்த நிலைமையை உணர்ந்து குடாநாட்டு மக்கள் டெங்கு நேயை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவேண் டும் என்றும் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ-14)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடையேதும் இல்லாதபோது யாழ்ப்பாணத்தில் மட்டும் அதற்குத் தடை செய்திருப்பது ஏன் என்பது புரிய வில்லை என்று விடுவிக்கப்பட்ட பின்னர் லலித் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (ஒ-எ)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையக படைகளின் கட்டளைத் தள பதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க மேற்கொண்டு வருகின்றார்.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் கண்ணிவெடி உள்ள பிரதேசங்களை மட் டும் இனங்கண்டு அப்பிரதேசங்கள் அடை யாளப்படுத்தப்பட்ட பின்னர் ஏனைய பிர தேசங்கள் உடனடியாகவே விடுவிக்கப் படும். அந்தப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர்.

இதன் ஒரு பகுதியாகவே வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றத்துக் காக அனுமதிக்கப்பட்டன. எதிர்வரும் 9 ஆம் திகதி இரண்டாம் கட்டமாக வடம ராட்சி கிழக்கில் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் குடியமர உள் ளனர். தொடர்ந்து அடுத்தடுத்த கட்டங் களிலும் மீள்குடியமர்வு இடம்பெறும்

இனிவரும் காலங்களின் யாழ்ப்பா ணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களை முற்றாக நீக்க படைத்தரப்பில் நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. - என்றார். இதேவேளை வடமாகாண அஞ் சல் திணைக்களம் பலத்த சிரமங்கள், வசதி யீனங்களுக்கும் மத்தியில் சிறந்த சேவை யாற்றி வருகின்றது. இத்திணைக்களம் யுத்தகாலங்களிலும் சிறப்பாகச் செயற் பட்டு வந்தமையை பாராட்டுகின்றேன் என்றும் குறிப்பிட்டார் அரச அதிபர். (ஒ-15-7)

## சுங்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவையை விட்டு வெளியில் வந்து புதிய தபால் சேவையை வழங்க வேண்டும். கணனிமயப்படுத்தப்பட்ட செயற்பாட் டின்மூலம் உலகம் குறுகிவிட்டது. இவ் வாறான செயற்பாடுகள் எமது அஞ்சல் அலுவலகங்களிலும் அறிமுகப்படுத்தி நாமும் அதைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். எங்களுடைய சிந்தனை கள் புதிய கணனி மயமாதலுக்கு ஏற்றாற்போல் மாறவேண்டும்.

வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள் வடமாகாண அஞ்சல் அலுவலர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். நாங்கள் சகோதரத்துவமான உறவை ஏற்படுத்தி முன்னேற வேண்டும்.

யாழ்ப்பாணத்து மக்களில் பலர் வெளி நாடுகளில் உள்ளனர். இவர்கள் இங்குள்ள தமது உறவுகளுக்கு அனுப்பும் பொதி களை இதுவரை காலமும் கொழும்பில் உள்ள சுங்கத் திணைக்களமே சோதனை செய்து அதுதொடர்பான வரிவிதிப்புக்களை மேற் கொண்டு வந்தது. இதனால் காலதாமதம் ஏற்பட்டே மக்களுக்கு அந்தப் பொதிகள் கிடைத்து வந்தன. இதைத் தவிர்க்கும் பொருட்டு யாழ். மாவட்ட அஞ்சல் அலுவலகத்தில் திணைக் களத்தின் கிளையை நிறுவுவதற்காக, சுங்கத் திணைக்களத்துடன் கலந் துரையாடி அதுதொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. விரை வில் இங்கு அதன் கிளை ஆரம்பிக்கப் பட்டு மக்களுக்கான சேவைகள் வழங்கப் படும் - என்றார். சுங்கத் திணைக்களத்தின் கிளை ஒன்று திருகோணமலையிலும் அமைந் துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மற்றும் பலர் உரையாற்றினர். (ஒ-7-15)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிஜயா பொன்னம்மா



சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஜயா பொன்னம்மா நேற்று (04.09.2010) சனிக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு. (102975)

தகவல்:
க.ஆறுமுகம் (மகன்)

### சின்னத்தம்பி சின்னத்துரை

நவக்கிரி, புத்தூரைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னத்துரை நேற்று (04.09.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும் சர்வமேகன் (லண்டன்), சதீஸ்குமார் (குமார் - லண்டன்), சதீஸ்காந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

எல்லாளன் சனசமூக நிலையம் அருகில்
நவக்கிரி, புத்தூர். (102975)

தகவல்:
குடும்பத்தினர்.

### இளையதம்பி வேலுப்பிள்ளை (செப்படி)

(முன்னாள் துர்க்காதேவி ராவ்ஸ்போட் உரிமையாளரும் பிரபல விவசாயியும்)



நவக்கிரி மேற்கு, ராச வீதியைச் சேர்ந்த இளையதம்பி வேலுப்பிள்ளை நேற்று (04.09.2010) சனிக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளை யதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சவுந்தேஸ்வரி (கனடா), புஷ்பராணி (லெப னான்), தர்மசிறி, மகாலட்சுமி, விஜயலட்சுமி (கனடா), வரத ராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோரஞ்சிதன் (கனடா), வேலுப்பிள்ளை (கனடா), கிருபாதேவி, மகேஸ்வரன், ராஜலிங்கம் (கனடா), மஞ்சுளா (கனடா) ஆகியோரின் மாம னும் தீபா, அம்பிகாகரன் (கனடா), பிரியதர்சினி, பத்மகுமார், நிரஞ்சன்குமார் (கனடா), கஜதர்சினி - சிவதாஸ் (கனடா), கஜேந்தினி, பிரபாகரன், கிரியா - சிவரஞ்சன், அபிரா, நிரூபன் (கனடா), திவ்வியா (கனடா), கஜன், சஜன், சுமன் ஆகி யோரின் பேரனும் அபிஷனா, கம்சபி ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்ற சரஸ்வதி இராசதுரையின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.09.2010) ஞாயிற் றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற் பகல் 2 மணியளவில் நவக்கிரி (நிலாவரை) இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜகிரி,
நவக்கிரி மேற்கு, புத்தூர்.
T,P.:0777363158 (102974)

தகவல்:
குடும்பத்தினர்.

ஆங்கிலம் வாழ்வின் அடுத்தபடி

City & Guilds Approved Centre
பேசலாம் வாங்க !
0777302882
New Intakes 05/09/2010&15/09/2010
எம்மிடம் தற்போது கற்கும் மாணவர்களை போன்றே தொல்லையற்ற நவீன வழியில் ஆங்கிலம் கற்கலாம். ஒருமுறை வருகை தாருங்கள்.வித்தியாசத்தை உணர்வீர்கள்.
WWW.KUGROUP.INFO
KU's Method
Knowledge Universe
Malaysian College of Business and ICT
City and Guilds UK Training and Certification***

Win மெகா
கம்பியூட்டர் ஸ்கொலர்ஸிப்
... இலவச பரீட்சை ...
19-09-2010
உங்கள் அறிவுத்திறனை நிரூபித்து



80%
ஸ்கொலர்ஸிப்
வெல்லுங்கள்
TECHNO WORLD
Studies (Pvt) Ltd
கணினிப் பயிற்சி நிறுவனம்
10ம் திகதி முதல் நெல்லியடி மற்றும் மீசாலையிலும்...
344, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021-4921124
மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில், யாழ் வீதி, மானிப்பாய். 021-4922400
64, பலாலி வீதி, திருநெல்வேலி. 021-4922401
தென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில், சாவகச்சேரி. 021-5102600
கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்

SHAMROCK ஈச்சமோட்டை, யாழ்.
சிங்களம் - பேச, எழுத, வாசிக்க சனி, ஞாயிறு 3pm * Gr1முதல் O/L வரை * ENG MED, Gr6 to 11 * ICT, GIT செயன் முறைகளுடன் * ENG. Lit 10, 11

COMPUTER REPAIRING
சகலவிதமான கணணிகளும்(Laptop/ Desktop) உங்கள் வீடுகளுக்கோ, அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாட்களில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
T.P- 0212224459, 0774192275

A/L 2011 கனவுகள் மெய்ப்பட...
உயிரியல் - Exam guide
இரசாயனம் - Back up (Tamil/ English Medium)
வீடு வந்து கற்பித்தல். அழையுங்கள் வித்யா. சுழற்றுங்கள் (Dial)
0777730838/0717730838

திருமண சேவை
15 வருட திருமண சேவை நிறைவினை முன்னிட்டு வேல் அமுதன் பாரிய சேவைக் கட்ட ணக் குறைப்பு! விவரங்களை "சுயதெரிவு முறை முன்னோடி" சர்வதேச, மூத்த திருமண ஆற்றுப் படுத்துநர் வேல் அமுதனுடன் திங்கள், புதன், [illegible] தொடர்புகொண்டு விசாரித்தறிக!
தொலைபேசி: 0112360488,0112360694, 0114873929

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கடன்பட்டார் நெஞ்சம்போல்....

கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன், என்று இராமாயணக் காதையில் வரும் காட்சி ஒன்றினை கற்பனையும் கவிநயமும் பொருள்ப் பொதிவும் கலந்து வடித்திருக்கிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

மாபெரும் வீரரான இலங்கை அரசன் இராவணனுக்கு நேர்ந்த கதியை நினைத்து அவன் கலங்குவதற்கு உவமையாக கம்பன் இவ்வாறு பாடியிருக்கின்றான்.

இராமனோடு அவனுக்கும் தனக்கும் நடைபெற்ற போரில் அருமைத்தம்பி விபீஷனையும் அன்பு மகன் இந்திரஜித்தையும் அவன் இழந்தான். தமக்கு உண்டான அந்தப் பேரிழப்புகளின் பின்னர் இராமனுடன் நேருக்கு நேர் மோதுகிறான் மறவீரன் இராவணன். இராமனின் அம்பு பட்டுக் காயமுறுகிறான், இமய மலையை தன் இசையால் அசையவைத்த இராவணன். அவ்வேளை, காயமுற்ற இலங்கை வேந்தனைப் பார்த்து, இராமபிரான் பெருந்தன்மையுடன் 'இன்று போய் நாளை வா' என்று சொல்கிறான்.

தனது தளபதியாக விளங்கிய விபீஷணனை, ஆருயிர் மகனான இந்திரஜித்தை இழந்த போது உண்டான சோகத்தை விடவும், தான் காயமுற்றபோது ஏற்பட்ட உடல் வலியையும் மனவலியையும் விடவும், இராமனின் 'இன்று போய் நாளை வா' என்ற சொல் இராணவணன் இதயத்திலிருந்து இரத்தம் பீறிட வைத்தது.

அதனை நினைத்து ஆற்றாது அந்த மாவீரன் மனதுக்குள் மசிந்து உருகியதை கம்பநாடான் உருவகிக்கும் கவிதையின் வரிகளே, 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பதாகும்.

எதனைக் கூற வருவதற்காக இத்தனை பீடிகையும் இந்தப் பத்தியில் என்று நீங்கள் கேள்வி எழுப்புவது காதில் விழுகிறது. இராவணனுக்கு ஏற்பட்ட தாங்க முடியாத இழப்புகளையும் விட இராமன் கூறிய வார்த்தைகள் அவனின் இதயத்தைப் பிழிந்த தெடுத்தது.

இனி உயிரோடு இருந்தென்ன என்ற கவலையின் இறுதிப் பாதைக்கு இராவணனின் மனம் உச்சிக்கு ஏறிக்கொண்ட அவமானத்திற்கு கம்பனுக்குக் கிடைத்த உவமானம் கடன்; கடன் பட்டவர்களின் நெஞ்சம் - அவர்தம் மனம்.

ஆனால் அவமானம் என்ற சூடு சொரணை இல்லாமல், எமது இலங்கை அரசாங்கம் கடன் பட்டு ஆட்சி நடத்துகிறது. கடன் என்றால் அதுவும் ஆட்சி அதிகாரத்தின் ஓர் அத்தியாயம் என்றவாறு இந்நாட்டின் கடன் தொகை நெடுமரம்போல் உயர்ந்து நிற்கிறது.

இந்த வருடம் மே மாதத்தில் எங்கள் நாட்டுக்கு இருந்த கடன் நிலுவை 4,293 பில்லியன் ரூபாய்கள். அதற்கு அடுத்த ஜூன் மாதத்தில் கடன் நிலுவை 4,347 பில்லியன் ரூபாய்களாக எகிறிப் பாய்ந்தது. ஒரு மாத காலத்தில் மட்டும் 54 பில்லியன் ரூபாய்களை கடன் நிலுவையாக அதிகரிக்கும் கெட்டித்தனம் இந்த அரசுக்கு உண்டு.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்றும், பிறதேவைகளுக்கு என்றும் திட்டமிடப்படாத முறையில் கடன் வாங்கும் பழக்கம் அல்லது வழமை இந்நாட்டின் அரசுக்குச் சர்வசாதாரணம் என்பதனை நாம் சொல்ல வில்லை. அரசாங்கத்தின் மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களே இவற்றை வெளிப்படுத்துகின்றன.

கடனாயிலும் சரி, அதற்குரிய வட்டி ஆயினும் சரி ஒட்டுமொத்தமாக கட்டிச் செலுத்துபவர்கள் அரசாங்கத்தை நிர்வகிக்கும் ஆசாமிகளும் அல்லர்; மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் அல்லர். இந்தப் பெருந்தொகையை அழுதுதீர்க்க வேண்டியவர்கள் இந்நாட்டுப் பொதுமக்களே. அதனால், கம்பன் கண்ட இராவ ணன் போன்று எமது நாட்டின் மக்கள் ஆட்சியாளர்கள் கலங்கமாட் டார்கள். எல்லாப் பளுவும் இந்த நாட்டு மக்கள் மீதே பெரும் சுமையாக ஏறும். தங்களை ஆட்சிக் கட்டி லில் ஏற்றிய பாவத்துக்காக அவர்கள் அதனைச் சுமந்துகொள்ளட்டும் என்ற மிதப்பிலேயே ஆளுந்தரப்பு இவ்வாறு செயற்படுகிறது.

மக்களுக்காக மக்களால் என்ற ஜனநாயக ஆட்சிக்கான இலங்கையின் சீத்துவம் எப்போது மறையும் என்பதனை எந்த நிபுணனும் எதிர்வு கூறமுடியாது; போங்கள். போர் வெற்றி என்ற போர்வைக்குள் இவை ஒளிக்கப்பட்டுவிடும்.

# போரினால் பெற்றோரை இழந்த சிறார்களை தத்தெடுத்துப் பராமரிப்பதற்குத் திட்டம்

## காந்திசேவா சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.5

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த சிறார்களைத் தத்தெடுத்துப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை அகில இலங்கை காந்தி சேவா சங்கம் எடுத்துவருவதாக அதன் தலைவர் ஆர்.வடிவேலு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களை அதிலிருந்து மீளக்கட்டி எழுப்ப வேண் டிய பொறுப்பு இன்று எமது சமுதா யத்துக்கு இருக்கின்றது.

இதனால் முதற்கட்டமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தமது பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைக் கருத்திற்கொண்டு அவர்களைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கான ஏற்பாடுகளை நாம் செய்து வருகின்றோம்.

இதை இரு கட்டமாக நாம் முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அந்த வகையில் முதற்கட்டமாக இச்சிறார்களில் ஒரு பகுதியினரை எமது சங்கம் நேரடியாகத் தத்தெடுத்து அவர்களுக்குரிய பராமரிப்புச் செலவுகளை ஏற்பதோடு இவர்களைப் பராமரிப்பதற்கென உருத்திரபுரம், கிளிநொச்சியிலுள்ள எமது காந்தி நிலையத்தை செயற்படுத்தவும் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோம்.

அடுத்த கட்டமாக இப்பிள்ளைகளைத் தத்தெடுத்துப் பராமரிக்கக் கூடியவர்களைத் தெரிவுசெய்து அவர்களிடம் குறித்த பிள்ளையை சட்ட பூர்வமாக ஒப்படைத்தல் அல்லது அவரது உதவியில் எமது காந்தி சிறுவர் இல்லத்தில் அப்பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற செயற்பாடுகள் மேற் கொள்ளப்படும்.

இதற்கான தீர்மானம் நேற்று சனிக்கிழமை கூடிய எமது நிர்வாகக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்விடயம் தொடர்பாக எம்முடன் தொடர்புகொள்ள விரும்புபவர்கள் அகில இலங்கை காந்தி சேவா சங்கம் 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ள முடியுமென அவர் கேட்டுள்ளார். (த-16)

# வாக்காளர் மீளாய்வுத் தரவுகளை ஒக்ரோபர் மாதம் வரை கையளிக்கலாம்

யாழ்ப்பாணம்,செப்.5

2010ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பு மீளாய்வுத் தரவுகளை கிராம உத்தியோகத்தர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம்வரை தேர்தல் திணைக்களத்தில் யாழ் .அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் என திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள 495 கிராம உத்தியோகத்தர்களிடமும் மீளாய்வுத் தரவுகள் கையளிப்பதற்கான திகதிகள் வழங்கப்பட்டுள்ளன. கிராம உத்தியோகத்தர்கள் கட்டம் கட்டமாக தமது தரவுகளைக் கையளித்து வருகின்றனர்.

2010ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ளது.

தற்போது அந்த மீளாய்வுத் தரவுகளை மீள் பரிசீலணை செய்யும் பணிகளில் கிராம உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

திகதிகளில் அறிவிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் யாழ்.தேர்தல் திணைக்களத்திற்கு வருகை தந்து தமது தரவுகளைக் கையளித்து வருகின்றனர். அவர்கள் தொடர்ந்து ஒக்ரோபர் வரை வாக்காளர் மீளாய்வுத் தரவுகளைக் கையளிக்க முடியும்-என்றார். (த-9)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,செப்.5

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மீளக் குடியமர்ந்த மக்களுக்கு டென்மார்க் அகதிகள் பேரவை, போரூட் ஆகிய நிறுவனங்களினால் உதவி வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக டென்மார்க் அகதிகள் பேரவையினால் தற்காலிகமாக 75 வீடுகளும், மலசல கூடங்களும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'போரூட்' நிறுவனத்தினால் 150 மக்களுக்கு மீன்பிடி உபகரணமும், 128 மக்களுக்கு விவசாய உபகரணங்களும் வழங்கப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார். (த-314-318)

# பெரும்பாலான பாடசாலைகளில் சுத்திகரிப்புத் தொழிலாளர் இல்லை

## வலி.மேற்கு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

மூளாய்,செப்.5

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள அனேகமான பாடசாலைகளில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நியமிக்கப்படவில்லை என்றும் இதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிக்கான கோட்டக்கல்விப் பணிப்பாளரினால் இவ்விடயம் தற்போது வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

இவ்விடயம் குறித்து ஆராய்ந்து சுத்திகரிப்புத் தொழிலாளர்களை நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போதே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. (த-99)

# மக்களுக்கு நிவாரண விநியோகத்தை வலய ரீதியாக மேற்கொள்ளத் திட்டம்

## சங்கங்களை இலாபமீட்டச் செய்ய இந்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பொதுமக்களுக்கான நிவாரண விநியோகங்களை வலய ரீதியாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் குறிப்பிட்ட கிளைகளில் மட்டும் வைத்து மக்களுக்கான நிவாரண விநியோகத்தை வலய ரீதியாக மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும்,ஏனைய கிளைகளில் ரொக்க விற்பனை இடம் பெறவுள்ளதாகவும் கூறப்பட்டது.

கிளைகளில் ரொக்க வியாபாரத்தை அதிகரிப்பதன் மூலம் நட்டத்தில் இயங்கும் சங்கங்களை அதிலிருந்து இலாபமடையச் செய்ய முடியும் என்றும் புதிய திட்டத்தில் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த வலய ரீதியான நிவாரண விநியோகத்தை இந்தமாதம் முதல் அமுலுக்குக் கொண்டு வரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-26)

# கைவிடப்பட்டிருந்த நிலங்களில் இம்முறை காலபோக நெற்செய்கை

மூளாய்,செப்.5

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் இதுவரை கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட நிலப்பரப்புகளில் இம்முறை நெற்செய்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொன்னாலை-சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி ஆகிய கிராமங்களிலேயே மேற்படி நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இப்பகுதிக்கான விவசாயப் போதனாசிரியர் மேற்கொண்டு வருகிறார்.

கடந்தகால வன்செயல்கள் காரணமாகவே இந்த நிலப்பரப்புகளில் நெற்செய்கை செய்யமுடியாமல் இவை கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. (த-99)

# நாளை

| | |
|---|---|
| ஆவணி 21 | : 06.09.2010 |
| | : திங்கட்கிழமை |
| திதி | : திரயோதசி |
| | மு.இ. 09.25 வரை |
| நட்சத்திரம் | : ஆயிலியம் |
| | பி.இ. 05 வரை |
| சுபநேரம் | : 12.04 - 01.34 |
| ராகுகாலம் | : 07.34 - 09.04 |

# புதிதாக முளைத்துள்ள மயானத்தால் அவதிப்படும் கெற்பேலி மக்கள்

கைதடி,செப்.5

மிருசுவில் கெற்பேலி பிரதேசத்தில் தற்போது புதிதாக முளைத்துள்ள மயானத்தால் அப்பிரதேச மக்கள் பெரும் துன்பங்களையும் சுகாதாரச் சீர்கேட்டையும் அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பிரதேசத்தில் நான்கு மயானங்கள் தற்போது பாவனையில் இருப்பதாகவும், ஒரு சிலரின் நடவடிக்கையினால் இங்கு ஐந்தாவது மயானம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் இம்மயானத்திற்கு மிக அருகில் வசிக்கும் மக்களும் அருகிலுள்ள விளை நிலங்களும் மிக மோசமான முறையில் பாதிக்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப்புதிய மயானத்தின் உருவாக்கத்தினால் ஏற்படும் பாதிப்பு சம்பந்தமாக அப்பிரதேச மக்கள், யாழ். அரச அதிபர், தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை செயலருக்கும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அப்பிரதேச வாசி ஒருவர் கூறினார்.

இதேவேளை-அப்பகுதியைச் சேர்ந்த உள்ளூர் அரச சேவையாளர் ஒருவரின் அசமாந்தப் போக்கினாலேயே இம்மயானம் உருவாகி வருவதாகவும், இதைச் சம்பந்தப்பட்டோர் உடன் தடுத்து நிறுத்தி மக்களின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும் எனவும் இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஜனனி பஞ்சாட்சரம்



(மருத்துவபீட மாணவி முதலாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்)

கச்சாய் வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பஞ்சாட்சரம் ஜனனி நேற்று (04.09.2010) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பஞ்சாட்சரம் - தேவேந்திராணி (ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் மதுவந்தியின் (பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவி) பாசமிகு சகோதரியும் அமரர் இராமலிங்கம் - பரிமேளம் தம்பதியரின் பேர்த்தியும் இராசம்லர் (தென்மராட்சி வலய இந்து சமய ஆலோசகர்), நாகராஜா புவனேஸ்வரி ஆகியோரின் பெறா மகளும் கதிர்காமநாதன், சிதம்பரநாதன், சண்முகநாதன், செல்வநாயகம் தம்பதியரின் மருமகளும் அஜந்தன் (CTB நடத்துநர்), சுரேகா (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 2 ஆம் வருட மாணவி), நிவாஷினி (யாழ். பல்கலைக்கழக கலைப் பீட முதலாம் வருட மாணவி) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் பிரதீபன், துஷியந்தி (ஜேர்மனி), துஷாந்தி, துஜீபன், அபிராமி, மிதுனாளன், கயானன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கச்சாய் வீதி,
கொடிகாமம்,
தொ.பே.: 0779789160 (சி-570597)

தகவல்:
குடும்பத்தினர்.

## குமரேசன் நிர்மலன்



யாழ்.அனலைதீவு 7ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாக வும் வதிவிடமாக வும் கொண்ட செல்வன் குமரேசன் நிர்மலன் நேற்றுமுன்தினம் (03.09.2010) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அமரர் குமரேசன் மற்றும் லலிதா தேவி ஆகி யோரின் அன்பு மகனும் சுசீலா, ரஞ்சினி, குமாரதேவன், குமார தேவி அருள்குமரன், சங்கீதா பிரணவன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உதயசீலன், ஆதித்த மூர்த்தி, பிறேமா, ஜெயராசா, கவிதாஞ்சலி, அமரர் சிறிமாறன் ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் அனலைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

அனலைதீவு - 07
தொடர்பு: 0213209573
0773596759

தகவல்:
குடும்பத்தினர்

## வீடுகள் விற்பனைக்குண்டு

சுண்டுக்குளிப் பகுதியில் 2 வீடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772492268, 004531313529

## நாய்க்குட்டி விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய தூயஇன டோமன் (Doberman) பெண் நாயும் 3மாத குட்டியும் விற்பனைக்கு உண்டு.
Tel: 0776408146

## காணி விற்பனைக்கு

யாழ்.கண்டி ஏ- 9 வீதியில் நாவற்குழி அருணா பேக்கறிக்கு அருகில் உள்ள லேனில் 3 பரப்புக் காணி கிணறு அத்திபாரத்துடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0714872745
0113150336

## வீடு, கடை வாடகைக்குண்டு

கஸ்தூரியார் வீதியில் வீடும் கடையும், நாவலர் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 222 3479
021 567 0313

## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதிக்கும், பிறவுண் றோட்டுக்கும் இடையில் நாவலர் வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் 1000 சதுரஅடி விஸ்தீரணமுள்ள களஞ் சிய ஹோல் வாடகைக்குண்டு.
தொடர்பு: 0778692341

## கடை வாடகைக்கு

கே.கே.எஸ்.வீதியில், கொக்குவில் சந்தியில் 15 அடி அகலமும் 50 அடி நீளமும் உடைய கடையொன்று வாடகைக்குண்டு. களஞ்சிய சாலையாகவும் பாவிக்கலாம்.
தொடர்பு: 0212225101

## தவறிவிட்டது

தாவடி தெற்கு, கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த லோஜனி பார்த்தீபன் என்பவரது தேசிய அ.அட்டை (758502210V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 6059613

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் இலத்திரனியல், அழகுசாதனப் பொருள்கள் மற்றும் தொலைத் தொடர்பு நிறுவனம் ஆகியவற்றுக்கு வேலையாள்கள் தேவை. வலி.தெற்கு, வலி.வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட தகுதியுள்ள ஆண், பெண் இருபாலர்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0772396810, 0214916263

# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி



புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று (04.09.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லமுத்துவின் அன்புக் கணவரும் இராசலெட்சுமியின் அன்புத் தந்தையும் சிவகுமாரின் அன்பு மாமனாரும் சிவரஞ்சினி - சுதர்சன், வானதி - ஆதவன், சிந்துஷா - யசோதரன், சிவாஜினி, கஜேந்தினி, வினோதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மதியாவர்ணம், கண்மணி, அன்னலட்சுமி, ராசமணி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சவன்யா, ரஜீவன், தரன், சர்ஷியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கட்டையால்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'சோதிநாதன்'
அ.சிவகுமார், பலாலி றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (102960)

தகவல்:
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்
(கஜேந்தினி உணவகம்)
உடுவில்

## சின்னவன் சின்னத்தம்பி (வெளிச்சம்)

(முன்னாள் கிளை முகாமையாளர்,சாவக்சேரி பனை, தென்னை வள அ.கூ.சங்கம்)

கைதடி மத்தி, வளர்மதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் சின்னத்தம்பி (வெளிச்சம்) நேற்று (04.09.2010) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன்-சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னவன் - வள்ளி தம்பதியரின் மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் குகந்தினி(சுவிஸ்), குகேஸ் (லண்டன்), குவிந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மங்கரேஸ்வரன் (சுவிஸ்), தவராணி(லண்டன்), திஷா சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபர்ணா, அவந்திகன், அகீசன், தாயகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

வளர்மதி வீதி,
கைதடி மத்தி. (சி-570579)

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
22 . 02 . 1941



மறைவு
06 . 08 . 2010

## திருமதி அன்னலட்சுமி கணேசன்

அன்பிற்கு இலக்கணமாய்
பாசத்திற்கு இருப்பிடமாய்
அறிவிற்கு வழிகாட்டியாய்
குடும்பத்திற்கு ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
பாரினிலே சிறப்பாக வாழ்ந்த நீங்கள்
பரமனடியில் அமைதி பெற
இறைவனை வேண்டுகின்றோம்.

கடந்த 06.08.2010 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறிய, உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மன மார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு -

31ஆம் நாள் நினைவு தினமான இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

228/5, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி.
(102967)

என்றும் நினைவுடன்
பிள்ளைகள் (ஜெகதீஸ்வரன்,
சாயீஸ்வரன்)

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் தனபாலசிங்கம்



யாழ்ப்பாணம், வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் தனபாலசிங்கம் 31.08.2010 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உரும்பிராயைச் சேர்ந்த வீரசிங்கம்-பகவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கொக்குவிலைச் சேர்ந்த றட்ணம் - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் குமாரசிங்கம், காராளசிங்கம், நவரட்ணசிங்கம், ஜெயபால சிங்கம், குணபாலசிங்கம், பூபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான ராஜசிங்கம்,விஜயசிங்கம், வினோதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயசாந்தரூபி, ஞானரூபி, ஜெயரட்ணசிங்கம், குணரட்ணசிங்கம், ஞானரட்ணசிங்கம், செல்வரட்ணசிங்கம், செல்வரூபி, ஜெகரட்ணசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவசகாயம், தயாநிதி, மீனலோஜினி, பிரேமறஞ்சினி, தக்ஷாயினி, சந்திரிக்கா, தயாசீலன், வினித்தா ஆகியோரின் பாசமிகு மாமனும் நெல்சன், யுரேன், தினேஷ், சர்வேஷ், ஷைரிக்கா, டெபிஷிக்கா, அம்புஜன், லக்ஷ்மி, விதுரன், பிரதிஷ்ரா, சோபிதா, அனோஜா, சண்டிக்கா, கீர்த்திக்கா, அனிக்கா, வினுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் 12.45 (லண்டன் நேரம்) அளவில் இல.61, Lady gate lane, Ruslip, HA4/7QX, London இல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 1.35 (லண்டன் நேரம்) அளவில் Breakspear Road, Ruislip, HA4, 7SJ, London இல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
தேவசகாயம் -00447769714383
தயாநிதி -0044789003557
ஜெயம் -0044[illegible]30599344
[illegible] -00447956396092 (102962)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் தொலைக்கும் மீள்குடியேற்றமும் இராமாவில் அகதி முகாமின் மூடுவிழாவும்

இராமாவில் முகாம் மற்றும் குடத்தனை முகாம் ஆகியவற்றில் குடிகொண்டிருந்த இருட்டு மெல்ல மெல்ல விலகத் தொடங்கிவிட்டது. இதற்கு பிள்ளையார் சுழி போட்டது போல 81 குடும்பங்கள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதைவிட எதிர்வரும் 9ஆம் 10ஆம் திகதிகளோடு இந்த முகாமில் எஞ்சியிருக்கும் மக்களும் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவிடுவார்கள். அத்தோடு இராமாவில் முகாமுக்கு மூடுவிழாதான். பெரும்பாலும் மூடுவிழா என்றாலே அது ஒரு துக்ககரமான நிகழ்வாகவே இருப்பது வழக்கம். ஆனாலும் இராமாவில் முகாமை மூடுவிழா பல குடும்பங்களின் வாழ்வில் இத்தனை நாளும் அணைந்து கிடந்த ஆனந்தம் என்னும் விளக்குக்கு



மீண்டும் ஒளியேற்றப் போகிறது.

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது சண்டை உக்கிரமடைந்த பகுதிக்குள் அகப்பட்டுக் கொண்ட மக்கள் தமது உயிரைப் பணயம் வைத்து யுத்த சூழலில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தார்கள். இதன் போது - யுத்தத்தை நிகழ்த்துபவர்களின் கண்களில் மண்ணைத்தூவி விட்டு வெளியேறும் போது - இவர்கள்பட்ட இன்னல்கள் சொல்லிலடங்காதவை. ஒவ்வொரு முறையும் இவர்கள் போர் வலயத்திலிருந்து வெளியேற முனையும் போதும் இழப்புகளே இவர்களுக்கு அதிகம் கிடைத்தன. ஆனாலும் தமக்காக இல்லாவிட்டாலும் தம்முடைய குழந்தைகளுக்காகவேனும் அங்கிருந்து வெளியேற வேண்டுமென்ற வெறியோடு புறப்பட்டார்கள். கடல் வழியாகவும் காடுகள் வழியாகவும் உயிரைத் தப்ப வைக்கும் முயற்சிகளின் பயனாக அவர்கள் பாதுகாப்பான பகுதிகள் என்று அவர்கள் நினைத்த பிரதேசங்களை வந்தடைந்தார்கள்.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக அவர்களின் வாழ்வு மாறிப் போனது. வந்த ஒழுங்குக்கேற்ப நாட்டின் பல்வேறு திசைகளிலும் உருவாக்கப்பட்ட நலன்புரி நிலையங்களுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் அவ்வாறு முளைத்த முகாம்களில் ஒன்றுதான் கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையம். ஏறக்குறைய பதினைந்து மாதங்களுக்கு மேலாக சுற்றிவர அடைக்கப்பட்ட திறந்த வெளிச் சிறைச்சாலை போன்று தோற்றமளித்த இந்த வளாகத்துக்குள்தான் பல குடும்பங்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. போர் ஓய்ந்து, இயல்புநிலை திரும்பத் தொடங்கியவுடன் முகாம்களிலுள்ள மக்கள் மீளக்குடியமர்த்தப்படத் தொடங்கினர். வன்னிப் பகுதி, யாழ்ப்பாணத்தின் பிற பகுதிகள் என்பவற்றை சொந்த இடமாகக் கொண்ட மக்களில் பலர் தமது சொந்த மண்ணுக்கு இதன் மூலம் மீள முடிந்தது. ஆயினும் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் தமது இருப்பிடங்களை பறிகொடுத்த குடும்பங்கள் மீள்குடியேற்றப்படுவது தொடர்ந்தும் தாமதிக்கப்படும் ஒரு செயலாகவே மாறியது.

ஏற்கனவே முகாம் வாழ்வு சிக்கலுக்குரியதாக இருக்கையில் அந்தப் பிரச்சினைகளை அதிகரிப்பது போல இயற்கையும் இந்த மக்களுக்குத் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்தே வந்தது. மக்கள் இடம்பெயர்ந்து வந்தவுடன் அவர்களுக்கு நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதில் அரசு அதிகாரிகள் அப்போது எடுத்த அவசரத்தின் ஒரு சிறு துளியைக்கூட மக்களின் நலன்மீதான அக்கறையாகக் காட்டத் தவறிவிட்டார்கள். விளைவு? தொடர்ந்தும் எல்லாப் பருவ மாற்றங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

கொடிகாமம் பகுதியில் இராமாவில் நலன்புரி நிலையம் அமைந்துள்ள பிரதேசம் அப்பகுதியிலேயே மிகவும் தாழ்வான பகுதியாகும் நிலமும் மிகுந்த மணற்பாங்கானது. இடையிடையே யுத்தத்திற்கு மத்தியிலும் தப்பிப் பிழைத்து தலை நீட்டியிருந்த ஓரிரண்டு தென்னைகள்தான் நிழலுக்கென்று இருந்தன. இத்தகைய புவியியல் அமைப்பால் சிறு மழைக்கே பெரு வெள்ளமும் பத்து மணிக்குப் பின்னர் கடும் வெயிலும் இந்த முகாம் மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டேயிருந்தன. மத்தளம் இரண்டு பக்கமும் அடி வாங்குவதைப் போல கோடையிலும் மாரியிலும் இவர்கள் வதைபட வேண்டியிருந்தது. இதைவிட காற்றும் தன் பங்குக்கு நிலத்திலுள்ள மணலையெல்லாம் வாரி அள்ளி இவர்களின் உணவுகளின் மீது தெளிக்கவும் தவறவில்லை. எப்படித்தான் முன்னெச்சரிக்கையோடு இருந்தாலும் இயற்கையின் நர்த்தனத்தின்முன் அப்பாவிப் பொதுமக்கள் தோற்றுப்போவதே வழக்கமாக இருந்தது. இதுபோலவே குடத்தனை நலன்புரிநிலையமும் கடற்கரையை அண்டியதொரு வெட்டவெளிப்பிரதேசமாக இருந்த படியால் வெயிலாலும் மழையாலும் அந்த மக்கள் பாதிக்கப்படுவது வாடிக்கையான விடயம் தான். இதைப்பற்றியெல்லாம் அனேகர் கண்டு கொள்வதேயில்லை. அவர்களை எப்படியேனும் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்க வேண்டும் என்ற அவசரம் காரணமாக அவர்களின் சுவாத்தியத்துக்கு ஒத்துவரக்கூடிய சூழலில் உள்ள இடத்தில் முகாமை அமைக்க உரியவர்கள் ஆர்வம் காட்டவில்லை. பொதுவாகவே மனிதர்கள் வசிப்பதற்கான அடிப்படை தன்மைகள் பலவீனமாகவுள்ள பகுதிகளிலேயே பெரும்பாலான நலன்புரி நிலையங்கள் உருவாக்கப்பட்டதாக புத்திஜீவிகள் பலரும் சொல்வது உண்மைபோலவே படுகிறது இதைவிட முகாம் வாழ்க்கை ஒரு தண்டனையாகவே தமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் எண்ணும் அளவுக்கு அவர்களுக்கான நெருக்கீடுகள் ஒப்பீட்டளவில் மிக அதிக மானதாகவே இருந்தன. இவை திட்டமிட்டே நிகழாவிட்டாலும் கூட அத்தகையதொரு மனப் பாங்குக்கு மக்கள் மாறவேண்டியே இருந்தது.

இதைவிடவும் உலகில் வேறெந்தப் போர்முனையிலும் நிகழாத அவலங்களுக்குள் அகப்பட்டு மீண்டதனால் அதிகூடிய உளச் சிக்கல்களுக்கும் இவர்களில் பலர் உள்ளாகியிருந்தனர். அத்தகைய உள நெருக்கீடுகள் குறுகிய பிரதேசத்துக்குள் நீண்டநாள்கள் அடைபட்டுக் கிடக்கும்போது இன்னும் அதிகரிக்கவே செய்யும். இராமாவில், குடத்தனை முகாம் மக்களும் இதற்கேற்றால்போல் எந்நேரமும் ஏதோவொன்றைப் பறிகொடுத்தவர்கள் போன்ற தோற்றத்தோடு - நடைப்பிணங்களாகவே - நடமாடி வந்தார்கள்.

இராமாவில் முகாமில் இருப்போரில் பலர் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர்கள். வடபகுதிக் கடற்பரப்பில் வடமராட்சி கிழக்குப் பகுதி இராணுவ ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்திருந்த படியால் வன்னிமீதான யுத்தத்தின்போது வடமராட்சி கிழக்கில் புதிதாக உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டன. உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதுதான் இதுநாள் வரையும்

## போரால் நொந்துபோன மக்களை முகாம்களில் இயற்கையும் விடாமல் வதைக்கத் தவறவில்லை

பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. ஏறக்குறைய 20 வருடங்களுக்கு மேலாக வலி.வடக்கு மக்கள் அகதிகளாக அலைந்து திரிவதற்குக் காரணமே அவர்களது பிரதேசங்களிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படாது இருப்பதுதான். அது போலவே காலம் முழுவதும் அகதி முத்திரையைச் சுமந்தவாறு தாமும் வாழவேண்டிய சூழல் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் இராமாவில் மக்களிடம் எழுந்ததில் தவறில்லை. ஆயினும் எதுவுமே உருப்படியாக நடக்காததால் தமது சொந்த இடத்தை இனிமேல் காணவேமுடியாது என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

அண்மையில் எல்லா வானிலை அவதானிப்புகளையும் சுழித்துவிட்டு திடீரென இரண்டு நாள்களாக பொழிந்து தள்ளிய மழை இராமாவில் முகாமை ஒருமுறை உலுக்கி எடுத்துவிட்டது. ஏற்கனவே பள்ளப்பகுதியாக இருந்தபடியால் முகாமில் நாலாபுறத்திலிருந்தும் பாய்ந்தோடி வந்த நீருக்கு முன்னால் - போரால் அடிபட்டு நொந்துபோன - அப்பாவி மக்கள் என்னதான் செய்யமுடியும். முடங்கி கிடக்கவென இருந்த [illegible] முகாம்களிலுள்ள சிறுசிறு குடிசைகள் ஒவ்வொன்றின் கூரைகளிலும் ஆங்காங்கே திறந்துகொண்ட வாய்கள் ஊடாக மழை நீர் ஒழுகிக்கொண்டே இருந்தது. ஒதுங்கியிருக்கக்கூட ஒருதுண்டு நிலம் இல்லை. நீரின்மேலே வாழ்க்கையை நடத்தவேண்டிய கட்டாயம். தப்புவதே நிச்சயம் அற்றது என்ற நிலையில் போரின் அத்தனை கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு வந்தவர்கள் என்ற படியால் இந்த வெள்ளப்பிரச்சினையும் இராமாவில் மக்கள் வழக்கம்போலவே சமாளித்துக்கொண்டார்கள். ஆனால் அழிவுகளும், அவலங்களும் மட்டும் தானா எங்களுக்கு வாழ்க்கை? என்ற வினா மட்டும் அவர்களுக்கு அடிக்கடி எழுந்தது.

இந்த நிலையில் தான் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் மக்களை மீள்குடியமர்த்த அனுமதி வழங்குமாறு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்கவிடம் யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் கோரிக்கை விடுத்திருந்தார். அது பற்றி சாதகமாக பரிசீலிப்பதாக கூறிய இராணுவத் தளபதி ஒரு சில தினங்களின் பின்னர் பலாலியில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது வடமாராட்சி கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு அப்பகுதிகளில் மக்கள் உடனடியாகவே மீளக்குடியமர்த்தப்படுவர் என்று அறிவித்தார். அறிவிப்போடு மட்டும் நின்று விடாமல் வடமராட்சி கிழக்கு அம்பனைச் சேர்ந்த 81 குடும்பங்கள் அவர்களது சொந்த இடங்களில் கடந்த 30 ஆம் திகதி மீளக்குடியேற்றப்பட்டன. இப்போது அதன் இரண்டாம் கட்டமாக வடமராட்சி கிழக்கில் உள்ள செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று, மருதங்கேணி, தளையடி,



அக்கராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 9ஆம், 10 ஆம் திகதிகளில் தமது வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதுனால் வரையும் ''எங்கட வீட்ட விடுங்கோ'' என்பதை முகாம்களில் அடைபட்டுக்கிடந்த மக்களின் ஒருமித்த குரலாக ஒலித்தது. ஆனாலும் இனிமேல் - மீளக்குடியமர்ந்த பின்னர் - அவர்களின் தேவைகளும் கோரிக்கைகளும் ஆளாளுக்கு மாறுபடும் சிலருக்கு வீடு இருக்காது பலருக்கு தொழில் இருக்காது. இன்னும் சிலருக்கு தொழில் செய்வதற்குரிய உபகரணங்கள் இருக்கமாட்டா. இந்நிலையில் அவர்களது மீள்குடியேற்றம் அர்த்தபூர்வமானதாக அமைவதற்கு ஏற்றவேலைகளை உரிய தருணத்தில் செய்யவேண்டியது அரசின் கடமை. எனினும் கடந்த சில காலங்களில் அரசிடம் மக்களுக்கான சில தேவைகளை கொண்டுசென்று கோரிக்கை விடுத்து பெற்றுக்கொள்வதில் அரசு அதிகாரிகள் சிலர் மெத்தனம் காட்டி வந்தனர். இதனாலேயே இயற்கையின் சீற்றங்கள் நிகழ்ந்த பின்னரும் மக்களின் வாழ்வில் இருள் தொடர்ந்து வந்தது.

ஆனாலும் இப்போது அந்த நிலை மாறிஇருப்பது தெளிவாகவே தெரிகிறது. மக்களின் நீண்ட காலப் பிரச்சினையாக இருந்துவந்த உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக, தான் பதவியேற்ற ஒரு குறுகிய காலத்துக்குள்ளேயே படைத்தரப்பின் கவனத்துக்குக் கொண்டுவந்து வடமராட்சி கிழக்கு மக்களின் வாழ்வில் விடிவுபிறக்க யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் வழிசமைத்திருக் கிறார். அரச அதிகாரிகளின் இத்தகைய, மக்கள் நலன் சார்ந்த, ஆரோக்கியமான செயற்பாடுகள் வரவேற்கத்தக்கவை. இதேபோன்று மீள்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வினை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு செல்ல - மேலதிக தேவைகளையும் நிறைவேற்ற - அரச அதிபர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் தொடர்ந்தும் முயற்சிக்க வேண்டும். அதனுடாகவே போரால் சிதைந்துபோன மக்களின் வாழ்வியலில் மீண்டும் வசந்தத்தை உண்டுபண்ணமுடியும். ✱

ஔண்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

டாக்டர் பாவனையில் நல்ல நிலையில் உள்ள Morris Minor உடன் விற்பனைக் குண்டு. பார்வையிடும் நேரம்: பி.ப. 4 மணிக்குப்பின்பு.

41, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

## திருமணக் CAR A/C வாடகைக்கு



- Metalic white மற்றும் Silver நிற கார்கள் பெற்றுக்கொள்ளலாம்.
- சாதாரண தினசரி வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம் (சாரதியுடன்)
- டொல்பின் வான் மற்றும் மினி பஸ்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**ரட்ணம்,** 22, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். 0777903090/021 5100150

## மண நாளில் பொன் விழாக் காணும் எம் உயிர் தந்தோரே வாழி நீடு!

50th Wedding Anniversary 05.09.2010



"அப்பொழுது உம் மக்களும், உமது மேச்சலின் மந்தையுமான நாங்கள் என்றென்றும் உம்மைப் போற்றிடுவோம்! தலைமுறை தோறும் உமது புகழை எடுத்துரைப்போம்"

*சங்கீதம் 79:13*

### திரு.திருமதி கிறீஸ்துதாஸ் தேவரத்தினம்

துன்பங்களையும் துயரங்களையும்
துணாக நின்று தாங்கி
இன்பங்களை மட்டும் எமதாக்கிய
எம்முயிர் தாய் தந்தையரே!
மண வாழ்வில் பொன் விழாக் காணும்
குணமிகு எ ம் மாமா! மாமியே!
தினம் எங்கள் குரல் கேட்டு
மனம் மகிழும் தாத்தா! அம்மம்மாவே!
மண்ணாளும் மதிருபன் கிருபையால்
எந்நாளும் இன்பமாய் நீர் வாழ
பொன் விழா நாளில் வாழ்த்துகின்றோம்
வாழி! வாழி! பல்லாண்டு வாழி!

என்றும் மாறா அன்புடன் வாழ்த்தும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பாடசாலை வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. 021 373 4188

(102882)

## தொழில் முயற்சியாளரை பதிவு செய்யும் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.5

ஊர்காவற்றுறை தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தில் தொழில் முயற்சியாளர்களை பதிவு செய்தல் தொடர்பான மூன்றாவது கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், தொழில்துறை திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொள்வார்கள். (த-310-317)

## புதிய மிளகாய் இனம் கண்டுபிடிப்பு

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் பச்சை மிளகாய் இனத்தை சேர்ந்த (MI green) எம்.ஐ. கிறின் என்ற புதிய இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய மிளகாய் இனத்தை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனைக்காக பயிரிடப்பட்டு நல்ல பயன் கிடைத்தால் இவ்விதையினத்தை விவசாயிகள் பெறுவதன் மூலம் நல்ல விளைச்சலை பெறலாம் எனவும் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம் தெரிவித்துள்ளார். (த-314-317)

## சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்



### திரு.வினாசித்தம்பி சண்முகநாதன் (Dip. in Ed., S.L.T.S-I)

(பதில் அதிபர், யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)

எமது கல்லூரியில் 24 ஆண்டுகள் ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக, பதில் அதிபராகச் சேவையாற்றி ஓய்வு பெறும் இந்நாளில் சேவை நலன்பாராட்டுக்களையும் இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### சேவை விவரம்

- குருநாகல் வன்னிக்குடாவெ முஸ்லிம் மகா வித்தியாலயம் - 07.06.1977 - 15.03.1980
- கு/கல்கமுவ முஸ்லிம் மகா வித்தியாலயம் - 16.03.1980 - 29.04.1986
- யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி - 01.05.1986 - 05.09.2010

ஆன்ற அறிவும் அளவிலாத் தத்துவமுமாய்
ஊன்றிய வேர்; விழுது விடும் காலம் வரை
மூன்று தசாப்தங்களைக் கடந்த சேவையை
முதுசமாய் விட்டுக் காலத்தின் கட்டாயத்தை மதித்து
ஓய்வு காணும் எங்கள் பதிலதிபரவர்கள்
என்றும் நலமுடனும் வளமுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்க பல்லாண்டு.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் கழகம், யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

(102785)

## தேவை

நல்லூர்ப் பகுதி, வைமன் வீதி, நாவலர் வீதி, பிறவுண் வீதி, திருநெல்வேலியில் 1 பரப்புக் காணி தேவை.

தொடர்பு: 0777630215

## கடைத்தொகுதி விற்பனைக்கு

யாழ்.பற்றிக்ஸ் வீதி, பாங்ஷால் வீதி சந்தியிலுள்ள கடைத்தொகுதி (மேல்மாடி) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 3216790

## இறைச்சிக்கோழி விற்பனை

கல்பேட், புறொயிலர் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் லேன், நல்லூர்.

## வீடு வாடகைக்கு

இராமலிங்கம் வீதி, முடமாவடியில் வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு விரும்பத்தக்கது. (நீண்ட தவணையில் வழங்கப்படும்)

தொடர்பு: 0774839036

## தசாக-கிருஹயக்ஞ அழைப்பு



கடந்த 26.08.2010 வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

### ஸ்ரீமதி சத்தியபாமா அம்மா சோமசுந்தரக் குருக்கள்

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக் கிரியைகள் முருகமூர்த்தி வீதி, சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

| | |
|---|---|
| தசாகம்- | 04.09.2010 சனிக்கிழமை மு.ப. 10 மணி |
| ஏகோதிஷ்டம் மாசியம்- | 05.09.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி |
| சபிண்டீகரணம்- | 06.09.2010 திங்கட்கிழமை மு.ப. 10 மணி |
| கிருஹயக்ஞம்- | 07.09.2010 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணி |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி 07.09.2010 அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவஸ்ரீ சிவசோமசுந்தரக்குருக்கள் (கணவர்),
பிள்ளைகள்: சோ.பாலச்சந்திரக்குருக்கள்,
சோ.ஜெயலக்ஷ்மி அம்மா,
நந்தினிதேவி கெங்காதரக் குருக்கள்,
சோ. கேதீஸ்வர சர்மா.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

(சி/570561)

## BRITISH COUNCIL IELTS

அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

யாழ் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்...!

இப்பொழுது **BBS** ஆனது **British Council** இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது

Academic, General
IELTS பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் யாழ்குடாநாட்டு மாணவர்கள், BBS நல்லூர் வளாகத்திற்கு நேரில் வருகை தந்து, பரீட்சைக்கட்டணத்தைக்கட்டி பதிவு செய்யலாம்..

### BBS இல் ஆங்கில வகுப்புக்கள்

- Certificate in English
- Diploma in English
- Advanced Diploma in English
- IELTS

- O/L, A/L கற்ற மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.
- தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
- வசதிக்கேற்ப நேர அட்டவணை.
- பரீட்சைக்குப் பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடுகள்.
- ஒலிக்கருவி பேச்சுத்திறன் பயிற்சிகள்.
- பரீட்சை வழிநடத்தல் வகுப்புக்கள்.
- வாரஇறுதிநாட்கள் மற்றும் வார நாட்களில் வகுப்புக்கள்.
- இலக்கண வகுப்புக்கள்
- பேச்சுத்திறன் பயிற்சிகள்.
- தமிழ் மொழியில் விளக்கங்கள்.
- விசேட செயற்திறன் பயிற்சிகள்.

## British Business School — பாலர் பாடசாலை

சர்வதேச தரத்தில், ஆங்கிலத்துடன் தமிழிலும்

8th Anniversary

| Play Group 2-3 Years | Montessori 3 - 4 Years | Pre-School 4 - 5 Years |
|---|---|---|

சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method

விசேட நிகழ்ச்சிகள்:
English Concert, Pre-School Graduation

அச்சுவேலியில், அரசினர் வைத்தியசாலை அருகே புதிய வளாகம் நல்லூர் தேர் (07.09.2010) அன்று ஆரம்பம்.

எல்லா வளாகங்களிலும் புதிய தவணைக்கு அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### BBS இன் 9 வளாகங்கள்

- நல்லூர்: 140, கோவில் வீதி, நல்லூர்.
- கோப்பாய்: பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி.
- நீர்வேலி: 1ம் கட்டை, இராச வீதி, நீர்வேலி.
- சாவகச்சேரி: சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அருகாமை.
- மானிப்பாய்-1: 252, ஆலடி சந்தி, யாழ் வீதி மானிப்பாய்.
- மானிப்பாய்-2: சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
- Lakshmi Cottage
- புலோலி: ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை.
- அச்சுவேலி: அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை.

# BRITISH BUSINESS SCHOOL

140, கோவில் வீதி, நல்லூர்.

Contact: 021 222 5796, 0773627055, 0776646357.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகுமா தாராக்குளம்? தப்பிப்பிழைக்குமா தொடர்மாடி?

யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்தி என்ற பெயரில் யாழ். குடாநாட்டில் இப்போது பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள், கட்டுமானப் பணிகள், புனரமைப்பு வேலைகள் மின்னல் வேகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன.

கடந்த 20 வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பின்தங்கியுள்ள யாழ்ப்பாணத்தை மீண்டும் கட்டியெழுப்புவதே இந்தப் பணிகளின் நோக்கம் என்று இதற்குக் காரணம் கற்பிக்கப்படுகின்றது. இதனையே ஒரு தகுந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி - போர்வையாகக் கொண்டு அதற்குப் பின்னால் பல்வேறு நாடகங்கள் அபிவிருத்தி என்ற பெயரில் அரங்கேற்றப்பட்டு வருவது பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மக்களும் அரசாங்கம் ஏதோ அக்கறையுடன் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கின்றது மௌனமாக இருந்து விடுகிறார்கள். அதையே அரசும் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

இவ்வாறு அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிபோகும் நிலைமைகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வன்னிப் பிரதேசத்திலும், கிழக்கு மாகாணத்திலும் நன்கு திட்டமிட்ட முறையில் கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டு வருவது கண்டு பலரும் அச்சம் வெளியிட்டு வருகின் றனர். தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி அதன் மூலம் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் படிப்படியாகக் கால் பதித்து, அவர்களை தனது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குத் தற்போதுள்ள அரச தலைமை பல தந்திரோபாய நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறது. காதும் காதும் வைத்தால் போல் ஆரவாரம், ஆடம்பரம் எதுவுமின்றி அரசின் அபிவிருத்தி என்ற பெயரில் இந்தத்திட்டங்கள் 'நைஸாக' நடைபெற்று வருகின்றமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அண்மையில் நாடாளுமன்றத்தில் புட்டுக்காட்டியிருக்கிறார்கள்.

அரச அதிகாரிகளுக்கான வதிவிடங்கள், இராணுவ முகாம்கள் என்பவற்றை நிறுவுவது என்ற பெயரில் தமிழர்களின் நிலங்களை அபகரித்து அங்கு குடியேற்றங்களை நிறுவி அவற்றில் இராணுவத்தில் பணியாற்றுபவர்களின் குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கான திட்டம் ஒன்று வன்னியில் குறிப்பிட்ட பகுதியொன்றில் செயற்படுத்தப்பட்டு வருவதாக அண்மையில் சிங்கள நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது. அந்தக் குடியேற்றங்களை நிறுவுவதற்காக அரசினால் தென்னிலங்கையில் இருந்து அழைத்துவரப்பட்டிருந்த பணியாளர்களில் ஒருவரே சிங்கள ஊடகத்துக்கு அந்தத் தகவலை வழங்கியதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான தகவல் ஏற்கனவே வெளியாகியிருந்த போதும் - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் இது தொடர்பாகப் பிரஸ்தாபித்திருந்த போதும் சிங்கள ஊடகத்தில் வெளியான செய்தி அதனை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இது போன்ற நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்திலும் அங்கு பதவியிலிருக்கும் மாகாண சபை அதிகாரத் தரப்பின் அரவணைப்புடன் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து இப்போது ஆளையே கடிக்கும் அளவுக்கு அந்த நிலைமை சென்றிருக்கிறதோ என எண்ணத் தோன்றும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்திலும் இடம் பெறத் தொடங்கியிருப்பது குறித்து தொடர்ந்தும் மௌனம் காக்க முடியாதல்லவா? அபிவிருத்தி என்ற பதாகையைப் பிடித்துக் கொண்டு அதன் பின்னால் நின்று தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்படுவதை நாம் தொடர்ந்தும் கைகட்டி, வாய்பொத்திப் பார்த்துக்கொண்டிருப்பதா? சொல்ல வேண்டியதைச் சரியான நேரத்தில் தெளிவாகச் சொல்லாமல் இருப்பதும் தவறு என்பதே எமது எண்ணக்கரு. அதனடிப்படையில் சில விடயங்களை நாம் இங்கே சுட்டிக்காட்டுகிறோம்.

வீடமைப்பு அதிகார சபை அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அவரது விஜயத்தின் போது இடம்பெற்ற சில சம்பவங்கள் இப்போது சாடைமாடையாக வெளிச்சத்துக்கு வந்திருக் கின்றன. பின்தங்கிய நிலையில் - உரிய வசதிகள் இல்லாமல் - கூலி வேலைகளுக்குச் சென்று பிழைக்கும் அன்றாடங் காய்ச்சிகளின் வயிற்றில் அடிக்கும் சில காரியங்கள் அமைச்சரின் விஜயத்தின் போது இடம் பெற்றிருக்கின்றன. மிக மிகப் பின்தங்கிய குடியிருப்புப் பகுதியாக உள்ள தாராக்குளம் குடியிருப்புத் தொகுதியில் உள்ள குடும்பங்களுக்கு நாவற்குழிப் பகுதியில் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதற்கான சான்றிதழையும் அமைச்சர் வீசவன்ச அந்த மக்களுக்கு வழங்கியுள்ளார். அத்துடன் குருநகர் தொடர்மாடியில் குடியிருப்பவர்களையும் நாவற்குழி செல்வதற்குத் தயாராகுமாறு அமைச்சர் மிரட்டும் தொனியில் கூறியிருக்கிறார். இந்த இரு சம்பவங்களும் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. மிகவும் பின்தங்கிப்போயுள்ள இந்த மக்களின் பரிதாப நிலையைச் சாதகமாக்கி அவர்களை அங்கிருந்து அகற்றிவிட்டு அந்த இரு இடங்களிலும் வேறு ஏதோ திட்டங்கள் செயற்படுத்தப்படவிருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் இப்போது எழுந்துள்ளன.

யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி இந்தக் குற்றச்சாட்டைப் பகிரங்கமாக முன்வைத்திருக்கிறார்.

1980களின் ஆரம்பத்தில் ஜனாதிபதி பிரேமதாஸ வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சராகப் பதவி வகித்த போது யாழ்ப்பாணத் தொகுதியின் உறுப்பினராயிருந்த வெ.யோகேஸ்வரனின் முயற்சியினால் உருவாக்கப்பட்டதே தாராக்குளம் குடியேற்றத்திட்டமாகும். யோகேஸ்வரன், அவ்விடத்தில் சிறு குடிசைகளிலிருந்த பொது மக்களுக்கு அளித்த உறுதிமொழியின் பெயரால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த 35 பேருக்கும், யாழ். கரையோரப்பகுதியைச் சேர்ந்த 2 பேருக்கும் 2 பெரும்பான்மைச் சிங்களச் சகோதரர்கள் உட்பட 39 பேருக்கு யோகேஸ்வரனின் சிபார்சின்பேரில் இது வழங்கப்பட்டது. யுத்தகாலத்தில் குடியேற்ற வாசிகள் அனைவரும் வெளியேற்றப்பட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இது கொண்டுவரப்பட்டது. ஆனாலும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரபட்ட நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் அவை மீண்டும் குடியிருப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சரான விமல் வீரவன்ச 31.08.2010 அன்று யாழ் வந்தபோது அங்கு குடியிருப்பவர்களை காணிகளுக்கான உறுதி கொடுப்பது என அழைத்து இவ் வீட்டுத்திட்டத்தை விட்டு வெளியேறுமாறு கூறியிருக்கிறார். இதற்குப் பதிலாக நாவற்குழியில் வீடு கொடுப்பதற்கான சான்றிதழ்களும் அவரால் வழங்கப்பட்டன. அத்துடன் இவர்களை மிரட்டும் தொனியில் 'நீங்கள் இதைவிட்டு வெளியேற, மறுத்தால் நீங்கள்தான் கட்டடத்தைத் திருத்த வேண்டியேற்படும்' எனவும் அவர் கூறியுள்ளார். தற்போது நம்பிக்கெட்ட கையறு நிலையில் இக்குடியிருப்பாளர்கள் நடுவீதியில் நிற்கின்றார்கள். குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பாளர்களைச் சந்தித்த அமைச்சர் வீரவன்ச அவர்களையும் நாவற்குளிக்குப் போகத்தயாராக இருக்குமாறு திருவாய் மலர்ந்திருக்கின்றார் என்று குற்றஞ்சாட்டியுள்ள்ளார் மாநகரசபை உறுப்பினர் பரஞ்சோதி.

ஆனால் இவ்விடங்களில் புதிய குடியிருப்பொன்று பல மாடிகளைக் கொண்டதாக அமைக்கத் திரை மறைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அரச ஊழியர்களின் குடியிருப்பு என்ற போர்வையில் அது அமைக்கப்படவிருப்பதாகவும், இதில் வேறு யாரையோ குடியிருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் நம்பகமாக அறிகின்றேன் என அவர் தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளார்.

அவரது குற்றச்சாட்டு நியாயமானதாகவே எமக்குப் படுகிறது. பாவம் அந்த மக்கள். அனைவரும் அனைத்து வகையிலும் பின்தங்கியவர்கள். சொந்த வீடுகளோ, காணிகளோ இல்லாத அன்றாடங்காய்ச்சிகள். அவர்களது பரிதாப நிலை தெரிந்து கொண்டும் நடுவீதியில் அவர்களை விட்டு வேடிக்கை பார்ப்பது நியாயமானதா? மனச்சாட்சிக்கு சரியானதா? ஏழை மக்களின் வாழ்க்கையில் அரசியல் லாபம் தேட முனைவது சரியாகப் படுகிறதா? இவற்றுக்கு அப்பால் தமிழ் மக்களுடைய பூர்வீக இடங்களில் வேறு யாரையோ குடியிருத்த முனைவது மீண்டும் ஒரு இனரீதியான நெருக்குதல்களை அதிகரிக்கவே வழி வகுக்கும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் இது வரை உணர்ந்து கொள்ளாதது ஏன் என்பது தான் எமக்குப் புரியவில்லை. அவர்கள் உணர்ந்து கொள்ளவிட்டாலும் அரசில் அங்கம் வகிக்கும் இங்குள்ள தமிழ்அரசியல் தலைமைகளாவது அதனைத் தெளிவாகக் கூறி தடுத்து நிறுத்தலாம் அல்லவா? அவர்களும் அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருப்பது எமது சொத்துக்கள் தொடர்ந்தும் சூறையாடப்படுவதை ஊக்குவிப்பதாகவே அமையும் என்பதைப் புரிந்து கொண்டால் சரி.

எனவே நிர்க்கதியான இம்மக்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடிதம் திரும்பப் பெறப்பட வேண்டும். வீடற்ற அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு அவ்வீடுகளைத் திருத்தி அவர்களுக்கே வழங்க வேண்டும். கருணையுடன் இப்பிரச்சினை அணுகப்பட வேண்டும். இதுவே அவர்களுக்கு நாம் செய்யத்தக்க ஆறுதலாகும். அத்துடன் தமிழ் மக்களின் நிலங்கள், சொத்துக்கள் பாதுகாக்கப்படும். அதனை உரிய தரப்பினர் காலம்தாழ்த்தாது செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

- அதிரன் -

**யாழ்ப்பாண மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்**

### வீட்டு உரிமைப்பத்திரம் கையளித்தல்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்

மேன்மை தங்கிய சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடைய

**"மகிந்த சிந்தனை"** எதிர்கால நோக்கிற்கிணங்க

தேசிய மக்கள் குடியிருப்பு அபிவிருத்தியின் கீழ்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

நிர்மானதுறை பொறியியல்சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர்

**கௌரவ விமல் வீரவங்ஸ** அவர்களின் வழிகாட்டலின் கீழ்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால்

**"வடக்கின் வசந்தம்"** வேலைதிட்டத்தின் கீழ்

நடைமுறைப்படுத்தப்படும் ஜனசெவன வீட்டுமானிய வேலைதிட்டத்தினுள்

"நாவற்குளி"

வீட்டத்திட்டத்தின் வீட்டுரிமையாளரில்

திரு/திருமதி/செல்வி........................................................................ஆகிய

நீங்களும் ஒருவராக

தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை மகிழ்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஜயந்த சமரவீர**

**தலைவர்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,

2010 ஆகஸ்ட் 31

நிர்மானதுறை பொறியியல்சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்திக்கும் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கும் இடையில் 83/1 இலக்க வீடு நான்கு படுக்கை அறைகளுடன், சகல வசதிகளுடனும் கொண்ட வீடு வாடகைக்குக் கொடுக்கத் தயாராக உள்ளது.

தொடர்பு:- 011 271 5130, 077 977 5017

## வேலையாள்கள் தேவை

பாட்டா விற்பனை நிலையத்துக்கு

* காசாளராகவும், கணக்காளராகவும் ஒருவர் தேவை. (ஓய்வூதியர்கள் விரும்பத்தக்கது)
* விற்பனையாளராகவும், சாரதியாகவும் ஒருவர் தேவை.

தொடர்பு:- 077 661 5973, 021 222 5211

## 20 ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழாவில்..

# ஏசியன் அக்கடமி

கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**தரம் 01 முதல் A/L வரை வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன**

20 ஆண்டுகளாக மாணவர்களது கல்வி முன்னேற்றத்தில் பாரிய பங்களிப்புச் செய்கின்ற ஏசியன் அக்கடமியின் நிர்வாக இயக்குநர் திரு. ஷங்கர்வாமன் அவர்களையும் உரிமையாளர் கே.எஸ்.பாபு அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களோடு தோளோடு தோள்நின்று உழைக்கின்ற ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள்.

விளம்பர அனுசரணை:

✻ ஸ்ரீவராகி அம்பாள் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்.
ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டி, கொக்குவில்.
உரிமையாளர்கள்:
செல்வரத்தினம், செல்வரகீபன், செல்வரஜீவன்.

✻ நந்தினி பேக்கரி
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(102952)

## அதிபர் இடமாற்றம்

சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபராக திருமதி ச.தர்மகுலசிங்கம் உடனடியாகச் செயற்படும் வண்ணம் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் சி.பொன்னம்பலத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே வித்தியாலயத்தில் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றுபவரை பொருத்தமான பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றம்செய்யுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.குறித்த கடமை நிறைவேற்று அதிபரை இடமாற்றல் செய்யக்கோரி வித்தியாலய பெற்றோரும், மாணவர்களும் பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டஞ் செய்தமை குறிப்பிடத்தக்கது. (த-207)

## சுற்றுலா பயணி காயம்

ஏ-9 வீதியில் இருந்த மேடு பள்ளம் சுற்றுலாப் பயணியின் தோள் எலும்பை உடைத்தது.

பேருந்தின் பின் ஆசனத்தில் பயணித்த இந்த இளைஞர் மேடு பள்ளங்களில் ஏற்பட்ட குலுக்கலில்உயர எழுந்து பஸ்ஸினுள் வீழ்ந்ததில் தோள் எலும்பு உடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ராஜகிரியவைச் சேர்ந்த சபீன் காஹித்த (வயது-19) என்னும் இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (த-207)

## எச்சரிக்கை
## போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

எமது நிறுவனத்தின் வியாபாரக்குறி KEN மற்றும் KENT இலச்சினையை சட்ட விரோதமாக உபயோகிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக எமது வாடிக்கையாளர்கள் மிகவும் கவனத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம். அது மட்டுமன்றி போலிகளை வாடிக்கையாளர்கள் இனங்கண்டால் உடனடியாக கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

KEN மற்றும் KENT இலச்சினை
கென் டூல்ஸ் மற்றும் மெஷினரிஸ்
இன்டர் நெஷனல் (பிறைவேட்) லிமிடெட்
நிறுவனத்திற்கு தொடர்பு கொள்ளவும்

KEN TOOLS & MACHINERIES INTERNATIONAL (PVT) LTD
NO.281,LAYARDS BROADWAY ROAD,
COLOMBO - 14
TEL :011 4883934
FAX : 011 2438785

(சி/570352)

## மரண அறிவித்தல்

### அருளானந்தம் உலகேஸ்வரி



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கலைவாணி மில் வீதி, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட அருளானந்தம் உலகேஸ்வரி நேற்று (04.09.2010)சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லத்துரை அருளானந்தத்தின் அன்புத் துணைவியாரும் வேலுப்பிள்ளை-கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை -சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீ பத்மராசா (J.P), ஸ்ரீபத்மினி, ஸ்ரீரவீந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் யோகநிதி, தர்மராசா, ஜெயகௌரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் உமாபதி, விஜயலெட்சுமி (கனடா), காந்தமலர் (கனடா), நடனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வியாளம்மா, பரமானந்தம், தவானந்தம், புஸ்பலதா, தர்மலிங்கம்(கனடா), விநாயகரத்தினம் (கனடா), சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் தினேஷன், திவ்வியன், துவாரகன், பிரவீணா, கீர்த்தனா, லோஜிதா, மயூரன்(பிரான்ஸ்) கோமகன், குகன்யா, பிரணவன் (பிரான்ஸ்), காயத்திரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரகலாவின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:*
முதலாம் வட்டாரம், மண்டைதீவு.

*தற்போதைய முகவரி:*
கலைவாணி மில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(102955)

*தகவல்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## விற்பனைக்கு

யாழ்.நகரின் மையப்பகுதியில் கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி ஆகிய இடங்களில் கடைகளும் மற்றும் மின்சார நிலைய வீதியில் 2½ பரப்பு காணித்துண்டும், 05 பரப்புக் காணி இரு கடைகளுடன் 03 பரப்பு வெறுங்காணித் துண்டும், 2½ பரப்புக் காணித்துண்டும், கோயில் வீதியில் 06 பரப்புக் காணியில் அமைந்த வீடும் வளவும், அராலி அம்மன் கோயிலுக்கு அண்மையில் 160 பரப்புக் காணியும், அல்லைப்பிட்டி கடற்கரைக்கு அண்மையில் 40 பரப்புக் காணியும், கசூரினா பீச்சிற்கு அண்மையாக 60 பரப்புக் காணியும் மற்றும் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் 24 பரப்புக் காணியும், யாழ்.நகருக்கு அண்மையாக பருத்தித்துறை வீதியில் 05 பரப்புக் காணியும், மின்சார நிலைய வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் ஸ்ரான்லி வீதியில் 10 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: கனகசபை தர்மகுலசிங்கம்**

இல.175, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பழமுதிர்ச்சோலை,
காரைநகர்.

(102945)

பழமுதிர்ச்சோலை,
இல.187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

# HNB ஹற்றன் நஷனல் வங்கி

எங்கள் சேவையின் ஓர் அங்கமாக மக்களின் நன்மை கருதி உங்கள் பெறுமதிமிக்க உடைமைகளைப் பாதுகாப்பதற்கு எமது வங்கி பாதுகாப்பு பெட்டக வசதியை ஆரம்பித்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாணவத் தூரிகை


சி. அகல்யா, தரம் -9E,
யா/இந்து மகளிர் கல்லூரி.



த. தனுஷசன், தரம் -8B,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.




சி. லக்ஷனா, தரம் -7,
யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.


இ. கோகிலன், தரம் -7D,
யா/இந்துக் கல்லூரி.


ஜெ. முருகதாஸ், தரம் -4B,
யா/சென்பனடிக் றோ.க.த.க.பா சாலை.


ம. நிதர்சன், தரம் -7A,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


றோஜிகரன், தரம் -6D,
யா/சென்ஜோன்ஸ் பொஸ்கோ.


அ. ரகுராகுல், தரம் -5A,
யா/கோற்றாவத்தை அ.மி.த.க

## சொர்க்கத்தில் நரி



நரி ஒன்று தாகத்தால் தவித்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை என்ன செய்வது? தண்ணீரைத் தேடி அலைந்தது தூரத்தில் கிணறு ஒன்று இருப்பதைக் கண்டது. கிணற்றின் அருகே சென்றது. கிணற்றில் கயிற்றின் ஒரு முனையில் வாளி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. வாளி அதைக் கண்ட நரி வாளியில் தாவி ஏறி அமர்ந்தது. சட்டென கிணற்றுக்குள் சென்றது. நரி வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தது. தாகம் தணிந்த பின் மேலே பார்த்து எப்படி வெளியேறுவது என்று யோசிக்கத் தொடங்கியது. மேலேயிருந்து கயிற்றை இழுத்தால் தானே நாம் மேலே செல்ல முடியும். என்ன செய்வது? நேரம் ஆக ஆக நரிக்கு அச்சம் தோன்றியது. அந்த நேரம் பார்த்து கிணற்றின் அருகே ஓநாய் ஒன்று வந்தது. கிணற்றின் அருகே எட்டிப் பார்த்தது. அங்கு நரி இருப்பதைக் கண்டது. "அடடா! நரியா! உள்ளே என்ன செய்கிறாய்? என்று கேட்டது. நான் இப்போ சொர்க்கத்தில் இருக்கிறேன். என்ன அருமையான இடம் தெரியுமா? இங்கு மீன் கோழி, ஆடு எல்லாம் தருகிறார்கள் என்றது நரி. ஓநாய் சற்றும் யோசிக்காமல் கயிற்றின் மறு முனையில் கட்டப்பட்டிருந்த வாளிக்குள் குதித்தது. அந்த வாளி சரசர வென்று கிணற்றின் உள்ளே போயிற்று. அப்போ ஆசனித்திருந்த வாளி மேலே வரும் போது நரி மேலே வந்தது. நரி பாதி வழியில் ஓநாயைப் பார்த்தது. நான் இப்போ சொர்க்கத்திற்கு மேலான இடத்திற்கு போகிறேன் என்று கூறிக் கொண்டு மேலே சென்றது. மேலே வந்து சேர்ந்ததும் கிணற்றுச் சுவரின் மீது தாவிக் குதித்துத் தப்பியோடியது. பாவம் ஓநாய்.....! "ஒரு செயலை செய்வதற்கு முன் பலமுறை யோசிக்க வேண்டும்"

தர்சிஜா, தரம் 6

# சிறுவர் கதிர்

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 72

1. விமான விபத்துக்கான காரணத்தைக் கண்டறியும் கறுப்புப் பெட்டியை கண்டு பிடித்தவர் யார்?
2. உலகில் தட்டையான சமதளமான நாடு எது?
3. இந்தியாவின் தேசிய விளையாட்டு எது?
4. ஹங்கேரி, ரூமேனியா ஆகிய இரு நாடுகளினதும் தேசிய மலர் எது?
5. இலங்கையின் தற்போதைய கல்வி அமைச்சர் யார்?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 10.09.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா?
### 70 இற்கான சரியான விடைகள்

1. 10.5% - 11.5 %
2. தூய்மை
3. பார்லி
4. 14 சதுரங்கள்
5. லாமாய்யிச் பௌத்தம்

### பரிசுபெறுவோர் விவரம்

1. அ. பிரணவன், தரம் 8F,
யா/ இந்துக் கல்லூரி.

2. ஸ்ரீ. கஜபாலினி, தரம் 8C,
யா/ இந்து மகளிர் கல்லூரி.

இவ்வாரம் இருவர் மட்டுமே சரியான விடைகளை அனுப்பியவர்கள்.

## வீதி ஒழுங்கைப் பேணுதல்

பள்ளி செல்லும் சிறுவர்களே
பாதை ஒழுங்கைக் கற்றுடுவீர்
பாதையில் குறுக்கே ஓடாதீர்
பார்த்து ஓரமாய் சென்றிடுவீர்

விரைந்து செல்லும் வண்டிகள்
வீதியால் சென்றிடும் பார்த்திடுவீர்
வீதியைக் கடக்க வேண்டுமெனில்
வீதி ஒழுங்கைசக் கடைப்பிடிப்பீர்

ஓடும் பேருந்தில் ஏறாதீர்
ஓடும் போது இறங்காதீர்
வீணாய் விபத்தில் சிக்காதீர்
வீதி விபத்தை பெருக்காதீர்.


சி. பானுயான், தரம் 4B
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

## நாடுகளும் அவற்றின் சிறப்புக்களும்

- ★ நியூசிலாந்து - தெற்கேயுள்ள பிரித்தானியா
- ★ நோர்வே - நள்ளிரவுச் சூரிய உதய நாடு
- ★ ஜப்பான் - சூரியன் உதிக்கும் நாடு
- ★ எகிப்து - நைல்நதியின் கொடை
- ★ பின்லாந்து - ஆயிரம் வாவிகள் நாடு
- ★ திபெத் - உலகத்தின் கூரை
- ★ சுவிற்சர்லாந்து - ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்
- ★ பெல்ஜியம் - ஐரோப்பாவின் கால்பந்து
- ★ துருக்கி - ஐரோப்பாவின் நோயாளி
- ★ பலஸ்தீனம் - புனிதநாடு

த.தேனுஜன், தரம் 8, யா/ வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்.

## நீங்களும் எழுதலாம்

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................
..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# After A/L



# Your Next Move

**SPECIALIZED DEGREE FOUNDATION PROGRAMMES IN ICT & MANAGEMENT**

edexcel
advancing learning, changing lives
ACCREDITED

**IDM Diploma In ICT**

edexcel
advancing learning, changing lives
ACCREDITED

**IDM Diploma In Business Management**

DIPLOMA SRI LANKA'S NO. 1 PROGRAMMES

**EQUIVALENT TO THE 1ST SEMESTER OF A BRITISH DEGREE PROGRAMME**

The IDM Diploma in ICT / Business Management are the premier Edexcel Accredited Diploma programmes offered in Sri Lanka which is equal to the 1st semester of a 3 year ICT/ Management degree programme. Hence at successful completion of the programme students may apply for a Edexcel Certificate from Edexcel International (UK), by paying Forty Sterling Pounds (GBP40 ). Students may complete the Specialization of their choice to attain a certification leading to a Specialized IDM Diploma in (ICT / Business Management). This allows students to attain Two certifications in a single programme of study and proceed to the Semester 2 of the Degree Programmes.

## ICT Specializations –

- Software Development
- Computer Networks
- Hardware Eng.
- Multimedia Systems
- Web Technologies
- Electrical & Electronic Eng.

**IDM**
City Campus #3

Management Specializations – Business Management | Marketing | Finance | Human Resources

| Specialized Foundation Diploma in ICT / Business Management (6 Months) | Specialized Higher Diploma in ICT / Business Management (12 Months) | Specialized Degree in ICT / Business Management (12 Months) |
|---|---|---|

**Registrations Now On, At The Following Campuses,**

## Class Schedule:

| Batch I | Batch II | Batch III | Batch IV |
|---|---|---|---|
| 5th September | 10th September | 13th September | 18th September |
| 9.00 am I 3.00 pm | 9.00 am I 3.00 pm | 9.00 am I 3.00 pm | 9.00 am I 3.00 pm |
| Sunday | Friday | Monday | Saturday |

**IDM Affiliated University College - Jaffna**
#216, Navalar Road, Jaffna
Tel : +94 21 2 229 901

**IDM Affiliated University College - Chavakachcheri**
# 5 1 A, Kandy Road, Chavakachcheri
Tel : +94 21 2 270 270 | +94 21 7 200 600

**info@idmcc3.lk** **www.idmcc3.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீருக்கு சுயாட்சி வழங்க விரும்பும் இந்தியா

# ஈழத்தமிழரின் சுயாட்சிக் கோரிக்கையைப் பரிசீலிக்குமா?

## அறுபது வருட காலத் தமிழர் போராட்டத்தின் மையப் புள்ளி அதுவே

1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதியன்று மருதானையில் இருந்த அரசாங்க எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டில் கட்சியின் தலைவராக ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்ட தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களால் முன்மொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முதற் தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

''..........நாட்டின் ஒற்றுமைக்குப் பாதகமற்ற முறையில் இந்த அடிப்படைப் பிரச்சினைகளை நீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் தீர்ப்பதற்கு ஒரேவழி ஐக்கிய இலங்கை சமஷ்டியின் ஓர் அங்கமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சி அரசை நிறுவுவதே என்பதைத் தெளிவாகக் கண்டு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக அமைந்து, இந்நாட்டுத் தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ''சுயாட்சி'' என்ற இலக்கை அடைவதற்கு இடையறாது உழைக்க உறுதிபூண்ட தமிழ் பேசும் மக்களின் தேசிய நிறுவனமாக இயங்குவதென்று தீர்மானிக்கிறது.''

இத்தீர்மானத்தை முன்மொழிய முன்பு தலைமையுரையாற்றிய தந்தை செல்வநாயகம் அவர்கள் தமது உரையில் பின்வருமாறு கூறினார். ''யாம் கோருவதும் இதுதான். ஒரு சுயாட்சி தமிழ் மாகாணமும் ஒரு சுயாட்சி சிங்கள மாகாணமும் அமைத்து இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஷ்டி அரசு இலங்கையில் ஏற்பட வேண்டும்.

இதே மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொருளாதாரத் தீர்மானம் பின்வரும் கருத்தை வலியுறுத்தியது.

ஒன்றுபட்ட தமிழ் இனத்தை உருவாக்கி, அவர்களுக்கு ஒரு தாயகத்தையும் அத்தாயகத்தில் தம்மைத் தாம் ஆளும் உரிமையையும் நிலைநாட்டி அங்கு சுரண்டல் ஒழிந்த சோஷலிச பொருளாதார அமைப்பை ஏற்படுத்தி எல்லாத் தமிழ் பேசும் மக்களுக்கும் இன்பவாழ்வு வாழ வழிவகுப்பதே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் குறிக்கோள்.

இவற்றிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப நாளிலேயே சுயாட்சி, தமிழ் பேசும் இனம், தாயகம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என்பதும், அவையே தமிழ் பேசும் இனத்தின் அடிப்படைக் கோரிக்கைகளாகவும் 1985 திம்பு கோட்பாடாயினும் சரி, அதன் பின்னர் இன்றுவரையாயினும் சரி தமிழ் பேசும் மக்களின் அடிப்படை இலட்சியங்களாகவும், இலக்குகளாகவும் இருந்து வருகின்றன. இவற்றை அடைவதற்கான போராட்ட வடிவங்களும், வழிமுறைகளும் வேறுபட்டாலும் இந்த இலட்சியங்கள் மாறுபடாமலேயே இருக்கின்றமை தெளிவு. ஆகவே தமிழ் பேசும் மக்களின் அரசியல் வழிகாட்டியாகவும் இவையே இன்னும் உள்ளன என்பதும் தெளிவு.

1972ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதியன்று திருமலையில் கூடிய தமிழர் ஐக்கிய முன்னணி இந்தக் கொள்கை இலட்சியங்களில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் அவற்றை முன்னெடுப்பதிலேயே கவனம் செலுத்தியது.

சரியாக நான்கு வருடங்களுக்குப் பின்பு 14.05.1976இல் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் ''வட்டுக்கோட்டைத் தீர்மானம்'' கூட தமிழரசுக் கட்சியின் கொள்கையின் அடிப்படையில் எழுந்தவையே. சமஷ்டிக் கூட்டாட்சி தத்துவத்தை கொச்சைப்படுத்தி அதை பிரிவினை என முத்திரை குத்தி பரிசீலிக்கவே மறுத்த தென்னிலங்கை அரசுகளின் மோசமான இனத்துவேஷ அணுகுமுறை மற்றும் அடுக்கடுக்கான, அடுத்தடுத்தான இனவாத நடவடிக்கைகள் காரணமாக விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட தமிழினத்தின் தீர்மானமாகவே அது அமைந்தது.

இந்த நாட்டில் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பைப் பாதுகாக்க வேண்டுமாயின் ஒவ்வொரு தேசிய இனத்துக்குமுரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர இறைமையுள்ள, மதசார்பற்ற சோசலிச தமிழ் ஈழ அரசை உருவாக்குவதுதவிர்க்க முடியாதது என்பதே இத்தீர்மானத்தின் அடிநாதமாகும்.

இத்தீர்மானத்திலும் தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கோட்பாடான சுயநிர்ணய உரிமை உள்ளடக்கப்பட்டுள்ளமை கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

தமிழ் ஈழத்தின் சுயாட்சி, தன்னாட்சி, இணைப்பாட்சி, தனியாட்சியென்ற பரிமாணங்களில் சாத்வீக, ஜனநாயக வழிகளில் நடைபெற்ற போராட்டங்கள் வெற்றியளிக்காத நிலையிலேயே, காந்தி தத்துவம் தோல்வி கண்டதால் கையில் ஆயுதம் ஏந்தி நின்ற இனம் என்று கூறி ஆயுதப் போராட்டங்கள் உருவெடுத்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட சகல ஆயுதப்போராட்ட இயக்கங்க ளினதும் ஆரம்பகால அடிப்படைக்கொள்கை வட்டுக்கோட்டைத் தீர்மானமாகவே இருந்தது.

தனிநாடு என்ற கோட்பாட்டை, இலட்சியத்தை முன் வைத்தாலும் அரசியல் தலைமைகள் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வை ஒரு போதும் நிராகரிக்கவில்லை. 03.08.1978ஆம் திகதி தேசிய அரசுப் பேரவையில் அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உரையில் எமது தாயக மண்ணில் எம்மை நாமே ஆள விரும்புகிறோம். எமது பிரதேசத்தினுள் வேறு எவரும் குறுக்கிடுவதை நாம் விரும்பவில்லை என்று கூறினார்.

இவற்றுக்கு மேலாக ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒரு நியாயமான அரசியல் தீர்வை பரிசீலிப்பதற்குத் தயாராக இருந்தமையை வெளிப்படுத்தியே வந்துள்ளது.

27.11.2000ஆம் திகதிய மாவீரர்தின உரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

* எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்றுதான், தமது சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டும் என்பது தான்.
* நரம் சமாதானப் பேச்சுக்கோ அல்லது சமாதான வழியிலான அரசியல் தீர்வுக்கோ முட்டுக்கட்டை போடவில்லை என்பதை உலகிற்கு உணர்த்தி வருகின்றோம்.

27.11.2001ஆம் திகதிய மாவீரர்தின உரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

* தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யும் அரசியல் தீர்வுத் திட்டம் பற்றி சிங்கள அரசுடன் பேச்சுக்களில் பங்கு பற்றுவதற்கு எமது இயக்கம் தயாராகவே இருக்கிறது.

27.11.2005ஆம் திகதிய மாவீரர்தின உரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

* ஒரு குறுகிய கால இடைவெளிக்குள் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளைத் திருப்தி செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை புதிய அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

இதனடிப்படையிலே இலங்கையரசு - தமிழீழ விடுதலைப்புலிகள் ஒஸ்லோ பேச்சுவார்த்தையின் போது 05.12.2002ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையின்படி இடைக்கால சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி கட்டமைப்பு முறையிலான தீர்வு ஒன்றைக் காண இணக்கம் காணப்பட்டது. சமஷ்டி அமைப்பு முறைக் கோரிக்கையே இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால கோட்பாடும், இலட்சியமுமாகும்.

இதிலிருந்து தமிழரசுக் கட்சியின் கொள்ளைகளும், கோட்பாடுகளுமே ஜனநாயக அரசியல் தலைமைகளையும்,ஆயுதப் போராட்டத் தலைமைகளையும் குறிப்பாகத் தமிழீழ விடுதலைப்புலிகளையும் வழி நடத்தியமை தெளிவாகிறது.

ஜனநாயக அரசியல் தலைமைத்துவத்தை பொறுத்தவரையிலும்கூட, இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவர்களே தமிழின வழிகாட்டித் தலைவர்களாக இருந்து வந்துள்ளனர்.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி உருவாக்கத்திற்கு முன்னே இரண்டு தேர்தல்களில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகப் பின்வருவோர் இருந்ததுடன் அதன் பின்பு 1977இலும் தெரிவு செய்யப்பட்டனர்.

தந்தை செல்வநாயகம் - (1965, 1970),
அமரர் அ. அமிர்தலிங்கம் - (1965, .........,1977),
அமரர் வீ. தர்மலிங்கம் - (1965, 1970, 1977),
அமரர் வி. நவரத்தினம் - (1965, ..............),
பண்டிதர் கா.பொ. இரத்தினம் - (1965, 1970, 1977), அமரர் வி.என். நவரத்தினம் - (1965, 1970, 1977), அமரர் கே. துரைரத்தினம் - (1965, 1970, 1977),
அமரர் டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன்- (1965, ....... , .......), அமரர் எஸ். கதிரவேற்பிள்ளை - (1965, 1970, 1977), அமரர் சி. எக்ஸ்.மாட்டின் - (....... , 1970, .......),
அமரர் வெ. யோகேஸ்வரன் - (...... , ...... , 1977), அமரர் ரீ. இராசலிங்கம் - (...... , ....... , 1977),

இவற்றிலிருந்து தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்தின் பின்னர் 1977 தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் பதினொரு நாடாளுமன்ற அங்கத்தவர்களில் ஒன்பது பேர் இலங்கைத்தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பது வெளிப்படை, எனவே தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமை தமிழரசுக் கட்சி சார்ந்தவர்களிடமே இருந்துள்ளதும் வெளிப்படை.

சரி பிழைக்கப்பால், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் முக்கிய பங்காளிக் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிர சும் இருந்தபோதும்1977 தேர்தலிலே கட்சி என்ற வகையில் தமிழ்க் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகிக்கவில்லை என்பதும் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த வர்களான அமரர் எம். சிவசிதம்பரம், ரீ. சிவசிதம்பரம், ரீ. திருநாவுக்கரசு ஆகியோருடன் திரு. வீ.ஆனந்தசங்கரி, இராசா விஸ்வநாதன் போன்ற தலைவர்கள் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்தனர் என்பதும் யதார்த்தம்.

ஆகவே தமிழரசுக் கட்சியின் அங்கத்தவர்கள், ஆதரவாளர்களையும், தமிழ் மக்களையும் பொறுத்தவரைக்கும் தமிழரசுக்'கட்சியும்தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒன்றே என்ற நிலையே எப்போதும் இருந்துவந்தது. தமிழரசுக் கட்சியோ, அதன் கொள்கைகளோ ஒருபோதும் தளர்ந்திருக்கவில்லை; உறங்கியதும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்திற்குப் பின்பும் கூட தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. இரா. சம்பந்தன், அமரர் ஜோசப் பரராஜசிங்கம், திரு. மாவை. சோ. சேனாதிராஜா ஆகியோரே அதன் வழிகாட்டித் தலைவர்களாக இருந்ததும், இருப்பதும் கவனிக்கப்படவேண்டியவையே.

தந்தை செல்வநாயம் அவர்களால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு அமரர் அமிர்தலிங்கத்தின் தலைமையில் நீடித்த தமிழரசுக்கட்சி தமிழின விடுதலைக்காகக் கடந்த 60 ஆண்டுகாலம் நீடித்து, நிலைத்து நிற்கும் கொள்கைகளும், கோட்பாடுகளும், தலைமையும் கொண்டது. தொடர்ந்தும் அது வினைத்திறனுடனும் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைக்குரலாகவும் செயற்பட வேண்டும் என்பதே அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றக்கூடிய செயலாகும்.

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்பு எம்மினத்தின் தனித்துவம் கலை, கலாசார விழுமியப் பேணல்கள், பரம்பரை வாழ்நில உரிமைகள், குடியிருப்பு, குடிநிலங்கள், குடிசனப் பரம்பல் என்பன பாரியவகையில் கேள்விக் குறியாக்கப்பட்டு வரும் நிலையில் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளும் இலட்சியங்களும் வலுவுடையதாகவே உள்ளன.

காஷ்மீருக்கு சுயாட்சி வழங்க இந்திய அரசே இப்பொழுது முன் வந்துள்ள நிலையில் எமது சுயநிர்ணய அடிப்படை யிலான சுயாட்சிக் கோரிக்கை நீதியானதும் ஜனநாயக ரீதியானதும் ஆகும். இலங்கை, இந்திய அரசுகள் இதை மிகுந்த அக்கறை யுடன் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டிய தருணம் இது என்பதையும் குறிப்பிட்டாகவேண்டும். ***



சீ.வி.கே.சிவஞானம்
துணைச் செயலாளர், இலங்கைத் தமிழரசுக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம் யாழ்ப்பாணம்

micromax mobile

Nothing like Anything

G4 Gaming Phone
• Action Sensor Gaming Device
• 4 Free Action Controlled Games
• 2 MP Camera
G4 Camolution 15,500.00

X2i+ Long Battery
20 days standby battery
Inbuilt FM Radio
Expandable Memory upto 4GB
X2i+ 5,990.00

Q5fb facebook
• One Touch Launch Facebook
• QWERTY Keypad with Trackball
• Built in Yamaha Audio Amplifier
Q5fb 14,990.00



Q55 Bling For Ladies
• Navigation keys made with ENLIGHTENED™ - Swarovski Elements
• Compact Vanity Mirror
Q55 Bling 14,500.00

X360 MTV
Built in YAMAHA Digital Amplifier
3.5mm Jack
X360 12,390.00

X100
Color Display
Radio
Torch
X100 2,990.00

Infinity Lanka Holdings (Pvt) Ltd.
Micromax Mobile Business Partner in Sri Lanka

CELLCITY
National Distributor & Service Provider

இலங்கையில் முதல் முறையாக
1 வருட உத்தரவாதத்துடன்
போன் மற்றும் உதிரிப்பாகங்கள்

392, Galle Rd, Colombo 03. | www.infinitylankaholdings.com | info@infinitylankaholdings.com

THIRUMURUGAN COM NET
259, K.K.S Road, Jaffna | 021 222 7835 | thirumurugancomnet@gmail.com



இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

அனுமதி இலவசம்



Organized by pico Events

மேலும் விவரங்களுக்கு:-
அஞ்சலா – 0778036854

செப்டம்பர் 18–19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

JEF
Jaffna Education Fair 2010

BRITISH COUNCIL · Daily News · உதயன் · pico



Mega SAT
மெகா ஸ்கொலர்ஷிப் 2010

After O/L & A/L Join CSC-ASIAN

Win 75% SCHOLARSHIP

கொம்ப்யூட்டர் உயர்கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை

இலவச பரீட்சை
செப்டெம்பர் 12th ஞாயிறு

கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்
- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- பரீட்சையை தமிழ் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- O/L பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு வினாக்கள்
- 75% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்



O/L, A/L பரீட்சைகளின் பின் Why Pay More?

உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ICT துறையில் ஆர்வம் உள்ளவர்கள் அனைவரும் மெகா இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி, பெறும் மதிப்பெண்களுக்கமைய 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

Collect Your Free Admission Card, Today !

விரையுங்கள், வெற்றிபெறுங்கள் !

CSC-ASIAN COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி.
T.P : 021-2262399

230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267



பணியாளர்கள் வேண்டுகை

கணனி இயக்குனர்: Coreldraw, Photoshop
முகாமையாளர்: பெண் (கணனி அனுபவமுள்ளவர்)
புத்தகம் கட்டுனர்: ஆண் (கட்டர் அனுபவமுள்ளவர்)
கோட், றயோபி, டேவிட்ஷன் மெசின்
பழக விரும்புபவர்கள்: ஆண்கள்
(யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
தொலைபேசி: 021 3001940, 0777159730


வருடம் ஆறதனில் வணங்கிப் போற்றுவோம்

11 ★ 08 ★ 1930 புவியில்



11 ★ 09 ★ 2004 இறையுள்

திருமதி மனோரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

திதி: துவாதசி 05.09.2010

அ என உயிராய்!
ம் என மெய்யாய்!
மா என உயிர் மெய்யாய்!
ஐயிரண்டு திங்களாய்!
உயிரும் உடலும் தந்து அரவணைத்த அம்மா!
அம்பலத்தாடுவான் அடியிணைப் போற்றி
ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எபநேசர்,
செம்மணி வீதி, நல்லூர்.

கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இரண்டாவது தேனிலவு






"எங்களுக்குத் திருமணமாகி 10 ஆண்டுகள். வாழ்க்கையில் இன்று ஓர் புதுமலர்ச்சி தோன்றியுள்ளது. முன்னரைவிட அதிக உத்வேகம். எங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் இந்த இனிய மாற்றத்திற்கு வழிகோலியது ட்ரைபுல்..."

இயற்கை மூலிகைச் சாறுகள் அடங்கிய ட்ரைபுல், உங்கள் பாலுறவுச் செயற்பாட்டைஅதிகரிக்கும். உயர்ந்த தரநியமங்களுக்கேற்ப அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் ட்ரைபுல் மாத்திரைகளை எந்த வயதான ஆண்-பெண் இருபாலாரும் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் பாவிக்க முடியும். நாள் ஒன்றிற்கு 2 மாத்திரைகள் எடுப்பதன் மூலம் உங்கள் தாம்பத்திய உறவை உற்சாகமாகவும் பூரணமாகவும் அனுபவிக்க ட்ரைபுல் உதவும்.

சகல ∴பாமஸிகளிலும் கிடைக்கும்

Alaris touching aspirations

**Alaris Pharmaceuticals (Pty) Ltd.**
A Division of Zifam Pinnacle Pty Ltd., Sydney, Australia.
மின்னஞ்சல்: tribull.alaris@gmail.com
For further details contact 077 810 5 810 / 4 931 732

உடனடி அழைப்பு 077 3943113 / 077 0503123

# மூளைச் சுருக்கம்

## வயதானவர்களுக்கு ஏற்படும் சிக்கல்

வயதானவர்களின் இரத்தத்தில் ஆ12 அளவு குறைவாக இருந்தால் மூளையின் கலங்கள் சிதைவடைவதற்கும், மூளையின் அளவு சுருங்குவதற்கும் வாய்ப்புள்ளதாக அண்மையில் வெளியான ஒரு ஆய்வு கூறுகிறது.

மூளையின் கலங்கள் சிதைவதானது அறிவார்ந்த செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். முதுமையில் மறதி, அறளை பெயர்தல், அல்ஸீமர் நோய் போன்றவை நீங்கள் அறியாததல்ல. ஆயினும் இந்த ஆய்வின் முடிவுகளைக் கொண்டு விற்றமின் பி12 குறைபாடுதான் அறிவார்ந்த செயற்பாடுகள் மந்தமாவதற்குக் காரணம் என்று அறுதியாகச் சொல்ல முடியாதுள்ளது.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், குருதியில் கொலஸ்ரோல் அதிகரித்தல் ஆகியனவும் மூளை பாதிப்படைவதற்கு முக்கிய காரணங்களாகும்.

விற்றமின் பி12 குறைபாடுதான் காரணம் எனச் சொல்ல முடியாததற்கு ஆதாரம் இதுதான்.

107 வயதானவர்களைக் கொண்டு செய்யப்பட்ட ஆய்வு இது. அதன்போது ஆரம்பத்திலும் வருடாவருடமும் அவர்களுக்கு வழமையான மருத்துவப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, அவர்களின் அறிவார்ந்த செயற்பாடுகள் பற்றிய மதிப்பீடு, மூளையின் பொருண்மிய நிலையை அறிய பரிசோதனைகள் செய்யப்பட்டன.

அவர்கள் யாராவது ஒருவரது இரத்தத்திலும் பி12 ன் அளவானது வழமையாக எதிர்பார்க்கப்படும் சாதாரணத்தை விடக் குறைவாக இருக்கவில்லை. அதாவது அவர்களுக்கு இரத்தத்தில் பி12 குறைபாடு இருக்கவில்லை. ஆயினும் ஆய்வின் முடிவில், சாதாரண அளவாண்தின் குறைந்த நிலையில் பி12 இருந்தவர்களது மூளையின் பருமனானது சாதாரண அளவானதின் உயர்ந்த மட்டத்தில் இருந்தவர்களை விட 6 மடங்கு அதிகமாகக் குறைந்திருந்தது.

நாம் வழமையாக எதிர்பார்க்கும் அளவை விட அதிகமான செறிவில் இரத்த பி12 இருந்தால் முதுமையில் மூளை சுருங்குவது குறைவு என்பதாகும். எனவே எமது உணவில் பி12 அதிகமுள்ள உணவுகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது. முதியவர்களுக்கு இது மேலும் முக்கியமாகும். இறைச்சி, மீன், பால் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது அவசியம்.

தாவர உணவுகளில் விற்றமின் பி12 இல்லாததால் தாவர உணவு மட்டும் உண்போர் விற்றமின் பி12குறைபாட்டிற்கு ஆளாவதற்கான சாத்தியங்கள் அதிகம். பாலூட்டும் தாய்மார், பாலகர்கள், மற்றும் முதியவர்களுக்கு இவ்விற்றமின் குறைபாடு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகமாகும்.

பேரனீஸியஸ் அனிமியா (Pernicious anaemia) எனப்படும் ஒரு வகை இரத்தசோகை அதனால் ஏற்படும். நாக்குப் புண்படுதல், தோல் வெளிறல், பசியின்மை, அடிக்கடி ஏற்படும் வயிற்றோட்டம், மாதவிடாய் கோளாறுகள், நோயெதிர்ப்புச் சக்தி குறைதல் ஆகியன அதன் அறிகுறிகளாகும்.

அத்துடன் நரம்புகள் பாதிப்படைவதால் கால் கை விரல்களில் வலிப்பது போன்ற உணர்வு, கால்தசைகளில் வலி, தள்ளாட்டம், மாறாட்டம் போன்ற நரம்பு சார்ந்த அறிகுறிகளும் ஏற்படலாம்.

விற்றமின் குறைபாட்டை குணமாக்குவதற்கு விற்றமின் B12 ஊசியாகப் போடுவதே ஒரு வழி. ஆயினும் மூளை சுருங்குவதைத் தடுப்பதற்கு ஊசி தேவையில்லை. ஏனெனில் அவர்களுக்கு B12 குறைபாடு இருக்கவில்லை.

அத்துடன் அவ் ஆய்வானது அவர்களுக்கு ஊசி போடுவது பற்றியோ, மேலதிக B12 கொடுப்பதால் ஏதாவது நன்மை ஏற்படுமா என்பது பற்றியோ பரிசோதனை எதையும் செய்யவில்லை.

எனவே வயதானவர்கள் மேற் கூறிய உணவுவகைகளை சற்று அதிகமாக உண்டால் போதுமானது.



**NNO - இலங்கையில் சரும பராமரிப்பிற்கு முதல்தர மெருகூட்டும் நைற் ஒயில்**

நொரிஷிங் நைட் ஒயில் (போஷாக்கான இரவு எண்ணெய்) (NNO) என்பது விசேடமாக தயாரிக்கப்பட்ட சருமத்துக்கு ஈரலிப்பையும், போஷாக்கையும், பொலிவையும் இளமையான தோற்றத்தையும் வழங்கக்கூடிய ஜொஜோபா எண்ணெய் மற்றும் விற்றமின் நு அடங்கிய எண்ணெய் ஆகும். இது சருமத்திலுள்ள இயற்கை எண்ணெய்த் தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குவதுடன் 2 – 3 வாரங்களில் கண்களின் கீழ் பகுதியில் ஏற்படும் கரும் புள்ளிகளையும் அகற்றுகிறது.

- உலகெங்கிலும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது.
- தினமும் இரவில் முகம், கழுத்து, கைகள் ஆகியவற்றில் பூசவும்.

கண்களுக்கு கீழ் கருமை படர்வதையும் சரும வரட்சியையும் போக்குகிறது.

2-3 வாரங்களுக்குள் நீக்குகின்றது

**NNO வில் உள்ள விசேட அம்சங்கள் என்ன?**

- இது ஜொஜோபா எண்ணெய் கொண்டது, இதன் மூலம் சருமத்திலுள்ள இயற்கையான எண்ணெய்த்தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குகிறது.
- சருமத்துக்கு ஈரலிப்பை வழங்கி, சருமத்தை மேலும் வன்மையாக்குகிறது.
- கண்களின் கீழ் பகுதியில் தோன்றும் கரும் புள்ளிகள், கடுமையான கோடுகள் மற்றும் சுருக்கங்களை அகற்றுகிறது.
- இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியது, சுலபமாக பாவிக்கக் கூடியது.
- சுகாதாரமானது, குறிக்கப்பட்ட பாவனை, வசதியான பாவனை முறை.




அனுமதி பத்திரம் வழங்கியவர்
மெகா உயிரியல்விஞ்ஞானம் (அவுஸ்திரேலியா) பிரை லிமிட்டெட
தொலைபேசி: +94 11 4305366, +94 11 4366576, 077 [illegible]
மின்னஞ்சல்: mega-sl@megawecare.com | www.nnoforever.com

விலை: 570/- ரூ பெட்டி ஒன்றில் 30 ஆப்ளிகப்புகள் உள்ளன

MEGA We Care Human Wellness

நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்கட்களிலும் பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம் | A Baur & Co. Ltd. 1897ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமர்ந்தபடி வேலை பார்ப்பவர்களுக்கு!



பெரும்பாலான அலுவலகங்களில் பணி நேரம் முழுக்க ஒரு நாற்காலியிலேயே அமர்ந்திருந்து வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இதனால் தேவையான உடல் உழைப்பு இல்லாமல் போவதால் பதற்றம், முதுகு வலி, அஜீரணக் கோளாறு என பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

இவற்றைச் சரிச்செய்து கொள்ள இதோ சில எளிய வழிமுறைகள்.

✱ காலையில் அலுவலகத்துக்கு வந்து உங்கள் இடத்தில் அமர்ந்ததும், வேலையைத் தொடங்குவதற்கு முன் ஒரு நிமிடம் கண்களை மூடி அமர்ந்து மனதை ரிலாக்ஸ் செய்து கொள்ளுங்கள். அதன் பின்னர் வேலையை தொடங்கினால் புத்துணர்ச்சியை உணர்வதுடன், உங்களின் காலை நேரப் பதற்றமும் குறையும்.

✱ நீங்கள் உபயோகிக்கும் நாற்காலி உங்கள் உடல் வெப்பத்தை வெளியேற்றும் வகையில் துளைகள் உள்ளதாக இருக்க வேண்டும். அவ்வாறு துளைகள் இல்லாத குஷன் நாற்காலிகளை பயன்படுத்தினால், ஒரு டர்க்கி டவலை நான்காக மடித்துப் போட்டு அதன் மீது அமருங்கள். சில மணி நேரங்களில் உங்கள் உடலின் வெப்பம் அதில் இறங்கிய பின், அதன் மடிப்பை மாற்றிப் போட்டு அமருங்கள்.

✱ முதுகை வளைத்து, கூன் போட்டு உட்காராமல், நன்கு நிமிர்ந்து நாற்காலியில் முதுகு படும்படி உட்காருங்கள். கால்களை தரையில் வைப்பதைவிட, சற்று உயரமான ஒரு சப்போர்ட் கொடுத்து வைத்துக் கொண்டால், முதுகுவலி ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

✱ பல மணி நேரம் தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதால், தசைப்பிடிப்பு ஏற்படும். எனவே, அவ்வப்போது கை, கால்களை நீட்டி மடக்குவது, தலையை ரிலாக்ஸ்டாக நாலாபுறங்களிலும் சாய்த்துக் கொள்வது போன்ற செயல்களைச் செய்யுங்கள். கூடவே தண்ணீர் குடிப்பது, முகத்தைக் கழுவுவது, அருகில் சிறிது தூரம் நடந்து விட்டு வருவது என ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை உடலுக்கு ஏதாவது இயக்கம் கொடுங்கள். தினமும் உடற்பயிற்சி செய்யும் பழக்கம் இல்லை என்றால் குனிந்து கைகளால் பாதத்தை தொடுவது, இடுப்பில் கை வைத்துக் கொண்டு பின்புறம் வளைவது, இடது மற்றும் வலது புறம் சாய்வது போன்ற எளிமையான பயிற்சிகளை சில நிமிடங்கள் செய்யுங்கள். (முதுகு மற்றும் இடுப்பு வலி இருப்பவர்கள் மருத்துவரை ஆலோசித்த பிறகே இவற்றைச் செய்ய வேண்டும்). இதனால் உடலில் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். தசைப் பிடிப்பும் விலகும்.

✱ கணனி முன் வேலை செய்யும் போது எப்போதும் திரையையே பார்த்துக் கொண்டிருப்பதால் தான் கண்களில் எரிச்சல் ஏற்படும். இதைத் தவிர்க்க அயர்ச்சியாகத் தோன்றும் போதெல்லாம் சில விநாடிகள் கண்களை மூடி, அந்தக் கையின் மேல் மற்றொரு கையையும் வைத்து மூடிக் கொள்ளுங்கள். இதனால் கண்களுக்கு சில நொடிகள் அடர்ந்த இருட்டுக் கிடைக்கும். இது, அதிக ஒளியினால் ஏற்படும் சோர்வை விலக்கும். தவிர, கண்களை மேலும் கீழுமாக, முன்னும் பின்னுமாக சுழற்றுகிற எளிமையான பயிற்சிகளையும் செய்யலாம். ஆன்ட்டி ரேடியேஷன் கிளாஸ் -ஐ கம்ப்யூட்டர் திரையில் பொருத்துவதும் ஒளியினால் கண்கள் எரிச்சலடைவதைத் தடுக்கும்.

✱ உடல் உழைப்பு குறைவாக இருப்பதால் மாலை நேர சிற்றுண்டிக்கு எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது, அஜீரணக் கோளாறுகளை தடுக்கும். அதற்கு பதில் அவல், அவல் புட்டு, பழக்கலவை, சுண்டல், முளை கட்டிய பயிறு, பொரி, வேர்க்கடலை, பட்டாணி... போன்றவற்றை சாப்பிட்டால் எளிதில் ஜீரணமாவதுடன் அதில் உள்ள விற்றமின்கள் உடலுக்கும் அதிக சக்தி கொடுக்கும்.

✱ இரவு வெகு நேரம் தூங்காமல் கண் விழித்து வேலை செய்வதாலும் அஜீரணக் கோளாறு ஏற்படும். இதனால் மறுநாள் காலை மலம் கழிக்க முடியாமல் சிரமப்படுவார்கள். இதை தவிர்க்க, மாலை நேரத்தில் நாட்டு சர்க்கரை சேர்த்த அவல் அல்லது காய்ந்த திராட்சை அல்லது பப்பாளிப்பழம் சாப்பிடலாம். அத்துடன் நிறைய தண்ணீரும் குடிக்க வேண்டும். இதனால் அஜீரண கோளாறுகள் வெகுவாகக் குறைவதுடன் உடலின் வெப்பநிலையும் சீராக இருக்கும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொய்யாப் பழங்களின் மருத்துவக் குணங்கள்

நம் உடலுக்கு வேண்டிய நல்ல சத்துக்கள் தரும் பழங்களில் கொய்யாப்பழம் ஒன்று கொய்யா பச்சைப்பசேலென்ற நிறத்திலும் ஒரு சில வகைகள் மஞ்சள் நிறத்திலும் நல்ல நறுமணத்துடன் கிடைக்கும். கொய்யா அனைவருக்கும் பிடிக்கும்.

கொய்யா மரத்தின் வேர்,இலைகள், பட்டை, மற்றும் செங்காய் இவைகளில் மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. குடல், வயிறு பேதி போன்ற உபாதைகளுக்கு இவை பெரிதும் குணமளிக்கின்றன.

கொய்யா மரத்தின் இலைகளை அரைத்து காயம் புண் இவற்றின் மேல் தடவினால் அவை விரைவில் ஆறிவிடும். கொய்யா இலைகள் அல்சர் மற்றும் பல் வலிக்கும் உதவுகின்றன.


கொய்யாவுக்கு சர்க்கரையைக் குறைக்கும் தன்மையுண்டு. கொய்யாக் காய்களை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவு பெருமளவு குறைய வாய்ப்புகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

கொய்யா இலைகள் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் இருமல் தொண்டை மற்றும் இதய சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு தருகின்றன. கொய்யா மரத்தின் இளம் புதுக்கிளைகளின் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும்.


கொய்யா மரத்தின் கிளைகளிலிருந்து தயாரிக்கப்படும் மற்றொரு கஷாயம் குழந்தைகளுக்கு வரும் மாந்தம், இழுப்பு,காக்காய் வலிப்பு போன்ற வியாதிகளுக்கு கொடுக்கப்படுகிறது.

கொய்யா மரத்தின் சில பகுதிகளுடன் வேறு சில பொருட்களும் சேர்த்துத் தயாரிக்கப்படும் ஒரு கஷாயத்தை அருந்தினால் பிரசவத்திற்கு பின்பு வெளியாகும் கழிவுகளை வெளியேற்ற மிகவும் உதவுவதாக சித்த மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

கொய்யாக் காய்களை உணவுப் பொருளாக சமைத்து சாப்பிடுகிறார்கள் கொய்யாக் காய்களை சிறு சிறு துண்டுகளாக்கி மரக்கறி சாலட்டில் சேர்க்கிறார்கள். கொய்யாப் பழத்தின் கூழ், ஜெல்லி என பல்வேறு உணவு பொருட்களாக மாறி சந்தைகளில் உலா வருகின்றன.



கொய்யாப்பழத்தைப் புதப்படுத்தி ஐஸ்கிரீம், வேஃபர்ஸ், புட்டிங்ஸ், மில்க் ஷேக் இவற்றோடு கலந்தும் விற்கப்படுகிறது சில இடங்களில் கொய்யா ஜூஸ் போத்தல்களில் அடைத்தும் விற்கிறார்கள். உலர வைக்கப்பட்ட கொய்யாவை பவுடராக்கி, கேக், புட்டிங்ஸ், ஐஸ்கிரீம், ஜாம், சட்னி போன்ற உணவுப் பொருள்களில் கலந்து விற்கிறார்கள். ★


GATEWAY CFICT **The specialist in nurturing your IT potential**

◆ International Computer Driving Licence (ICDL) ◆ e-Citizen ◆ e-Type
◆ Advanced ICDL ◆ ICDL CAD ◆ ICDL WebStarter ◆ ICDL ImageMaker
◆ Diploma in ICT ◆ Microsoft Courses ◆ Certificate Courses
◆ Sri Lankan O/L ICT Programme ◆ Sri Lankan A/L ICT Programme
◆ London O/L (IGCSE ICT) ◆ London A/L (GCE Applied ICT)

GATEWAY Language Centre **English for Life**

◆ English for Young Learners ◆ English for Teenagers and School Leavers
◆ English for Adults and Professionals ◆ English Language Training with Computers
◆ Accelerated Skills Acquisition Progamme ◆ International English Language Testing System (IELTS)

University of Southampton · Microsoft Certified · edexcel International · ICAA · University of Cambridge International Examinations · University of Cambridge ESOL Examinations · London Metropolitan University · Pearson VUE · NCC education · Authorised Test Centre

GATEWAY Speech Drama

◆ London Academy of Music and Dramatic Art (LAMDA)
◆ Trinity College of London (TCL)
◆ Institute of Western Music and Speech (IWMS)
◆ Colombo Academy of Language Skills and Dramatic Art (CALSDA)

Gateway CFICT 011-2699327/ 2670670/ 2670631/ 2673858 • Gateway Language Centre 011-2696655/ 2674429/ 2699642 • Gateway School of Speech and Drama 011-2670632/ 2670633 • Ambalangoda 091-2258325 • Ampara 063-2223202 • Anuradhapura 025 2226200 • Bandarawela 057-2231452 • Batticaloa 065-2222961 • Colombo 04 011-2502100/ 2508618 • Gothami Rd, Borella. 011-2670632 / 2670633 • Rodney St, Borella. 011-2699327/ 2670670/ 2670631/ 2673858 • Chilaw 032-2222168 • Galle 091-2233677 • Gampaha 033-4670135/6 • Jaffna 021-5675555/ 2227967 • Kandy 081-2233587/ 4475372 • Kegalle 035-2221040 • Kurunegala 037-2228684/5 • Mannar 0777585920 • Matale 066-2222323 • Matara 041-2222083/ 5620922 • Monaragala 055-2277232 • Negombo 031-4870013/4 • Nugegoda 011-2816815/ 2829334 • Panadura 038-2240386/7 • Polonnaruwa 027-2226915 • Puttlam 032 2266920 • Ratnapura 045-2222555 • Tangalle 047-2242853 • Trincomalee 026-2220533 • Vavuniya 0777-585920 • Wattala 011-4015771/2

## தரமான கட்டிட பொருட்கள்

* சீமெந்துக்கல் * தூண்கள் * நிலக்கற்கள் * வேலைப்பாடுடனான தூண்கள்

மலிவு விலையில் பெற இன்றே விஜயம் செய்யுங்கள்.

தொகையாக எடுப்பின் விலைக் கழிவு உண்டு



மாருதி என்டர் பிரைசஸ்
19, லோட்டன் வீதி,
(புளியடிச் சந்தை ஒழுங்கை)
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.
தொ.பே: 0719218812, 0773269492.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# அறிவூட்டும் அன்பு வழி

அன்று வந்த அஞ்சல்களை மேலெழுந்த வாரியாகப் பார்த்துக் கொண்டு வந்த நான், அவற்று டன் ஒரு புதுவித அழைப்பிதழ் இருப்பதையுங் கண்டேன். அழகான முகப்புப்படம்; பொன்னெ ழுத்துக்கள்; அவற்றினுள்ளே 'பிறைலி' எழுத்துக்கள் என் ஆர்வம் கரைகடந்துவிட, யாருடைய மங்கள அழைப்பு என்பதை ஆவலுடன் வாசித்தேன். "திரு மா. சிற்றம் பலமும் பாரியா ரும், தமது ஏகபுத்திரன் திருநிறை செல்வன் இரமணன் B.A" ........தொடர்ந்து வாசிக்க விடவில்லை என் நினைவோட்டங்கள்.

வீட்டின் வெளியே வாடகை மோட்டார் வண்டியின் நேரங்கடந்து விட்டதைக் காட்டும் குழல் ஒலி காதைச் செவிடாக்க, வீட்டினுள் சிறுவன் ஒருவனின் அழுகைக் குரல் நெஞ்சைப் பிழிந்தெடுக் கிறது. ஒவ்வொரு வீடாகச் சென்று வழிகேட்டு வந்த நான், அவ்வீட்டின் முன்பும் நிற்கிறேன். பெரிய வர் ஒருவர் அழும் சிறுவனின் அப்பா போலும், வாடிய முகத்துடன் உள்ளும் வெளியுமாக நடைபயில்கிறார். சிறிது நேரச் சலசலப்பின் பின் அன்னையின் அரவணைப்புடன் வீட்டினுள்ளிருந்து வெளி வருகின்றான் ஓர் அழகிய சிறுவன். வயது பத்து இருக்கும். வயதுக்கேற்ற தோற்றம்; விரும்பாத இடத்துக்குச் செல்ல வேண்டுமே என்று பின்வாங் கும் கால்கள்; அழுதழுது வீங்கிய முகம்; ஏதோ ஒருவித உணர்வினால் அச்சிறிய முகத்தை உற்று நோக்குகிறேன். பல பார்வையற்ற முகங்களைப் பார்த்துப் பழகிவிட்ட என்மனம் துணுக்குறுகிறது. விழியில் ஒளியில்லாவிட்டாலும் அந்தப் பால்வடியும் அழகு முகத்தில் ஒரு தனிக்களை தோன்றி என்னைக் கவர்கிறது.

நான் தேடிவந்த வீடு இதுதானா? என்று எண்ணுகிறேன். தயங்கியவாறு பெரியவரை அணுகுகிறேன்.

"ஐயா! சிற்றம்பலம் என்பவரின் வீடு எது?" என்று கேட்கிறேன்.

"இதுதான். நான் தான் சிற்றம்பலம். என்ன விடயம்? நீங்கள் யார்?" என்று அமைதியின்றிப் பல கேள்விகளைக் கேட்கிறார்.

"மன்னிக்க வேண்டும். நீங்கள் அவசரமாக எங்கோ புறப்படும் நேரத்தில்"......... நான் சொல்லி முடிக்கு முன்பே.

"பரவாயில்லை, உள்ளே வாருங்கள். உட்காருங்கள். எங்கிருந்து வருகி றீர்கள்? இந்த ஊருக்குப் புதியவர் போலத் தெரிகி றது. நீங்கள் யார் என்று அறிந்து கொள்ளலாமா?"

அச்சிறுவனையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த நான்.

"இவன் உங்கள் மகனா?" என்று கேட்கிறேன். திடீரெனப் பெரியவரின் அடுக்கான கேள்விகள் என் ஞாபகத்துக்கு வரவே.

"ஐயா, நான் இவ்வூரைச் சேர்ந்த வனல்லன். என் சேவை நிமித் தம் இங்கு வந்துள்ளேன். உங்கள் விலாசத்தைக் கண் வைத்தியர் ஒருவரிடமிருந்து பெற்றேன். நான் ஒரு விசேட ஆசிரியன் . உங்கள் மகனுடன் சிறிது கதைக் கட்டுமா?" என்று கேட்டவாறே பெரிய வரின் அனுமதி கிடைக்கும் முன் காந்தத்தால் கவரப்பட்ட இரும்பென அச் சிறுவனருகிற் செல்கிறேன். ஆதரவுடன் அவனது தோள்களைப் பற்றி,

"தம்பி, அழவேண்டாம். கெட்டிக்காரனில்லையா, கண்ணைத்துடையும்" என்கி றேன். விம்மல் சிறிது அடங்கக் கண்க ளையும் துடைத்துக் கொள் கிறான். அவனை அன்புடன் அணைத்தவாறே ஆசனத்தில் அமர்கிறேன். புதியவர்களுடன் பழக விரும்பாதவன் இவருடன் சேர்ந்துவிட்டானே என்ற ஆச்சரியம் தோன்ற என்னைப் பார்க்கின் றனர் பெற்றோர். பெற்றோரை விட்டுப் பிரிந்து செல்வதைத் தடுத்து, அன்புவழி காட்ட வந்த அருளா ளன் என்று என்னை எண்ணி விட்டான் போலும்; அணைந்து கொண்டான்.

"உமது பெயரென்ன தம்பி?" என்று கேட்டு அவனது முதுகை வருடு கிறேன்.

"இரமணன்"

"அழகான பெயர். அப்பாவின் பெயர் தெரியுமா?"

'சிற்றம்பலம்"

நான் கேட்காமலே தாயாரின் பெயர் கண்ணம்மா என்றும் கூறுகிறான்.

"இரமணன், நீர் மிகவும் கெட்டிக்காரன். உமது...." நான் கேட்டு முடிக்கவில்லை. காத்துக் காத்துப் பொறுமை யிழந்த மோட்டார் வண்டிக்காரன் குழலை அழுத்தி அமுக்குகிறான். அச்சத்தங் கேட்ட இரமணன் விம்மத் தொடங்குகிறான். அவன் அழுவதைக் கண்ட தாயாரின் கண்களும் கலங்கு கின்றன. நான் பெரியவரை நோக்குகிறேன். என் பர்ர்வையின் பொருளை அறிந்தோ அல்லது மகனின் பொருமலை ஆற்றாதோ, வண்டிக் காரனை ஒரு மணித்தியாலம் தாமதித்து வரும்படி கூறி அனுப்புகிறார். மோட்டார் வண்டி செல்லும் ஒலியை அறிந்து கொண்ட இரமணனின் முகம் மழை மூட்டம் கலைந்த ஆதவன் போல் பிரகாசிக்கின்றது.

"அம்மா கார் போய்விட்டதல்லவா?

(18 ஆம் பக்கம் பார்க்க)



மஹரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விழிப்புல வலுவிழந்தவர்களுக்கான விசேட பயிற்சி பெற்ற செல்வி அன்னட்சுமி சின்னத்தம்பி விழிப்புல வலுவிழந்தோரின் வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். "வாழ்வகம்" நிறுவனத்தை ஆரம்பித்து விழிப்புல வலுவிழந்த பலரை வாழ்வில் உயர்வு பெற வைத்தவர். தாம் அமரராகும் வரை அந் நிறுவனத்தின் தலைவராகச் செயற்பட்டவர். அன்னாரது நினைவு தினம் செப்ரெம்பர் 11 ஆம் திகதியாகும். இவரது சிறுகதைகள் அதிக எண்ணிக்கையில் வெளியாகாவிடினும் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி வெளியீடான 'கலைஒளி' சஞ்சிகையில் 1971ஆம் ஆண்டில் வெளியான இவரது **'அறிவூட்டும் அன்பு வழி'** என்ற சிறுகதை இங்கு பிரசுரமாகிறது. சுன்னாகம் பொது நூலக நூலகர் க. சௌந்தர ராஜன் இக் கதைப் பிரதியைத் தேடியெடுத்து எமக்கு வழங்கி உதவியுள்ளார்.

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 164

# இராமாவதாரத்தில் அனுமனும் கிருஷ்ணாவதாரத்தில் வீமனும்

இலக்கியக் காட்சி 55

இராவணனால் கவர்ந்து செல்லப்பெற்ற சீதை, இலங்கையில் எங்கே இருக்கிறாள் என்பதைத் தேடிக் கண்டுபிடித்துச் சொன்னதிலிருந்து இராமனுக்கு பக்திபூர்வமாகப் பணிவிடை செய்து புகழ் பெற்ற சொல்லின் செல்வனான அனுமனும், கிருஷ்ண பரமாத்மாவின் நட்பும் ஆசியும் துணையாக, துரியோதனன் முதலிய தீயவர்களை அழித்த பாண்டவர்களில் ஒருவனான வீமனும் வாயுதே வனின் புத்திரர்களே.

ஆயினும், அண்ணனும் தம்பியுமான இவர்கள், ஒருவரை ஒருவர் அறிந்து கொண்ட விதம் மிகவும் விநோதமானது.

வஞ்சகச் சூதாட்டத்தில் வென்று பாண்டவர் களைப் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசமும் ஒரு வருடம் அஞ்ஞாத [ மறைந்து ]வாசமும் முடித்து வந்தால், இராச்சியத்தில் பாதி தருவேன் என்று துரியோ தனன் கூறிப் பாண்டவர்களை அனுப்பி விட்டான்.

இவ்வாறு பதின்மூன்று ஆண்டுகள் முடித்து வந்தாலும் பாண்டவருக்குப் பங்கு தரமாட்டான் என்பதைப் புரிந்து கொண்ட பாண்டவர்கள், தவஞ் செய்து திவ்ய அஸ்திரங்கள் பெற்றுவரும்படி அர்ச்சு னனை இந்திரசீல மலைக்கு அனுப்பினார்கள்.

அர்ச்சுனன் கடுந்தவம் மேற்கொண்டான். ஒரு நாள் இந்திர பிரத்தியட்சமாக அவன் முன் தோன்றி சிவபெருமானைக் குறித்து தவம் செய்து வேண்டும் வரங்களைப் பெறுமாறு கூறி மறைந்தான். எனவே அர்ச்சுனன் சிவபெருமானைத் தியானித்துக் கடுந் தவம் செய்தான். சிவபெருமான் அவனது தவத்திற்காக அவன் முன் தோன்றி பாசுபதம் என்னும் திவ்ய அஸ்திரத்தை தந்தருளி மறைந்தார்.

பாண்டவர்கள் வனவாசம் மேற்கொண்டு வந்த வேளையில் ஒரு சமயம் பாஞ்சாலியின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு குறிப்பிட்டதொரு மலரைப் பறித்து வருவதற்காக வீமன் அம்மலரைத் தேடிப் புறப்பட்டுப் போனான்.

போகும் வழியில் ஒரு வானரம் பாதையை மூடிப் படுத்திருந்தது. சற்றும் எதிர்பாராது அந்த மிருகத்தைக் கண்டதனால் வீமன் பயந்து ஓலமிட்டான். அதனால் குழப்ப மடைந்த குரங்கு, 'நீ பகுத்தறிவு உள்ள மனிதனாயிருந்தும் என்னைக் கண்டு ஏன் இப்படி அலறு கிறாய்?" என்று கேட்டது.

"அது சரி நீ ஏன் பாதையை மூடி இப்படிக் கிடக்கிறாய்? வழியை விடு. நான் அவசரமாகப் போகவேண்டும்" என்று வீமன் சற்றுக் கோபமாகக் கேட்டான்.

"ஏ! மனிதா! நீ இதற்குமேல் போகமுடியாது. வேண்டுமானால் பசிக்குப் பழங்களைப் பறித்துத் தின்றுவிட்டுத் திரும்பிப் போவாய்" என்று குரங்கு மிடுக்காகப் பதில் கூறியது.

வீமனும் பதிலுக்கு 'ஏ வானரமே! நான் ஓர் அவசர அலுவல் காரணமாகப் போய்க்கொண்டிருக்கிறேன். தயவு செய்து வழியை விடு" என்று மறுபடியும் கேட்டான்.

"அப்படியானால் நான் களைப்பினாலும் உடல் நலமின்மையாலும் படுத்திருக்கிறேன். விரும்பினால் என்னைத் தாவிக்குதித்துப் போகலாம்" என்றது வானரம்.

"நீ வயதில் மூத்தவன் போலிருக்கிறாய். முதியோரைத் தாண்டிப் போவது மரியாதை இல்லை. இளையோரானால் ஆஞ்சநேயர் ஆழியைக் கடந்து சீதையைத் தேட இலங்கைக் குச் சென்றது போலப் பாய்ந்து போய்விடுவேன்" என்றான் வீமன். அதற்கு வானரம், "நரசிரேஷ்டனே! நீ குறிப்பிடும் அந்த அனுமன் யார்? அவனைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகக் கூறு பார்க்கலாம்" என்று ஆவலோடு கேட்டது. "ஆம்; முன்னர் இராமரும் சீதையும் இலக்குமண னோடு சென்று வனவாசஞ் செய்தபோது இராவணன் சீதையைக் கவர்ந்து சென்று இலங்கையில் சிறை வைத்திருந்தான். நூறு யோசனை தூரமுள்ள கடலைத்தாண்டி இலங் கைக்குச் சென்றவன் அந்த ஆஞ்சநேயர். அவன் எனக்கு அண்ணன். பலத்தி லும் அந்த அண்ணனும் நானும் சமனாயிருப்போம். இப்போது நான் அவசரமாகப் போக வேண்டும் பாதையை விடு. இன்றேல் உன்னைப் பந்தாடிவிடுவேன். நான் வாயு குமாரன். என்பெயர் வீமன்" என்றான் வீமன்.

"நல்லது உன் பேச்சில் இருந்து நீ பெரிய வீரன் போலத் தெரிகின்றது. அதேநேரம், என்னைத் தாண்டுவது அழகில்லை என்றுஞ்சொல்கிறாய். அப்படியானால் எனது வாலைச் சற்று நகர்த்திவிட்டு நீ போகலாம் என்று வானரம் சொன்னது.

உடனே வீமன், இது என்ன பெரிய வேலையா என்று எண்ணி வாலை நகர்த்தப் போய்,இயலாத காரியம் எனக் காண்கிறான். அவ்வானரத்தைப் பார்த்து "மன்னிக்க வேண்டும். நீங்கள் யார் என்று கூறுங்கள்? கந்தர்வரா, கிம்புருடரா அன்றித் தேவரா" என்று கேட்டான்.

என்னைத் தெரியவில்லையா? "நீ சொன்ன அண்ணன் நான் தான்! அனுமன்! சர்வலோக மூலாதா ரமான பிராண ஆகாரமான வாயுவின் மகன் ஆஞ்ச நேயன் நானே! என்று தன்னை வெளிப்படுத்திய அனுமன், மேலும் தொடர்ந்து, "தம்பி! இந்த இடம் மிகவும் ஆபத்தானது; மனிதர் போக முடியாது; நீ தேடி வந்த மலர் சௌகந்தி. அதோ தெரிகிறதே நீரோடையும் மடுவும், அங்குதான் அம் மலர் இருக்கிறது" என்று கூறினான்.

அப்போது வீமன் அனுமனை விழுந்து வணங்கினான். இருவரும் ஒருவரையொருவர் கட்டித்தழுவி உளம் நெகிழ்ந்தனர். பின்பு வீமன், "நீங்கள் கடலைத் தாண்டிய பொழுது எடுத்தபெரு வடிவத்தை இப்போது காட்ட முடியுமா? எனக்கு ஆசையாக இருக்கிறது" என்று கேட்டதும் அனுமன் சிரித்துக் கொண்டே தனது விஸ்வ ரூபத்தைக் காட்டினான். அதைக் கண்ட வீமன்



பரவசப்பட்டு நிற்கையில், " பகைவரைக் கண்டால் இந்த உருவம் இன்னும் பெரியதாகக் காட்டுவேன்" என்று கூறிப் பழைய உருவத்துக்கு மாறினான் அனுமன்.

பின்னர் வீமனிடம், "பாண்டவ வீரனே!குறிப்பிட்ட மலரைப் பிடுங்கிக் கொண்டு உன் இருப்பிடம் போவாய். தேவைப்படும் போது என்னை நினைத்துக்கொள். நான் உனக்கு உதவுவேன். போர்க்களத்தில் நீ சிம்ம நாதம் எழுப்பினால், எனது குரலும் அதில் சேர்ந்து ஒலிக்கும்! அப்போது பகைவர் நடுங்குவர். அத்துடன், அர்ச்சுனனது கொடியில் நான் என்றும் இருப்பேன். உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும்! எனது ஆசிகள் உங்களுக்கு!" என்று கூறியபொழுது.

"அஞ்சனை மைந்தா! ஆஞ்சநேயரே! அண்ணா! உங்களைக் கண்டதால் பாண்டவர்கள் நாம் பாக்கியசாலிகள் ஆனோம். உம் பலத்தைக் கொண்டு பகைவர்களை நாம் நிச்சயம் வெல்வோம்; இது உறுதி" என்று விடைபெற்றான் வீமன்.

பாரதப் போரில் பல கௌரவர்களைக் கொன்று குவித்த வீமன் இறுதியில் துரியோதனனது தொடையில் கதாயுதத்தால் அடித்து வீழ்த்தி தனதும் பாஞ்சாலியினதும் சபதத்தை நிறைவேற்றி வெற்றி வாகை சூடினான் என்பது யாவரும் அறிந்ததே.★★★

மட்டுவில் நல்லதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 128

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | 8 |
| 9 | 10 | | | ■ | 11 | | |
| ■ | 12 | | ■ | 13 | | ■ | |
| 14 | | ■ | 15 | | | 16 | ■ |
| 17 | | 18 | | | ■ | 19 | 20 |
| 21 | | | | ■ | 22 | | |
| | ■ | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### இடமிருந்து வலம்

1. உத்தேசக் கணிப்பை இப்படி அழைப்பர்.
6. இடச்சுகம், வாய்ப்பான ஏற்பாடு.
7. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
9. போலிச் செயற்பாடு/ நடிப்பு.
11. ஒரு தோல் வாத்தியம்.
12. கரும்பாம்பு/ நவக்கிரகங்களுள் ஒன்று.
13. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட நிலை.
14. ஓர் ஏவுகணை வகை.
15. அழுது அரற்று.
17. இராமனின் தந்தை.
19. சாத்திரத்தில் இது பன்னிரண்டு.
21. கிருஷ்ணனின் தாய்வழி மாமன்.
22. பண்பு/ இயல்பு/ தன்மை.
23. இனிப்புத் தருவது. சீனியாவது.

### மேலிருந்து கீழ்

1. ஒரு பாத்திரவகை. சந்தனம் பன்னீர் வைப்பது.
2. ஆரம்பி.
3. நிலத்தில் தோண்டி எடுக்கும் எண்ணெய் இப்படி அழைக்கப்படும்.
4. நினைவு நாள்.
5. குதிரை.
8. சிதம்பரம்.
10. சத்தாக அமைந்த விடயம்.
11. பொருந்தும்/ தகுதியானது.
13. சிறிய குழந்தை. யேசுவை இப்படி அழைப்பர்.
14. ஜோதிடத்தில் பார்ப்பர்.பாதகம் அல்ல.
15. ஒருகிழமை/ கிரகமும் கூட.
16. காலங்காலமாகப் பேசப்படும் கதை.
18. சோற்றோடு சேர்த்து உண்பது.
20. சிராய்/ நார்.
22. சிஷ்யனின் வழிகாட்டி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம்தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 126 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அருந்ததி. (5)வகு. (7)வாசி. (8)வருமானம். (10)கதறு. (12)தம்பி. (13)ஈரம். (14)நார். (15)சம்பவம். (17) கல். (18)திணி. (19)அவி. (21) கட்டழகு. (23)பள்ளம். (24) வில்லை.

### மேலிருந்து கீழ்

(1)அவா. (2)ருசி. (3)தவறு. (4)திரு. (5) வனம். (6)கும்பிடல். (9)மாதர். (11)தம்பதி. (13)ஈசல். (14)நாம். (16)வணிகம். (17)கவிழல். (19)அடவி. (20)கள். (22).குலை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 126 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** செல்வி சர்மிலா புஸ்பாகரன்,
யா/ இந்து மகளிர் கல்லூரி.

**2 ஆம் பரிசு** திருநாவுக்கரசு ரமேஷ்,
AMSLERCHERWEG 18 CH 5033 BUCHS (AG)
சுவிட்சர்லாந்து

**3 ஆம் பரிசு** நேசராஜ்குமார் வித்யாசாகர்,
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்.

**4 ஆம் பரிசு** ப. மேரி சுதர்சினி,
தரம் 10B,
யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

**5 ஆம் பரிசு** ஜெ. பிறின்சியா,
பிரவீன் கிளினிக், சங்கானை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) மு. ஸ்ரீதரன்,
அல்லாரை தெற்கு, மீசாலை.

(2) நா. பிரியதர்சினி,
இல,587, கரியாலை நாகபடுவான்
முழங்காவில், கிளிநொச்சி.

(3) திருமதி செல்வா இராஜேஸ்வரன்,
இல.46, விதானை வீதி,சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத் தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 128**
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 15.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.128இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 19.09.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

# அறிவூட்டும் அன்பு வழி

17ஆம் பக்கத் தொடர்ச்சி

அப்போ நான் விடுதிக்குப் போகத் தேவையில்லைத்தானே?" என்று ஆவலுடன் கேட்கிறான். தாயார் என்னை நோக்குகிறார். நான் தந்தையை நோக்கியவாறே,

"இல்லை" என்கிறேன். இரமணன் இன்னும் அதிகமாக என்னிடம் அணைந்து கெள்கிறான்.இரமணனுடன் உரையாடியதிலிருந்து அவன் குருடருக்கான விடுதிப் பாடசாலையொன்றில் ஐந்தாம் வகுப்பில் படிப்பதையும், அம்மா அப்பாவைப் பிரிந்து செல்ல அவன் விரும்பவில்லை என்பதையும் அறிந்து கொள்கிறேன். அவனது உரையாடலிலிருந்து அவன் எதையும் விளங்கிக் கிரகித்துக் கொள்ளும் புத்திக்கூர்மை படைத்தவன் என்பது புலப்படுகிறது. பொதுவாக எல்லா விடயங்களிலும் பரிச்சயமும், எந்நேரமும் துருதுரு வென்று எதையாவது ஆராய்ந்து அறியத் துடிக்கும் தன்மையும் கொண்டவனாக விளங்குகிறான்.

வந்தவரின் களைமாற எதுவும் கொடுக் காது கதைத்துக் கொண்டிருக்கிறோமே என்று எண்ணித் திடுக்குற்றவர் போல் எழுந்து வீட்டினுள் செல்கிறார் கண்ணம்மையார். அவரின் அடியோசையைப் பின்பற்ற எண்ணிவிட்டான் போலும். என்னிடமிருந்து விடுபட்டுத் தாயாரைத் தொடர்கிறான் இரமணன். அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த பெரியவர் நெடுமூச்செறிந்தவராக, "தம்பீ!!!" என்று என்பக்கம் திரும்புகிறார். அவரது கண்கள் கலங்கிக் காணப்படுகின்றன.

"இரண்டு வயதுவரை எல்லாப் பிள்ளைகளையும்போலத்தான் இருந் தான். இரண்டு வயதில் ஏதோ ஒரு நோய் - நாங்கள் சாதாரண காய்ச்சல் என்று எண்ணினோம். காய்ச்சல் மாறியது. ஆனால் தம்பி. என் பிள்ளையின் பார்வை மங்கத் தொடங்கியதை நான் அவதானிக்கவில்லை. பிள்ளையின் பார்வை நன்றாகக் குறைந்த பின்பே அவதானித்தோம். காட்டாத வைத்தியரில்லைத் தம்பி. நேர்த்திக்கடன் வைக்காத கோயில்களுமில்லை. வைத்தியர்கள் எல்லோரும் தம்மாலான மட்டும் முயன்றார்கள். வேலூரிற் சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டது. எவ்வித பலனும் கிடைக்கவில்லை. ஏதோ, ஆண்டவனின் சோதனை போலும். என் பிள்ளையின் வருங்காலம் எப்படி அமையப் போகிறதோ!" சால்வையால் வடியும் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறார்.

"ஐயா, கவலைப்படாதீர்கள் இறைவன் அருளால் யாவும் நல்லபடியாகவே அமையும். பார்வை இடையூறையீட்டுக் கலங்கிய காலம் மலையேறிவிட்டது. நாட்டிலுள்ள சகல பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளும் தம்மைத் தாமே காக்கக்கூடிய சுதந்திர தனிமனி தனாக வாழ வழி திறக்கப்பட்டு விட்டது."

"தம்பி, மகனை விட்டு ஒரு நிமிடமேனும் பிரிந்திருக்க எங்களால் முடிவதில்லை. அவனும் எங்களை விட்டுப் பிரியமுடியாது வருந்துகிறான். அவனை விடுதிக்கு அனுப்புவதென்றால் கொலைக் களத்துக்குக் கொண்டு செல்லும் வேதனையை அடைகிறோம். வலது குறைந்தபிள்ளை. அங்கு போய் என்ன செய்கிறானோ!"

"ஐயா, உங்கள் வேதனையை நான் மட்டுமல்ல, உலகமே உணர்ந்துள்ளது. நான் யார்? நான் வந்த நோக்கமென்ன? என்பவற்றை அறிந்து கொண்டால் உங்கள் மனம் சிறிது அமைதி பெறக்கூடும். உங்கள் பிரிவுத்துயரை நீக்குவதும் எமது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அன்பான இயற்கைவழியில் அறிவைப் புகட்டுவதே எங்கள் கொள்கை." "கடவுள் போல் வந்திருக்கீறீர்கள்; சொல்லுங்கள் தம்பி!!

"என் பெயர் முகம்மது அமீன். கொழும்பைச் சேர்ந்தவன். பார்வை இடையூறுடைய பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்கான விசேட பயிற்சி பெற்றுள்ளேன்."

"எங்கே தம்பி நீங்களும் ஒரு குருடர் விடுதிப் பாடசாலையிலா படிப் பிக்கிறீர்கள்?"

"இல்லை, நான் சாதாரண பாடசா லைகளில் பார்வை இடையூறுடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறேன்.

"என்ன!! சாதாரண பாடசாலை யிலா? என்ன தம்பி சொல்கிறீர்கள்"?

"ஆமாம், இப்போது சில இடங் களில் சாதாரண பாடசாலைகளில் பார்வை இடையூறுடைய பிள்ளைகள் கற்கிறார்கள். இன்னும் சில வருடங்களில் ஈழம் முழுவதிலுமே இவ்வசதி கிடைத்துவிடும். அந்தப் பிள்ளைகள் சாதாரண பிள்ளைகளுடன் சேர்ந்து கல்வி கற்கின்றனர். யாழ்ப்பா ணத்திலும் அடுத்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்போகிறோம்."

"புத்தகம் எல்லாம் எப்படித் தம்பி வாசிப்பார்கள்? சும்மா, வாயாற் சொல் வதை மட்டும் கேட்டுக் கொண்டிருப் பதா? விடுதிப் பாடசாலையில் ஏதோ குற்றுக் குற்றாக எடுத்துப் படிப்பிக்கிறார்களே"

"நாங்களும் அவ்வெழுத்து முறை யில் தான் கற்பிக்கிறோம். எழுத்து, வாசிப்பு, எண்போன்ற பாடங்களில் சாதாரண பிள்ளைகள் படிக்கும் விடயத்தையே, விஷேட எழுத்து முறையில், அதாவது 'பிறைலி' முறை யில் நாங்கள் கற்பிப்போம். அப்பாடங்களையும் ஏனைய பாடங்களையும் எங்கள் விசேட உதவியுடன் மற்றைய பிள்ளைகளுடன் சேர்ந்து படிப்பார்கள்."

"அப்படியா!!"

"ஆமாம் இதன்ால் நாட்டிலுள்ள சகல பார்வை இடையூறுடைய பிள்ளைகளும் கல்வி பெற முடியும். அவர்கள் மற்றையோருடன் சேர்ந்து பழகும் சந்தர்ப்பமும் கிடைக்கும். முக்கியமாக, வீட்டிலிருந்து, விரும்பிய பாடசாலையிற் சென்று படிக்கவும் முடியும்."

"அப்படியானால் நாட்டிலுள்ள குருடருக்கான விடுதிப் பாடசாலைகளை மூடிவிடுவார்களா?

"இல்லை. அவையும் இயங்கும். அவற்றின் சேவையும் தேவையே. சில பெற்றோர் தம் பார்வை இடையூறுடைய பிள்ளையை வீட்டில் வைத்துப் பாடசாலைக்கனுப்ப வசதியில்லாதவர்களாயிருக்கலாமல்லவா? அப்பிள்ளைகள் விடுதிப் பாடசாலை யிற் சேர்க்கப்படுவர். பார்வைக் குறைபாடு மட்டுமல்லாது வேறு குறைபாடுகளும் ஒரு பிள்ளைக்கிருக்குமாயின் அப்பிள்ளையும் விடுதிப் பாடசாலைக்கே அனுப்பப்படுவான்.

"தம்பி, நான் ஒரு கிளார்க். பிள்ளைக்கு இப்படியான பிறகு நான் பென்சன் எடுத்துவிட்டேன். பேப்பர் கூட எடுத்து வாசிக்க நான் விரும்புவதில்லை தம்பி. என் பிள்ளை வாசிக்க முடியாதிருக்கும் போது நான் என்ன வாசிப்பது? அதனால் ஒரு வெளிவிடயமும் எனக்கும் தெரியாது. இப்படியெல்லாம் நடக்கிறதென்று நீங்கள் சொல்லித்தான் நான் அறிகிறேன். என் பிள்ளையின் பார்வையைப் பறித்த கடவுள் என் பார்வையை எடுக்கக் கூடாதா" விம்மி விம்மி அழும் பெரியவரைக் கண்டு என் கண்களும் கலங்கிவிட்டன. ஆறுதல் கூற வார்த்தைகள் வராது தடுமாறுகிறேன்.

சிறிது நேரம் அமைதிக்குப் பின், என் கடமை தூண்ட, தொண்டையைச் செருமிக் கொள்கிறேன்.

"ஐயா, மனம் தளராதீர்கள். இயற் கையின் நியதியையிட்டு மனமுடைவது புத்தியல்ல. அதை நிவர்த்தி செய்யும் வழிவகைகளைத் தேடிக் கொள்ள வேண்டும். பெரியவர் ஒருவருக்குப் புத்தி சொல்லுகிறேனே என்று கூடும் என் மனதை மிகவும் கஷ்டத்துடன் கட்டுப் படுத்திக் கொண்டு தொடர்கிறேன்.

"இரமணன் விவேகி, அவன் படித்துப் பெரிய அறிவாளியாக ஒரு நாள் திகழ்வான் என்பதில் சந்தேக மில்லை. அதை நீங்கள் மனங்குளிரப் பார்க்கத்தான் பேகிறீர்கள். அதற்கு நீங்களே முக்கிய காரணமாய் விளங்கு வீர்கள். ஐயா நேரமுள்ள வேளைகளில் உங்கள் மகனுக்குப் பலவற்றை வாசித்து விளக்குங்கள். பத்திரிகைகளை வாசித்து உலக விடயங்களை அவனுக்கு அறியத்தாருங்கள். எழுதுவதாலும் பாடசாலையில் படிப்பதா லும் மட்டும் ஒருவன் முழு அறிவையும் பெற முடியாதல்லவா?

"ஆமாம் தம்பி, ஆமாம்"

கண்ணம்மையார் தேநீர்க் கோப்பையை என்னருகில் வைக்கிறார்.

"குடியுங்கள் தம்பி", கனிவுடன் கூறுகிறார் பெரியவர். தேநீர் அருந்திய வாறே, இரமணனை எதிர்பார்க்கிறேன். என் எண்ணத்தை அறிந்து கொண்டவர் போல் மகனை அழைக்கிறார் பெரியவர். வீட்டிலணியும் உடை அணிந்து காணப்பட்ட இரமணன் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தவனாக வானொலியை முறுக்கிவிட்டு அதன் ஒலியை மட்டுப்படுத்துகிறான்.

"பாட்டு என்றால் முழுநாளுமே கேட்டுக் கொண்டிருப்பான். தானும் றேடியோவுடன் சேர்ந்து அதுபோலவே பாடுவான்" என்று மகனின் இசை ஆர்வத்தைப் பெருமை பொங்கக் கூறுகிறார் தந்தை.

"அவ்வார்வத்தையும் எமது திட்டப் படி விருத்தி செய்ய முடியும். மகாவித்தியாலயங்களில் இசை கற்கும் வசதிகளும் உண்டு. என்று கூறிவிட்டு இரமணனை அருகில் அழைத்துக் கொள்கிறேன்.

"தம்பி வீட்டிலிருந்து பாடசாலை செல்ல விருப்பமா?" என்று வினவுகி றேன். ஆவலுடன் தலையசைக்கிறான்.

"எப்படி?" என்று ஆச்சரியமாகக் கேட்கிறார் தாயார். தந்தைக்கு நான் கொடுத்த விளக்கதை அவர் அப்படியே மனைவியிடங் கூறுகிறார். எல்லோர் முகத்திலும் ஒருவித பிரகாசம் படர்கிறது. பெற்றோரும் பிள்ளையும் ஒரு முகப்படுத்தப்பட்ட கல்விச் சேவையை முழு மையாக விரும்புகின்றனர் என்பதை நன்கு உணர்ந்து கொண்ட நான்.

"ஐயா, நீங்கள் விரும்பினால், நீங்கள் விரும்பும் தரமான பாடசாலையில் உங்கள் மகனைச் சேர்த்துக் கொள்ளலாம். நான் இன்னும் இரண்டு நாள்களின் பின் வருகிறேன். யோசித்து, ஆராய்ந்து உங்கள் விருப்பத்தை கூறுங்கள்." என்று கூறி விட்டு இரமணன் பக்கம் திரும்பு கிறேன். "இரமணன், நான் போய் வரட்டுமா? கெட்டிக்காரனாக, அழாமல் இருக்கவேணும்" தலையசைக்கிறான். எல்லோருக்கும் வணக்கம் கூறிவிடைபெறுகிறேன். கண்ணம்மையார் பாசத்துடன் கைகுவிக்கிறார். அருகில் வந்து என் கைகளைப் பற்றிய பெரியவர், "தம்பி தெய்வம் போல் வந்தீர்கள். எங்கள் அன்புச் செல்வத்தைப் பிரியாது அவ னுக்கு அறிவூட்டும் வழியைக்காட்டி விட்டீர்கள். தம்பி, நீங்கள் தான் இனி இரமணனுக்கு யாவும். அவன் இனி எங்கள் பிள்ளையல்ல. உங்கள் பிள்ளை" என்றவர் இரமணனை அழைத்து வந்து வணங்கச் சொல்கிறார். நால்வரும் ஒரே நேரத்தில் கை கூப்புகிறோம்.

திருமண அழைப்பில் கை கூப்பி நிற்கும் அழகான படம் ஞாபகத்துக்கு வரவே என் சிந்தனையோட்டம் அறுகிறது. பட்டதாரி இரமணனின் மணப் பெண் யார் என்பதை அறிய அழைப்பிதழை நோக்குகிறேன்.★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டு வண்டியில் ஆனையிறவு வந்து யாழ்ப்பாணத்தில் பதவியேற்ற கடேற் வூல்வ்

அரசாங்க அதிபர் லெவேர்ஸின் பதவிக் காலத்தில் அரசாங்க அதிபர் கடமையின் நிமித்தமோ, லீவிலோ யாழ்ப்பா ணத்தை விட்டு வெளியேறிய சந்தர்ப்பங்களில் மூன்று பேர் பதில் அரசாங்க அதிபர்களாகப் பதவி வகித்துள்ளனர்.

10.04.1897 தொடக்கம் 15.12.1897 வரையான காலப்பகுதியில் எவ்.சி.பிஷர் (F.C Fisher)பதில் அரசாங்க அதிபராகப் பதவி வகித்துள்ளார்.

10.06. 1900 முதல் 23.11.1900 வரை ஈ.ரி.நோய்ஸ் (E.T. Noyes) பதில் அரசாங்க அதிபராகப் பதவி வகித்துள்ளார்.

10.11.1901 முதல் 05.01.1902 வரை ஜி.எஸ் சாக்ஸ்ரன் பதில் அரசாங்க அதிபராகப் பதவி வகித்துள்ளார். 03.06.1903 அன்று ஜே.பி. லூயிஸ் (J.P. Lewis) அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவரது பதவிக்காலத்தில் லியனார்ட் வூல்ப் (LEORNARD WOOLF) என்ற பிரபல எழுத்தாளர் யாழ்ப்பாணக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராக (CADATE OFFICER ) ஆகக் கடமையாற்றியுள்ளார். இவரது மனைவி வேர்ஜீனியா வூல்பும் புகழ் பெற்ற எழுத்தாளர். (Growing an autobiography of the years 1904 - 1911 என்ற பெயரில் தனது அனுபவங்களை 1961ஆம் ஆண்டு இலண்டனில் வைத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார் லியனார்ட் வூல்ப். இதே நூலை TISSA PARAKRAMA என்ற இலங்கையிலுள்ள நூல் வெளியீட்டு நிறுவனம் மறுபிரசுரம் செய்துள்ளது. ஆனால் இந்நிறுவனம் வெளியிட்ட மறுபதிப்பில் லியனார்ட் வூல்ப் அம்பாந்தோட்டையில் கடமையாற்றிய காலப்பகுதியை மட்டும் மறுபிரசுரம் செய்துள்ளது. யாழ்ப்பாண நாட்குறிப்பு மறுபிரசுரத்தில் இடம்பெறவில்லை.

லியனார்ட் வூல்பின் அனுபவங்களையும் இத் தொடரில் இணைத்துக் கொள்வது நல்லது என நினைக்கிறேன். தானாகவே முன் வந்து இந்த நூலைத் தந்துதவிய நாவலர் வீதியைச் சேர்ந்த வீணை ஆசிரியை செல்வி இராஜேஸ்வரிக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**ஆவணப் பெட்டகம் 09**

**லியனார்ட் வூல்பின் யாழ்ப்பாண அனுபவங்கள்**

நான் தங்கியிருந்த கிராண்ட் ஒரியண்டல் ஹோட் டல் கொழும்புத் துறை முகத்திலிந்து கல்லால் எறியும் தூரத்தில் தான் இருந்தது. அந்த நாள்களில் மோட்டார் காரின் வருகைக்கு முன்னர் கொழும்பு நகரம் றிக்ஷாக்களினாலும் மாட்டு வண்டிகளாலும் நிரம்பிக் காணப்பட்டது. அசல் கீழைத்தேச நகரமாகக் கொழும்பு காணப்பட்டது. நான் வரும் பொழுது எனது செல்ல நாயான சார்ள்ஸையும் என்னுடன் கூட்டி வந்திருந்தேன். நான் கொழும்பு செயலகத்திற்குச் சென்ற போது குடியேற்ற நாடுகளின் செயலாளர் அஷ்மோர் (Ashmore) நான் வடமாகாண கடேற் அதிகாரியாக நியமிக்கப்

**யாழ்ப்பாணக் கச்சேரியின் வரலாற்றை அறிந்து கொள்வோம்**

பட்டிருப்பதாகவும் எனது கடமைகள் பற்றியும் விளக்கினார். 300 ஸ்ரேர்லிங் பவுண் வருடாந்தச் சம்பளத்தில் நான் இலங்கை நிர்வாக சேவையில் கடேற் உத்தியோகத்தாராக நியமிக்கப்பட்டிருந்தேன். 1905 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியோ இரண்டாம் திகதியோ நான் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டேன். ஒரு சிங்கள வேலைக்காரனும் என்னுடன் கூட வந்தான். அந்த நாள்களில் கொழும்பு - யாழ்ப்பாணம் பிரயாணம் என்பது இலகுவானதல்ல. யாழ்ப்பாணத்திற்கான புகையிரதப் பாதை வேலைகள் அப்போதுதான் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அரைவாசித் தூரம் தான் புகையிரதத்தில் போகமுடியும். யாழ்ப்பாணத்திலிருந்து ஆனையிறவு வரையான புகையிரதப்பாதை மட்டும் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அனுராதபுரத்திலிருந்து ஆனையிறவு வரை 'மெயில் கோச்'சியிலேயே செல்ல வேண்டும். 'மெயில் கோச்' என்பது தபால் பைகளை எடுத்துச் செல்லும் பெரியளவிலான மாட்டுவண்டி. 'மெயில் கோச்'சியில் யாராவது பிரயாணம் செய்வதாயின் தபால் பொதிகளின் மேலேயே இருக்க வேண்டும். அனுராதபுரத்திலிருந்து ஆனையிறவுக்கு 36 மணித்தியாலப் பிரயாணம். என்னுடன் மாவட்டப் பொறியியலாளரும் வந்தார். மாடுகள் வண்டியை மெதுவாக இழுக்கும் சந்தர்ப்பங்களில் நாங்கள் வண்டியை விட்டு இறங்கி நடப்போம். இரவில் தபால் பொதிகளின் மேல் தான் உறங்குவோம்.

ஜனவரி மூன்றாம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு 9 மணிக்கு அனுராதபுரத்திலிருந்து புறப்பட்ட மாட்டு வண்டி வியாழக் கிழமை 5ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆனையி றவை அடைந்தது. ஆனையிறவிலிருந்து யாழ்ப் பாணப் பிரயாணம் ஒரு புளகாங்கிதமான அனுபவ மாக இருந்தது. இரு பக்கமும் கடல், பனைமரங்கள், காகங்கள், பறவைகளின் ஒலிகள் என்பன ஒரு புதுமை யான அனுபவமாக இருந்தது. ஆனையிற விலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதத்தில் புறப்பட்டோம். (வளரும்)

**தாண்டவன்**

# கஞ்சாங்கோரை டெங்குக்கு மருந்தாகலாம் ஆராய்ச்சி செய்தால் பயன்படுத்த வாய்ப்பு

**துளசி**

**வேறுபெயர்கள் :** விஷ்ணு துளசி, இராமதுளசி, கிருஷ்ண துளசி, திருத்துளாய், குல்லை, மாலலங்கல்.
**தாவரவியற்பெயர்:** Ocimum sanctum (ஓக்சிமம் சங்ரம்)
**குடும்பம் :** Labiatac லேபியேற்றே
**சிங்களப்பெயர் :** மதுரு தளா
**சமஸ்கிருதப்பெயர் :** துளசீ
**ஆங்கிலப் பெயர் :** Sacred Basil

தெய்வீக மூலிகைகளுள் தெய்வீகமானது துளசி. விஷ்ணுவுக்கு மிகவும் பிரியமானது. துளசி என்றால் ஈடு இணையில்லாத மூலிகை என்று கருத்து. தினமும் காலையில் எழுந்தவுடன் துளசியில் விழித்தால் (பார்த்தால்) சுப பலனுண்டாகும் என்பது நம்பிக்கை. எனவேதான் இந்துக்கள் வீட்டு வாசலில் துளசியை வளர்க்கிறார்கள். துளசி சிறு செடி வகுப்புக்குரியது. தனி இலைகள். இலைகளைக் கசக்கினால் பிரத்தியேக மணம் வீசும். துளசியில் சாதாரண துளசி (வெண்துளசி)



கருந்துளசி, செந்துளசி என்பன முக்கியமானவை. இவற்றை விட நாய்த்துளசி, நிலத்துளசி, முள்துளசி, கர்ப்பூரத் துளசி என்று பலவகைகள் உண்டு.

துளசி இலையே மருத்துவத்தில் அதிகம் பயன்படுகிறது. துளசி இலை உடற்பிணிகள் பலவற்றுக்கு மருந்தாவதுடன் ஒருவர் இறந்த பின்னரும் இறந்த உடலைக் கெட்டுப் போகாமல் சிறிதுகாலம் பாதுகாக்க வல்லது. எனவே தான் இறந்தவரின் உடலுக்குத் துளசி மாலை அணிவிப்பதும், இறந்த உடல்மீது துளசி இலைகளைத் தூவுவதும் வழக்கமாக உள்ளது. மூக்கிலிருந்து நீர்வடியும் பீனிச நோயுள்ளவர்களுக்குத் துளசியிலைச் சாறு 2,3 துளி மூக்கில் விட்டுவர விரைவில் குணம் ஏற்படும்.

துளசி இலையை 4,5 எடுத்து சப்பிச் சாப்பிட்டு வந்தால் இருமல், சளி நீங்கும். தொய்வு அல்லது இரைப்பிருமல் நோயினால் வருந்துபவர்கள் ஒரு கைப்பிடி கருந்துளசி இலை, ஒரு கைப்பிடியளவு கருநொச்சியிலை, ஒரு கைப்பிடியளவு மொசுமொசுக்கை இலை என்பவற்றை எடுத்து குடிநீர் காய்ச்சி சிறிது கற்கண்டு சேர்த்து அரைக்கோப்பையளவில் தினமும் காலை, மாலை குடித்து வந்தால் ஆச்சரியப்படத்தக்க வகையில் குணம் ஏற்படுவதைக் காணலாம்.

தடிமன் காய்ச்சல், இருமல் போன்ற நோய்களுக்கு துளசியிலை, கொத்தமல்லி, தூதுவளை இலை என்பவற்றைக் குடிநீர் செய்து குடித்து வந்தால் மாறும்.

**நாய்த்துளசி**

**தாவரவியற்பெயர்:** Ocimum canum ஒக்சிமம் கனம்
**குடும்பம்:** Labiatac லேபியேற்றே
**சிங்களப் பெயர்:** கஸ் தள
**சமஸ்கிருதப் பெயர்:** அர்ஜர
**ஆங்கிலப் பெயர்:** Hoary Basil

இதனைக் கஞ்சாங்கோரை என்றும் அழைப்பதுண்டு. இதன் இலையின் மணத்துக்கு நுளம்புகள் வராது. முற்காலத்தில் நுளம்புகளை விரட்டுவதற்காக படுக்கையைச் சுற்றி கஞ்சாங்கோரை இலைகளை பரப்புவது வழக்கமாக இருந்துள்ளது. டெங்கு போன்ற கொடிய நோய்களைப் பரப்பும் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு இதன் இலைகள் அல்லது இலைச்சாறு பயன் தருமா என்பது பற்றி ஆய்வுகள் மேற்கொள்வது பிரயோசனமானது. இதன் இலைச் சாற்றை அல்லது இலைக் குடிநீரை இருமல், குத்திருமல், முக்குற்ற நோய்களுக்கு வழங்கலாம்.

**வெற்றிலை**


**வேறு பெயர்:** தாம்பூலம், தாம்பூல்வல்லி, நாகவல்லி
**தாவரவியற்பெயர்:** piper betel (பைபர் பீற்றில்)
**குடும்பம்:** piperaceae (பைபரேசியே)
**சிங்களப் பெயர்:** புலத்
**சமஸ்கிருதப் பெயர்:** நாகவல்லி, தாம்பூலம்
**ஆங்கிலப் பெயர்:** Betel Leaf

இந்துக்களின் பூர்வ, அபரக்கிரியைகள் அனைத்திலும் இடம் பெறும் முக்கிய பொருள்களாக வெற்றிலையும் பாக்கும் விளங்குகின்றன. வெற்றிலை, பாக்கு இன்றி எந்தவொரு ஆலயக்கிரியைகளும் இடம் பெறுவதில்லை என்று கூறலாம். வெற்றிலையில் ஸ்ரீதேவியாகிய மஹாலட்சுமி வாசஞ் செய்வதாகக் கூறப்படுகிறது. ஆஞ்சநேயருக்குப் பிரியமான மாலையாகவும் வெற்றிலை மாலை விளங்குகிறது. வெற்றிலை

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

கொடி வகுப்புக்குரியது. தனி இலைகள் ஒருவித மணமும் காரச்சுவையும் உள்ளவை. வெற்றியிலையில் சாதாரண வெற்றிலை, கைமாறு வெற்றிலை, கர்ப்பூர வெற்றிலை என்று வகைகள் உண்டு. வெற்றிலைக்குத் தாம்பூலம் என்று பெயர் வழங்கப் பட்டாலும்,உண்மையில் தாம்பூலம் என்பது வெற்றிலை, பாக்கு, கர்ப்பூரப்பொடி என்பவற்றின் சேர்க்கையைக் குறிக்கிறது.

கர்ப்பூரப் பொடிக்குப் பதிலாக காசுக்கட்டி, சுக்கு, கராம்பு போன்ற மணப்பொருள்களைச் சேர்ப்பதுமுண்டு. தற்காலத்தில் பெரும்பாலானோர் வெற்றிலை, பாக்குடன் சுண்ணாம்பு சேர்த்து



சாப்பிடுகிறார்கள். உணவுக் குப் பின்னர் பாக்குடன் சேர்த்து வெற்றிலை உண்பதால் உணவு நன்கு ஜீரணமடையும்.

காசுக்கட்டி சேர்த்து உண்பதால் பற்கள் வலிமையடையும். குடற்புழுக்கள் சாகும். வெற்றிலைக் காம்பை குடிநீர் செய்து குழந்தைகளுக்கு கொடுப்பதனால் குடற்புழுக்கள் நீங்கும். குழந்தைகளுக்கு ஏற்படும் தடிமன், நெஞ்சுச் சளிக்கு வெற்றிலையை வாட்டி நெஞ்சில் அல்லது தலையில் போடக் குணமாகும். கடுமையான இருமலுக்கு வெற்றிலைச் சாறு, இஞ்சிச் சாறு என்பவற்றைச் சமவளவில் கலந்து கற்கண்டு சேர்த்து பருகலாம். வெற்றிலைக் காம்புடன் 4,5 மிளகு சேர்த்து குடிநீர் செய்து கொடுக்க குழந்தைகளுக்கு உண்டாகும் செரியாமை நீங்கும். இருதய நோய்கள் சிலவற்றைக் குணப்படுத்தும் தன்மையும் வெற்றிலைக்குண்டு.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பை அடிக்கடியும் அதிகளவிலும் பாவிப்பதாலும் நீண்ட நேரம் வாயுள் அடக்கி வைத்திருப்பதாலும் வாய்ப் புற்று நோய் ஏற்படுகிறது என்பதும் உண்மையே. எனவே இவற்றை அளவாக உபயோகிப்பதுடன் இவற்றை உண்டபின் உடனடியாக வாயைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.**



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம அலுவலர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கிராம அலுவலர்களைப் பதவி உயர்த்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம்II இல் உள்ள கிராம அலுவலர்களை தரம் I இற்கு பதவி உயர்த்துவதற்காக இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 15 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும், தொடர்ந்து 5 வருடங்கள் சம்பள உயர்வினைப் பெற்றவர்களும் இப்பதவி உயர்வுக்கு விண்ணப்பிக்க முடியும்.

யாழ்.மாவட்டத்தில் தரம் I பதவிகளைப் பெறாதா கிராம அலுவலர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களே காணப்படுகின்றார்கள்.

சேவைக் காலத்தின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை மூலம் பதவி உயர்வு வழங்குவதற்கு தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (த-86)

## கட்டணம் செலுத்தத் தவறின் மின்சாரம் துண்டிக்கப்படும்

தென்மராட்சி,செப்.5

தென்மராட்சிப் பிரதேசத்தில் 3மாத காலத்துக்குமேல் மின் கட்டணத்தை செலுத்தாதோருக்கு மின் இணைப்பை துண்டிப்பதற்கான 'சிவப்பு அறிவித்தல்' விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அறிவித்தல் கிடைக்கப்பெற்று ஒரு வார காலத்தினுள் உரிய தொகை செலுத்தப்பட்டு, சாவகச்சேரி மின் சாரசபை அலுவலகத்தில் அதனைச் சமர்ப்பித்து மின் துண்டிப்பத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியினுள் மின் கட்டணம் செலுத்தாதோரின் மின் இணைப்பு துண்டிக்கப்படும். மீண்டும் மின் இணைப்பு வழங்குவதாயின் உரிய கட்டணமும் செலுத்தி மேலதிகமாக 800 ரூபாவும் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஏ-207-15)

## அனுமதி பெற்றே கட்டடம் அமைக்க வேண்டும்

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி நிரந்தரக் கட்டடங்கள் அமைத்தல் முற்றுமுழுதாக தடை செய்யப்பட்டுள்ளது. எனவே நிரந்தரக் கட்டங்களை அமைக்க விரும்புவோர் பிரதேச சபையின் அனுமதியைப் பெற்ற பின்னரே ஆரம்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் இந்த விடயம் தொடர்பில் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்எனவேலணை பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராசா அறிவித்துள்ளார். (ஒ-15)

## எழுத்தாக்கப் போட்டி

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு யாழ்.கல்வி வலய முறைசாரக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான எழுத்தாக்கப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே விசேட தேவையுடைய மாணவர்கள் அனைவரையும் எழுது கருவிகளுடன் தவறாது பங்குபற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் கேட்டுள்ளார். (த-201)


# Diploma in Web Development

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!

இணையத்துறையில் வல்லுனராகுங்கள்

குறுகியகாலத்தில் சிறந்த உயர்கல்வி வாய்ப்புக்களையோ அல்லது கௌரவமான வேலைவாய்ப்புக்களை தேடி நிற்கும் மாணவர்களின் சிறந்த தெரிவு....

1000 மணித்தியாலங்கள் கல்விப்போதனை/செய்முறைப் பயிற்சிகளைக் கொண்ட உயர்தர Diploma கற்கை நெறியாகும்




New Batch Starts on 10.09.2010

மேலதிக விபரங்களுக்கு

021 4900 900

IIS CITY CAMPUS

200,Sivan Pannai Road,Jaffna

Tel:-021 222 8060 Fax:-021 222 6933

Web:- iis.edu.lk

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிள்ளையார் மெட்டல்**

இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.

தொ.பே: 024 222 2097
024 222 0129

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சுப்பிரமணியம் சரவணபவன்**

சிற்ப ஆசாரி 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சி.சிவானந்தம்**

கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A.09,வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726


# நெஞ்சம் மறவாத 8ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



## அமரர் கிருஷ்ணபிள்ளை கணேசமூர்த்தி (ஓடி கணேசு)

[வைரவர் கோயிலடி பத்தமேனி, அச்சுவேலி]

தோற்றம் 27.07.1944

மறைவு 03.09.2002

அன்பின் அப்பாவே ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்
காலங்கள் பல சென்றாலும்
காயங்கள் ஆறுமோ எமை விட்டு
கண்கெட்ட ஊரிலுள்ள
கொடிய துரோகிகள்
உங்களை மனங் கொண்டு அழித்தனரோ?
வஞ்சக நெஞ்சம் கொண்ட அரக்கர்களா அவர்கள்
நாளும் பொழுதெல்லாம் கவலையைச் சுமக்கின்றோம்
ஏன் இந்தக் கொடுமை
இதை யாரிடம் தான் கூறுவது?
எல்லாம் கனவாகிப் போனதே அப்பா!

அன்னார் எமை விட்டுப் பிரிந்து 05.09.2010 அன்று ஞாயிற்றுக்கிழமை 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

கனடா. (102877)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவு வீழ்ச்சியை தமிழ் மாணவர் கொண்டாட இராணுவத்தினருக்காக நிதி சேகரித்தனர் சிங்கள மாணவர்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டு அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாத அரசியல் சூழலில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பேராசிரியர் ரட்ணஜீவன் ஃகூல் அவர்களுடன் 'தேசம்' இணையத்தளம் மேற்கொண்ட நேர்காணலின் இரண்டாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது. அவரது உரையாடல் மொழியிலேயே பதில்கள் தரப்படுகின்றன.**

### பேராதனைப் பல்கலையில் தமிழ் மாணவர் எதிர்நோக்கிய பிரச்சினைகள்

**கே:** இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமாக இருந்த காலகட்டங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் பேராசிரியராக இருந்துள்ளீர்கள். தென்பகுதி பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியர், தமிழர் என்ற வகையில் எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

ப: பல பிரச்சினைகள். பொலிஸ் மாணவரைப் பிடித்தல், புலிகள் சாராத மாணவர் வாயை மூடவேண்டிய நிலை. ஆங்கில பாடக்கோப்பில் விரிவுரையாளர் சிங்களத்தில் படிப்பித்தல், தொழில் பயிற்சிக்கு தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி CEB, SLT போன்ற புகழ் வாய்ந்த நிறுவனங்களில் தமிழருக்கு வாய்ப்பு அளிக்கப்படாமை. ஆனையிறவு வீழ்ச்சியைத் தொடர்ந்து சில தமிழ் மாணவர் பட்டாசு

**இப் பொய்க் குற்றச்சாட்டுக்கள்**

01. பீடத்தில் புள்ளிவிபரப் புத்தகத்தை மோசடியாக மாற்றினேன்.

02. பாடத்திற்கு வெளியான கேள்விகளை பரீட்சையில் கேட்டு பீடத்தின் தரத்தைக் குறைத்தேன்.

03. துறைத் தலைவருடன் ஒத்துழைக்க மறுத்தேன் என்றும் இதன் விளைவால் என் கேள்வித்தாளில் பிழைகள் இருந்தன என்றும் மேலும் நான் விசாரணையின் கீழ் இருந்தேன் என்றும் சொல்லி என்னை உத்தியோகத்தில் நிரந்தரமாக்கவும் சிரேஷ்ட பேராசிரியராக் கவும் மறுத்து என் மனைவியையும் வேலை நீக்கினார்கள். எல்லாம் தாங்க முடிந்தது. ஆனால் முதலாம் குற்றச்சாட்டு நான் ஒரு தமிழ் மாணவனை 2 ஆம் வகுப்பு மேற்பிரிவிலிருந்து முதலாம் வகுப்பு பட்டதாரியாக மாற்றச்செய்த தென்பது என் சிங்கள நண்பர்களையும் என்மேல் சந்தேகம் கொள்ள வைத்தது.

ஒரு நாள் விரிவுரை முடித்து வந்தபோது ஒரு CID பொலிஸ் அத்தியட்சகர் என் வருகைக் குக் காத்திருந்து தான் சிகல உறுமயவைச் சேர்ந்த குழுவைச் சேர்ந்தவரென்றும் என் பெயர் பல கூட்டங்களில் கோபமாய் பேசப்

கடிதத்தின் பிரதி வரவில்லை.

தமிழராகிய எமக்கு இது சிங்கள வியாதி என்று இப்படிப்பட்ட நடத்தையைத் தட்டி விடுவது சுலபம். ஆனால் சிங்களவர், தமிழர் நாம் யாவரும் இப்படியே. இதேபோல் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கணனிப் பேராசிரியராக விண்ணப்பித்தேன். என் வயதைச்



பேராசிரியர் ரட்ணஜீவன் ஃகூல்

சேர்ந்தோர் படித்த காலத்தில் கணனியியல் ஒரு துறையாக இருக்க வில்லை. ஆகவே உலகெங்கும் அத் துறையை உருவாக்கியவர்கள் ஒன்றில் என்னைப் போல் மின் - கணனிப் பொறியியலாளர் அல்லது கணிதத் துறை சார்ந்தோர்.

மேலும் என் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் பெரும் பாலானவை கணனியியலை சேர்ந்தவை. பேராதனை கணனித் துறையை பொறி யியல் பீடத்தின் கீழ் ஸ்தாபித்து திறந்த பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் 2 வருடகாலம் வேலை செய்துள்ளேன். அப்படி இருந்தும் என்

# திறந்த பல்கலைக்கழகத்தில் அரிசி மூடைகளை ஒரு மைல் தூரம் தூக்கிச் சென்ற எம்மவர்கள்

கொளுத்த அதைத் தொடர்ந்து சிங்கள மாணவர்கள் தமிழரிடம் இருந்து இறந்த இராணுவத்தினருக்கு நிதி சேர்க்க, ஒரு பதட்டமான நிலையேற்பட்டது. வன்னி மாணவர் அனுமதிக் கடிதம் பிந்திக் கிடைத்தால் பீடத்திற்கு பிந்தி வந்ததால் அனுமதி மறுக்கப் பட்டமை போன்றவை. இதில் ஆசிரியராகிய நாம் தலை யிடுவது கஷ்டம்.

திறந்த பல்கலைக்கழகத்தில் (Open University, Colombo) சைவ மாணவர்கள் தைப்பொங்கலைக் கொண்டாட முயன்ற போது அரிசி மூடைகளை வாசலில் இறக்கி சோதித்த பின் தூக்கி ஒரு கட்டை தூரம் நடக்க வேண்டும் என்றார்கள். இதனை மாணவர்கள் சொல்ல, என் மனைவி அப்போதைய தமிழ்த் துணைவேந்தரிடம் இதைப் பற்றிக் கூறிய போது அவர் அன்பாகச் சொன்னது, "பிள்ளை, நாங்கள் இங்கு இருப்பதே கஷ்டம். இவற்றை எழுப்பினால் இருக்கவே முடியாமல் போய்விடும்." இதுவே நிலை.

**கே:** தமிழ் பேராசிரியர் என்ற வகையில் நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் என்ன? கல்வியியலாளர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் என்ன?

ப: பேராதனையில் நான் மாணவர் சார்பாக காவலகம் சென்ற போது பொலிஸார் பேராதனைப் பேரா சிரியர் என்ற பெயருக்கு மரியாதை கொடுத்து 24 மணித்தியாலங் களுக்குள் மாண வரை விடுவித் தார்கள். ஆனால் பல்கலைக் கழகத் தினுள்ளே நான் மேற்கூறிய பிரச்சி னைகளை எழுப் பிய போது என்னை சிங்களவருக்கு எதிரானவர் என்று கருதி 3 வேறு வேறு விசார ணைகளுக்கு உள்ளாக்கினர்.

பட்டதென்றும் சொல்லி, எச்சரிக்கையாயிருக்க வேண்டி கொழும்பு, கண்டி தொலைபேசி இலக்கங்களை அவசரமேற்படின் அழைக்கத் தந்தார். ஒரு தஞ்சத்திற்கு, என்னை வேலை நீக்க முயலும் துணைவேந்தரிடம் ஓட முடியவில்லை. அதிலிருந்து குடும்பத்தை கொழும்புக்கு மாற்றி பகலில் மட்டும் பேராதனைக்கு வந்து சென்றேன்.

மூன்று வருடங்களின் பின் விசாரணைகள் நான் குற்றமற்றவன் என்ற முடிவுக்கு வந்தன. மேலும் நீதிமன்றம் என்னை நிரந்தர பணியாளாக்கி சிரேஷ்ட பேராசிரியராக 3 வருடம் பின் செயலாகச் செய்யும்படி கட்டளையிட்டது. இதைச் செயற்படுத்தவும் நீதிமன்றம் சென்று நீதிமன்றத் தின் எனக்குச் சார்பான முடிவுக்கு பல்கலைக்கழகம் மரியாதையீனமாய் நடந்தது. (Contempt of court) என்ற மனுவை பதிந்துதான், நீதிமன்றக் கட்டளைகள் அமுல் படுத்தப்பட்டன. இதேபோல் மனித உரிமை ஆணைக்குழு என் மனை வியின் வேலை நீக்கத்தை பிழையானது என்று தீர்த்தது.

மார்ச் 2008இல் யாழ். பல்கலைக்கழகத்திற்கு பேராதனைப்

**நேர்காணல்:- க.ஜெயபாலன்**

பல்லைக்கழகம் என்னை 3 வருடத்திற்குக் துணை வேந்தராக இயங்க அனுமதி கொடுத்தது. நான் இந்த 3 வருடம் முடியும் காரணத் தால் டிசெம்பர் 19ஆம் திகதி இலங்கை வந்து என் 7ஆம் வருட விடுமுறையை எடுப்பேன் என்று எழுதி அங்கு சென்றேன். அதே நாள் துறைத் தலைவருக்கு துணை வேந்தரிடம் இருந்து [illegible] அந்தக்

விண்ணப்பம் தெரிவுக்குழுவுக்குப் போடப்பட வில்லை. நான் வழக்கு வைத்த போது வேறு விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் என்னை நியமிக்குமாறு தீர்ப்புத் தரப்பட்டது. பல கடிதங் கள் எழுதியும் அமுல் படுத்தப்படவில்லை. மறு மொழியும் தரப்பட்வில்லை. இந்தத் தமிழ் நிர்வாகம், சிங்கள நிர்வாகம் போன்றதோ அல்லது எமக்கு நியாயத்தோடும் நீதியோடும் நிர்வகிக்க முடியுமா என்பதே தமிழராகிய எம்மை எதிர் நோக் கும் சவால்.

**கே:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக் கப்பட்ட காலங்களுக்கு ஒருமுறை பின்நோக்கிப் பயணிப்போம். அப்போதைய உங்கள் மனப்பதி வுகளை எமது வாசகர்களுக்கு வெளிக்கொண்டு வர முடியுமா?

ப: இது தரப்படுத்தலின் உச்சத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீமா என்றாலேமாணவர் மத்தியில் வயிற்றெரிச்சல். பரமேஸ்வரா, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளை அரசாங்கம் எடுத்து ஒரு சதம் செலவழியாமல் எமக்குப் பல்கலைக் கழகம் தருவதாக செய்ததை ஒரு நாடகமாய்க் கருதி மாணவர் பேரவையும் தமிழரசுக் கட்சியும் திறப்பு விழாவை பகிஷ்கரித்தோம். ஆனால் 1979 மட்டிலான கண்ணோட்டத்தில் அது ஒரு பெரியகாரியமாகும். 1974இல் நாம் மாட்டுக் கொட்டி லாகக் கருதியது 1979இல் நாட்டின் ஒரு பிரதான பல்கலைக்கழகமானது. இதுஎடுத்துக் காட்டுவது என்னவென்றால், சின்னக் காரியங்களிலும் சுய நிர்ணய உரிமையை எடுத்தால் அதைக் கட்டி யெழுப்பலாம் என்பதே. 1987ஆம், 2000 ஆம் ஆண்டுக்குப் பின் 2004ஆம் ஆண்டுகளில் தருணங் களை 'எல்லாம் பூச்சியம்' என்ற கொள்கையின் கீழ் கைவிட்டது எனக்குப் பெரிய கவலை.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதி வாய்ப்பு
## STUDY IN UK

CELEBRATING 8 YEARS

IELTS இன்றி உங்கள் Student VISAவினை பெற்றுக்கொள்ள இன்னும் சில நாட்களே உள்ளன.

3 ½ வருட VISA உத்தரவாதம்.
20மணிநேர பகுதிநேர வேலைவாய்ப்புடன்.

Bank Loans & Sponsor Arrangements

Approved & Accredited By: Quality Study Abroad Network. United Kingdom. Reg.No: QR813997004

Admission From A - Grade Colleges

Hotline: 0778156616



## பணிப்பெண்கள் உடன் தேவை
## மலேசியா நாட்டிற்கு

தமிழ் வீட்டிற்கு தமிழ் பேசும் பணிப்பெண்கள் தேவை

மாதாந்த சம்பளம் RM 650
இலங்கைப் பெறுமதிக்கு Rs. 21,700

பாஸ்போட் உள்ளவர்கள் மற்றும் பாஸ்போட் இல்லாதவர்கள் (உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்)

- ★ மெடிக்கல் (Medical) - இலவசம்
- ★ இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- ★ விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- ★ தங்குமிடவசதி (Accomodation) - இலவசம்
- ★ உணவு (Food) - இலவசம்

Labour Licence No.2422

**Amal Sulthan Travels & Recruitment**
540, 1/1,1/2 (1st Floor), Maradana Road, Maradana, Colombo-10
Tel:011-2691344, 077-3179592



## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1967 ஆம் ஆண்டு, ஆயிலியம் நட்சத்திரம், கிரகபாவம் 38, இளமைத் தோற்றமுள்ள, மணமகளுக்கு நற்குணமுள்ள மணமகன் தேவை. தாரமிழந்தவர்களும் (பிள்ளைகள் இல்லாதவர்கள்) விரும்பத்தக்கது.

விளம்பர இல: 4067 மே/பா உதயன்.

## விற்பனைக்கு

கடைத்தேவைக்குப் பொருத்தமான தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பூராடம் (தனு இராசி) 1978 இல் பிறந்த, உயரம் 5'5'', கொழும்பில் பிரபல வங்கியில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 0775557437

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட மானிப்பாய் வீதி, வண்ணார் பண்ணைக்கு அண்மையில் 4 அறைகளுடன் எல்லா வசதிகளுடன், நல்ல சுற்றாடலில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. சிறுகுடும்பம் விரும்பத்தக்கது. தொ.பே: 0770250339

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.கச்சேரியடியில், கண்டி றோட்டின் மிக அருகில் அலுவலக மற்றும் கல்வி, தொழில் சார் தேவைகளுக்கு தகுந்த அழகான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0775219961
0778890427



## இலங்கை சின்மயா மிஷன்

வழங்கும் "கந்தன் கருணை"

என்னும் தலைப்பில் இலகு தமிழில் உரையாற்ற இந்தியாவிலிருந்து வருகை தருகிறார்

சுவாமி சிருஞானாத்மானந்தா

இடம்: நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்
காலம்: 06.09.2010/07.09.2010
மாலை 6.30 முதல் 7.30 மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வி.சத்தியநேசன்,
36, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
தொ.பே.: 0212226196, 0777730708

அனுமதி இலவசம்!



## அவசர பொதுக்கூட்டம்
## UJTA/USTA/FMTA

காலம்: நாளை (06.09.2010) திங்கட்கிழமை
நேரம்: முற்பகல் 11 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கம்
விடயம்: FUTA - தொழிற்சங்க நடவடிக்கை நிர்வாகப் பதவிகளில் இருந்து விலகுதல்.

அனைத்து பீட ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

| | | |
|---|---|---|
| பேராசிரியர் செ.இளங்குமரன் தலைவர் UJTA | கலாநிதி செ.சிவசுப்பிரமணியம் செயலாளர் UJTA | கலாநிதி பூ.அபிமன் செயலாளர் JUSTA |



## Auto A/C வாகன குளிரூட்டி



சகல திருத்த வேலைகளுக்கும் பொருத்துதல்களுக்கும் விசேட நிபுணத்துவம் பெற்றவர்கள்

1 நாள் சேவை

**Ranco Air Conditioning Services**
No. 12, Wasala Road, Dehiwala.
T.P. 2737274, 0777-487788
வில்லியம் கிரைண்டிங் மில்லுக்கு எதிரே



## IELTS தகைமை இன்றி UK, A தர கல்லூரிகளில் 7 நாட்களில் அனுமதிகள் பெற்றுத் தரப்படும்.

அடிப்படை தகைமை G.C.E O/L மட்டுமே.
Hotline:
0713 588 266
Offer Valid Until: 18. 09. 2010


## 6 ஆம் மாத நினைவினில்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 | 05 |
| ★ | ★ |
| 06 | 03 |
| ★ | ★ |
| 1942 | 2010 |

**இரத்தினம் கந்தவனம்** (ஓய்வுபெற்ற PHI)

விழி தன்னில் கண்ணீர் மல்கி
அரையாண்டு ஆனதப்பா
ஆண்டுகள் பல சென்றாலும் - எம்
கண்ணில் உம் அன்பு - ஆறாய்
பெருக்கெடுத்து ஓடும் அப்பா.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

11, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.


## சிறுநீரகம் தேவை

சிறுநீரகம் பாதிப்படைந்த நோயாளிக்கு "O" பொசிடிவ், குருதி இனத்தைச் சேர்ந்த சிறுநீரகம் தேவைப்படுகின்றது. சிறுநீரகம் வழங்குபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். விரும்புபவர்கள் 0112501499, 0777789130 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## மாடி வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதி, ஆசிர்வாதம் லேனில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0789148913



## Need For Software Dealers

கொழும்பில் முன்னனி வகிக்கும் நிறுவனம் தற்பொழுது புதிதாக அறிமுகப்படுத்துகிறது atACC (Indian Software)

- Accounting & Inventory Software
- Pharmacy Software

for Small, Medium & Trading Companiesகளுக்கு ஏற்ப மிகக் குறைந்த விலையில்

யாழ்ப்பாணம் முழுவதும் சந்தைப்படுத்துவதற்கு விற்பனை முகவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

I Tech Vision (Pvt) Ltd
40-2/2A, Galle Road, Colombo-06
TP: 011-2508505, 011-5666417, 011-5666356


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 | 06 |
| ★ | ★ |
| 11 | 08 |
| ★ | ★ |
| 1927 | 2010 |

**திருமதி அன்னம்மா இராஜேந்திரம்**

குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் அன்புத் தெய்வமே!
மாதம் ஒன்று சென்றது அம்மா
மாறவில்லை எம் துயரம்
அன்னையாய் தந்தையாய் எமை வளர்த்து
அன்பையும் பண்பையும் ஊட்டி
இப் புவிதனில் நாம் வாழ
வழிகாட்டிய எம் அன்பே!
பாசமழை பொழிந்த உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டு நீங்காதம்மா...!

உங்கள் அன்புள்ளங்களான:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

66/1, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


## B.Sc. in Computer Science

நீங்களும் ...... கணினிப்பட்டதாரியாக அரிய வாய்ப்பு!

A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன!

Level I Diploma in Computer Science
Level II Advanced Diploma in Computer Science
Level III B.Sc. in Computer Science

Duration: 2 - 2 1/2 Years
Qualification: O/L or A/L or HND




மேற்படி கற்கைநெறியினை ஒவ்வொரு பகுதியாக (LEVEL) பூர்த்தி செய்யக்கூடியவாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் உங்கள் பட்டதாரியாகும் முயற்சியை பாடசாலை மட்டத்திலிருந்தே ஆரம்பிக்க முடியும்.

ஆம்!

ஓர் மாணவன் O/L தகமையுடன் Diploma Level இணையும் பின்பு Advanced Diploma Level இணையும் பின்பு B.Sc. in Computer Science இணையும் பயில முடியும்.

**NORTH LANKA IIT (Pvt.) Ltd.**
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna. Phone : 0213214305


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 வருடங்களுக்குள் வடக்கு - கிழக்கில் ரூ.21 மில்லியன் செலவில் அபிவிருத்திப் பணி

## 'நிக்கொட்' நிறுவனம் மேற்கொண்டுள்ளது

யாழ்ப்பாணம்,செப்.5

'நிக்கொட்' நிறுவனம் கடந்த 10 வருடங்களுக்குள் வடக்கு - கிழக்கில் 21 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 3 ஆயிரம் ரூபா மில்லியன் செலவில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'நிக்கொட்' நிறுவனத்தின் உயர் அதிகாரியொருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு;

கடந்த முப்பது ஆண்டுகளாக இடம்பெற்றிருந்த கொடிய யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பெருமளவான சொத்துக்கள் சேதமடைந்திருந்தன. அத்துடன் அபிவிருத்திப் பணிகள் செய்ய முடியாத சூழ்நிலையில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபடும் அரசசார்பான பொது நிறுவனங்கள் காணப்பட்டன.

இந்நிலையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை 'நிக்கொட்' நிறுவனம் மேற்கொண்டது.

இதன் பிரகாரம் கடந்த 10 வருடங்களுக்குள் வடக்கு - கிழக்கில் 21 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துள்ளது.

இதில் வைத்தியசாலை, பாடசாலை எனப் பல்வேறு அரச நிறுவனங்களில் அபிவிருத்திகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 3 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார். (9)

### ரமழான் சிந்தனை

அடுத்ததாக குர்-ஆனுடனான தொடர்பு ரமழான் குர்-ஆனின் மாதம்! நோன்பு, தொழுகை, ஸக்காத் எல்லாமே ஏதாவது ஒரு வகையில் குர்-ஆனைச் சுற்றியே அமைந்துள்ளன. அல்லாவின் இல்லத்தில் அவர்முன் கைகளைக் கட்டிக் கொண்டு பணிவுடன் அவரது வார்த்தைகளைக் கேட்பது எத்தனை பெரிய நற்பேறு தெரியுமா? மாதம் முழுதும் விடாமல் தராவீஹ் தொழு தால் குர் - ஆன் முழுவதையும் கேட்டு விடலாமே! அதே சமயம் வீட்டில் அன்றாடம் ஒரு பாகம் ஓதி வரலாம். அல்லது அரைப் பாகமாவது ஓத வேண்டும்.

எம்.ஏ.காதர்

# வரி கட்டத்தவறும் வர்த்தகர் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

மூளாய்,செப்.5

வலிகாமம் மேற்கில் வரிகட்டத் தவறும் வர்த்தக நிலையங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சட்ட நடவடிக்கைக்கான ஆரம்ப ஏற்பாடுகளை வலிகாமம் மேற்கு பிரதேசசபை மேற்கொண்டு வருகின்றது.

இப்பகுதியில் இயங்கும் பல வர்த்தக நிறுவனங்கள் கிரமமாக வரி செலுத்துவதில்லை. இவ்விடயம் குறித்து வலி. மேற்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெறற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் போதே மேற்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்வது என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. (த-99)

# வெங்காயத்தைப் பாதுகாப்பதற்கு இரவில் காவல் செய்யும் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,செப்.5

நீர்வேலி, கோப்பாய் பகுதித் தோட்டங்களில் வெங்காய அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் அதனை பாதுகாப்பதற்காக இரவு வேளையில் காவல் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதிகளில் உள்ள தோட்டங்களில் அறுவடை செய்து உலர வைக்கப்பட்ட வெங்காயங்களைத் திருடர்கள் இரவு வேளைகளில் களவாடிச் செல்வதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருடர்களின் கைவரிசையை முறியடிக்கும் வகையில் விவசாயிகள் தமது தோட்டங்களில் லாம்புகளுடன் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். (த-26)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.5

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு எஸ்.கணபதிப்பிள்ளையின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

எஸ்.கோபிதாஸ் வயலினும், எம்.சிதம்பரநாதன் மிருதங்கமும், செல்வன் என்.மாதவன் கடமும், என்.சதீஸ்குமார் முகர்சிங்கும் வாசிப்பர்.

மேலதிக நிகழ்வாக செல்வி பரமேஸ்வரி கணேசனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். கே.குகபரன் வயலினும் வீ.ரமணா மிருதங்கமும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று பி.ப 3 மணிக்கு 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்னும் தலைப்பில் செல்வி கதிரவேலு சிவயோகராணியின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

சீரணி நாகம்மாள் அறநெறிப் பாடசாலை, மருதனார் மடம் சிவசாயி சித்திரக்கோட்ட அற நெறிப் பாடசாலை, ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (201)

* * *

நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திருஞானசம்பந்த குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா 'அர்ச்சுனன் தபசு' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (201)








# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## ஆறுதலை(க்) காட்டுமையா!

வள்ளி தெய்வ யானையோடு
வந்து அருள் தருபவனே,
எள்ளி நகை யாடுவோரை
எரித்த ழிக்கும் இளையோனே
உள்ளி ருக்கும் வேதனைகள்
உன்னி டமே சொல்லவந்தோம்
அள்ளி வரம்தந் திடையா,
ஆறுதலை(க்) காட்டு மையா!

-இரா.சிவசக்தி-

## 'பச்சை மயில் ஏறி வந்திடப்பா முருகா'

நம்பிக்கை கொண்டாருக்கு நலமருளும் நல்லூரா!
சரவணப் பொய்கையில் தோன்றிய ஆறுமுகா!
அம்பிகையின் புதல்வனே ஞான வடிவேலா!
கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்த கார்த்திகேயா!
தந்தைக்கு உபதேசம் செய்த சற்குருவே!
ஆனைமுகனின் தம்பியே குமரா!
தேவியர் இருவரின் மணவாளனே கந்தா!
அசுரரை அழித்து தேவரைக் காத்த கடம்பா!
நல்லூர் பதியில் குடி கொண்டவனே வேலவா!
எங்கள் குறைகளை தீர்த்திட பச்சை மயில் ஏறி..
வந்திடப்பா முருகா!

தம்பிமுத்து சங்கீதா
யாழ்ப்பாணம்.

## வேதனை தீர்க்க வரவேண்டும்

கன்னித் தமிழ் பருகும் கதிர்வேலா
கனவுகளைச் சுமக்கும் எமைப் பாராய்
நல்லூர் தனில் அமர்ந்த திருக்குமரா
தவித்துமே வாடும் எமைக் காப்பாய்
அல்லும் பகலும் துயர் சூழ்ந்தபோது - நாம்
அழுதோம் உனையே நினைத் துருகி
வெல்லும் நிலை நீ அருள வேண்டும் - எம்
வேதனை தீர்க்க நீ வர வேண்டும்

செ.யசோதாயினி
டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி.

## பரிவுடன் அணைத்திடுவாய் பன்னிரு கரத்தவனே!

'சிற்பரன் சோதரன்
சிங்கார வேலவன்
நற்பதி நல்லையில்
நடமிடும் நாயகன்
வேற்படை கொண்டவன்
வெஞ்சமர் கண்டவன்
வெற்றிவாகை சூடி
வீரனாய் நின்றவன்
சிற்றிடைப் பெண்ணவள்
சிங்காரி வள்ளி
சுற்றியே அவளைத் தன்
சொந்தமாய்க் கொண்டவன்
பற்றிடப் பதந்தனை
பாவங்கள் தீர்த்தெமை
பரிவுடன் அணைத்திடும்
பன்னிரு கரத்தவன்!'

தேவிகணேஸ்
இராசாவின்தோட்டம்.

## சங்கத் தமிழ்ப் புலவா சாற்று

எத்தனையோ ஆண்டுகளா யிந்நிலத்தே வாழ்ந்திடுவோர்
பக்திசெய்தே யுன்னைப் பரவுகின்றார் - புத்தியுள்ள
எங்கள் தமிழினத்தி னேக்கத்தைத் தீர்ப்பதெப்போ
சங்கத் தமிழ்ப்புலவா சாற்று

நல்லைப் பதியுறை நாயகமே நம்மினத்தின்
அல்ல லகல அருள்புரிவீர் - நல்லரசை
இந்நாட்டி லேற்படுத்தி யின்னலைநீ தீர்ப்பதற்கு
எந்நாட் குறித்தீ ரியம்பு

சி.வெற்றிவேலு
வட்டுக்கோட்டை.

## அருள் தருவாய் முருகா!

நல்லைப் பதி முருகா- எம்
தொல்லைகள் நீக்கும் கந்தா
நாடிவரும் பக்தர் தம்
குறைதீர்க்க ஓடி வாராய்
ஆழிப் பேரலைகள் வேண்டாம்
அகோர யுத்தமும் வேண்டாம்
அங்குமிங்கும் அலைந்திடும்
அகதி வாழ்வும் வேண்டாம்
கூழேதான் குடித்தாலும்
சிறு குடிலில் வாழ்ந்தாலும்
நிம்மதியாய் நாம் வாழ
நீ அருள் தந்திடுவாய்.

அ.ஜென்சி
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES

1. MEDICAL OFFICER
   MBBS/RMO (FULL TIME)
2. TRAINEE PHARMACIST
3. TRAINEE MLT

APPLY TO,
MEDICAL DIRECTOR
CENTRAL NURSING HOME (PVT) LTD,
350, PALALY ROAD,
JAFFNA.
TEL.PHONE: 021 222 2263


## விளம்பரப் பலகைகள் நாட்டுவதற்குத் தடை

வேலணை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி விளம்பரப் பலகைகள் நாட்டுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் முன் அனுமதியின்றி ஏற்கனவே விளம்பரப் பலகைகள் நாட்டியுள்ளவர்கள் உடனடியாக பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவ்வாறு தவறும் பட்சத்தில் விளம்பரப் பலகைகள் பிரதேச சபையினால் அகற்றப்படும். அத்துடன் உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் வேலணை பிரதேச சபையின் செயலாளர் கே.தவராசா அறிவித்துள்ளார்.

(த-15)

## மோ.சைக்கிளிலிருந்து தவறிவிழுந்து குடும்பப் பெண் காயம்

தென்மராட்சி, செப் 5

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப் பெண் தவறி விழுந்து தலையில் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

கைதடி-நுணாவிலைச் சேர்ந்த லோகதாசன் யாழினி (வயது-37) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (த-207)


Your Future
**STUDY in UK**
UKRAINE, NEWZELAND, INDIA, CYPRUS
INTAKES @ September, October, November



- MBBS, MS, MD [Ukraine, India]
- COMPUTING & IT
- BUSINESS & MANAGEMENT
- ACCOUNTING & FINANCE
- TRAVEL & TOURISAM
- DESIGNING & ARCHITECTURE
- ENGINEERING
- HOTEL MANAGEMENT
- LANGUAGE & EDUCATION

Also Handling:
- Tourist Visa
- Visit Visa
- Dependent Visa
- Administrative Review
- Re-Apply

Our Services for Students:
- Visa Consulting
- Career Advice
- Scholarship
- Accommodation
- Air Ticket
- Airport Pick-Up

Minimum Entry Qualification: O/L or Equivalent

SPONSOR களுக்கான ஆலோசனைகள் வழங்கப்படும்

SIEC SRI LANKAN INTERNATIONAL EDUCATION CENTER

| Jaffna Office: | Kotahena Office: |
|---|---|
| 111/2, Brown Road, Kokuvil East, Jaffna | 169, George R De Silva Mawatha, Kotahena, Colombo-13. |
| Tel:021-2221875 | Tel: 011-2434989, 011-2434767 |

After Office Hours & Sundays Please Contact - 077 3502612



## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை Courts Road இல் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 6 பரப்பு 6 குழி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 011 2360220



## PROJECT OFFICER: NORTH-EAST

Responsible for Administration/ Operations/ Transport. With a proven achievement record. Person of good integrity and reforms. Retired Active Person may apply.

KG INVESTMENTS LTD,
545, SRI SANGARAJA MAWATHA,
COLONBO-10
E-MAIL: ronal.herft@yahoo.com



## பணியாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கிவரும்-எமது நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை. தகுதியுடையவர்கள் எதிர்வரும் 15.09.2010 இற்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. விற்பனை பிரதிநிதி (D.S.R)
2. விற்பனையாளர் (D.S.I. SHOW ROOM)
3. எழுதுவினைஞர் (பெண்கள் மட்டும்)

அனுப்ப வேண்டிய முகவரி:

சுப்ப சூஸ்
434, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி வரதலட்சுமி வைற்றஸ்

[இளைப்பாறிய தேசிய உப்புக்கூட்டுத்தாபன நிர்வாக உத்தியோகத்தர்]



அரியாலை, புறூடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் இல.198, கண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலட்சுமி வைற்றஸ் நேற்றுமுன்தினம் (03.09.2010) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற றொட்ரிகஸ் மற்றும் சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகளும் வைற்றஸ் (நிறைவேற்று உதவியளார், மாந்தை உப்புக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அருமைத்துணைவியும் சுகன்யா ஜெயராம் (ஜேர்மனி), பிரியந்தன் (டுபாய்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயராம் இராசையாவின் (ஜேர்மனி) பாசமிகு அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவயோகேஸ்வரன், உமாமகேஸ்வரி மற்றும் யோகானந் தன் (மகாவலி அபிவிருத்திச் சபை), கணேஷானந்தன் (லண்டன்), குகானந்தன் (டுபாய்), திருலோசனி, பத்மலோசனி (லண்டன்), கிருபாகரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற குமாரத்தியாளன் மற்றும் யோகாதேவி (லண்டன்), யமுனாதேவி (லண்டன்), ராஜலட்சுமி, வசந்தி (டுபாய்), வசந்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கெவின் (ஜேர்மனி), ஹென்றி (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துபார்த்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

198, கண்டிறோட்,
யாழ்ப்பாணம்.
0729585974 (102913)

தகவல்:
வைற்றஸ் (கணவர்),
பிரியந்தன் வைற்றஸ் (மகன்)

## 31ஆம் நாள் நினைவு

| அன்னை மடியில் | | மண்ணின் அடியில் |
|---|---|---|
| 01 ★ 01 ★ 1964 | | 06 ★ 08 ★ 2010 |



### அமரர் சுப்பிரமணியம் நவரத்தினம் (நவம்)

(உரிமையாளர், நவம் களஞ்சியம், சாவகச்சேரி)

பாரினில் அவதரித்து பார்புகழ வாழ்ந்து
பலகதைகள் பேசி, பலரை மகிழவைத்து
நவரசம் கலந்த பகிடிகளால் மக்கள் மனம் கவர்ந்து
வாழ்ந்து வரும் வேளை பரமன் உனை அழைத்ததேனோ!
எங்கள் கண்ணீரை உதிர்த்து காணிக்கையாக்குகின்றோம்.

கடந்த 06.08.2010 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் [03.09.2010] வெள்ளிக்கிழமை கீரிமலையில் நடைபெற்று, வீட்டுக் கிருத்தியம் இன்று [05.09.2010] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (101754)

மனைவி, சகோதரர்கள்
குடும்பம்.


## குறைந்த கட்டணத்தில் சென்னை செல்ல

| | செல்ல மட்டும் | சென்று திரும்ப |
|---|---|---|
| சென்னை | Rs.6,365/- | Rs. 13,054/- |



• 37Kg பொதிகள் அனுமதிக்கப்படும்

15 அல்லது அதற்கு மேல் குழுவினராக செல்பவர்களுக்கு விசேட விலையில்.

AIR-INDIA express

www.airindiaexpress.in

FLEX Graphic

The World of Hayleys Showroom
இல.47 14/1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 2221310


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் முத்தம்மா சின்னத்துரை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08.10.1933 | 27.08.2008 |

தூக்கமும் கண்களை
தழுவட்டுமே
அமைதி உன் நெஞ்சைத்
தொடரட்டுமே
தூக்கமும் துயரமும் நாமானால்
தொடர்ந்திருப்போம் என்றும்
துணையிருப்போம்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி. (102916)

என்றும் அன்புடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நீங்கா நினைவலைகள்

| முதலாம் ஆண்டு | 5ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு |
|---|---|---|







| கந்தையா வைரமுத்து | திருமதி செல்வமணி வைரமுத்து | திருமதி தர்மலிங்கம் இராசலட்சுமி |
|---|---|---|
| பிறப்பு: 05.03.1932 → | 03.05.1935 → | 16.11.1951 |
| இறப்பு: 15.09.2009 → | 25.05.2005 → | 28.05.2009 |

திதி: துவாதசி

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வங்களே!
ஆண்டு ஒன்று ஆனாலும்-உங்கள்
இன்முகத்தின் புன்சிரிப்பும் இனிய வார்த்தைகளும்
என்றும் மறவோம்-அப்பா
துன்பத்தில் உங்கள் தோள் சாய்ந்தோம்-அம்மா
இன்பத்திலும் உங்களுடன் கலந்தோம் -அக்கா
எமைவிட்டு மறைந்து ஆண்டுகள் ஆனாலும்
என்றும் மறையாது உங்கள் நினைவுகள்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆதி காளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில். (102920)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பீடத்தின் 32ஆம் அணி மாணவி

**செல்வி ஜனனி பஞ்சாட்சரம்**

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவ மாணவர் ஒன்றியம்
(102972) யாழ்.பல்கலைக்கழகம்

## மரண அறிவித்தல்

### குஞ்சாண்டி வேலாயுதம்

முடக்காடு, நெல்லியடியைச் சேர்ந்த கு.வேலாயுதம் 03.09.2010 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராஜேந்திரம் (இந்தியா), செல்வராசா, சூரியநேசன், செல்வராணி ஆகியோரின அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக புதுத்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முடக்காடு,*
*நெல்லியடி.* (சி/570583) தகவல்: குடும்பத்தினர்.

## செந்தில் கதிர்வேலாயுதர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்.திரு வண்ணை நகர் கதிரேசன் கோயில் என வழங்கும் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.20 மணி தொடக்கம் 8.40 மணிவரையுள்ள சுபநேரத்தல் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, யாக வழிபாடு 7.25 மணிக்கு ஸ்தூபிகள் கோபுர கும்பாபிஷேகம் என்பன நடைபெற்று மாலை 4மணிக்கு சுவாமி வீதியுலா வருவார்.

நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை 4 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

(ஒ-204)

## கார் விற்பனைக்கு

ஒரு கைப் பாவனையிலுள்ள சில்வர் நிறமுடைய ரொயாரா வொய்ஸ் - 2005 (TOYOTA VIOS - 2005) KI 9XXX இலக்கம் FULLOPTION - MANUAL கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773690320

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 50 வயதுடைய சொந்தக் கடை தொழில் அதிபருக்கு 35-40 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சைவபோசனம் விரும்பத்தக்கது. படம் குறிப்பு மற்றும் விவரங்களுடன் raam97@gmail.com இற்கு உடன் அனுப்பிவைக்கவும். தொ.பே. 0212227217

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமுத்து நவரட்ணம்



கெருடாவில் தெற்கு, தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமுத்து நவரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை) கடந்த வெள்ளிக்கிழமை (03.09.2010) காலமானார்.

அன்னார் நவரட்ணம் (ஓய்வுபெற்ற மீன்பிடிப் பரிசோதகர்),அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - செல்லமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருமதி தங்கமணி மற்றும் வைரமுத்து, திருமதி இராஜேஸ்வரி வைரமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராகவன், ராகினி (கனடா), ராகுலன் (கனடா), ராசேந்திரன்(கனடா), ரஞ்சினி (கனடா), நந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தங்கராணி, தேவகாந்தன்(கனடா), நந்தினி(கனடா), லலிதாராணி(கனடா), சிறீதரன்(கனடா), ராஜ்குமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிலாசன், நிசாந்தன், கனடாவில் வசிக்கும் லசிகலா, கம்சப்பிரியா, பீசன், கஜன், அபினயா, தர்சிகா, அஸ்வின், அனுஷன், அபினேஷ், நித்திகா, பிரஷா, பிருந்தா, சுகிர்தன், கோகுல், சுனில் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இமானியின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, செல்லப்பாக்கியம் மற்றும் தர்மராசா, இரத்தினேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(06.09.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கெருடாவில் தெற்கு,*
*தொண்டமானாறு.*
*0771880820* (102971) தகவல்: குடும்பத்தினர்.


## NALIN INFORMATION TECHNOLOGIES Pvt Ltd

நல்லூர் பெருந்திருவிழா நிறைவை முன்னிட்டு கொழும்பு விலையிலும் மிகமிக மலிவான விலையில் கணனிகள் விற்பனை செய்யப்படுகின்றது.

| | PROCESSOR | MOTHER BOARD | RAM | HDD | DVD | CASE/KEY/MOU | MONITOR | PRICE |
|---|---|---|---|---|---|---|---|---|
| SYSTEM 1 | 2.7 Dual Core | INTEL G31 CHIP | 1GB KING (800) | 320GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 46600 /- |
| SYSTEM 2 | 2.7 Dual Core | INTEL G31 CHIP | 2GB KING (800) | 500GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 49750 /- |
| SYSTEM 3 | 2.8 Dual Core | INTEL G31 CHIP | 1GB KING (800) | 320GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 47000 /- |
| SYSTEM 4 | 2.8 Dual Core | INTEL G31 CHIP | 2GB KING (800) | 320GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 50750 /- |
| SYSTEM 5 | 2.93 Core 2 Dou | INTEL G31 CHIP | 2GB KING (800) | 500GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 57500 /- |
| SYSTEM 6 | 1.66 A.M | INTEL G41 CHIP | 2GB KING (800) | 320 GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 37800/- |

கணனிகளுக்கு 3 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன், கொள்வனவு செய்பவர்களுக்கு Free UPS, Speaker, Head Phone வழங்கப்படும்.

**SPECIAL OFFER PRICE**
HEAD PHONE - 250/- - 2000/-
KEY BOARD - 350/- - 3500/-
MOUSE - 250/- - 3800/-
COMPUTER TABLE & CHAIR - 4900/-
HSDPA HUAWEI 7.2 MBPS MODEM - 5950/-
CANNON LIDE 100 SCANNER - 6100/-
PRINTER HP DESKJET D1660 - 4500/-
**HP LASERJET P1102 PRINTER - 16250/- ( FREE i POD)**

இச்சலுகைகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது

hp PRO 2000
MT BUSINESS PC
களை பெற்றுக்கொள்ள முடியும்
Pro - 2.70GHz Dual Core, HDD - 320 GB, Ram - 2GB DDR 3, Monitor - 19" HP
Rs - 67,000/-

NALIN information Technologies Pvt Ltd

195/4, PARAMESWARA JUNCTION, TP: 021 2221166, 0777667974


## எம்மலர் அஞ்சலி



அன்பு, பண்பு, மனிதநேயம் சிவதொண்டு இவற்றின் பிரத்தியட்ச சொரூபமாக எம்மத்தியில் சங்கமித்து எம் இறைபணியில் இரண்டறக் கலந்துகொண்ட தெய்வத் திருமகன்

### அனலை குமரேசன் நிர்மலன்

சிவன் கழல் எய்தியபோதுதிர்த்த கண்ணீர் பூக்களிலான மலரஞ்சலி

மனிதனாக உதித்தது — தெய்வமாக நிலைத்தது

02.06.1985 — 03.09.2010

**எமதாருயிர் தொண்டனே,**

சிவ சின்னம் பறைசாற்றும் நெற்றி
அன்பையே யாசிக்கும் அருள் விழிகள்
ஆதியும் அந்தமும் இல்லா அழகிய புன்னகை
கண்ணனைப் போல் கவர்த்திழுக்கும் களை பொங்கும் இளமுகம்
என்றும் எங்கள் இதயங்களில் வீற்றிருப்பாய் எம் கண்ணா
பரமாத்மா ஆகிவிட்டாய், பணிசெய்து உனை அடைவோம்!

இவ்வண்ணம் நின் சேவையில் நிறைவுற்ற
கருணாலயம் சிறுவர் இல்லம், கரந்தன், நீர்வேலி.
அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லம், திருநெல்வேலி.
கருணாலயம் சிறுவர் இல்லம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
ஆனந்த சாகரம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
ஆனந்த சாகரம், ஹட்டன் ஹில்ஸ், கொட்டகல.
ஆனந்த சாகரா, பம்பலப்பிட்டி.
ஸ்ரீ காமாஷி அம்பாள் தேவஸ்தானம், இராம்நகர், மட்டக்களப்பு.
ஸ்ரீ பாலாம்பிகா அம்பாள் தேவஸ்தானம் முடமாவடி,திருநெல்வேலி.
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம், கொட்டகல.
சுவாமி இராமதாஸர் நிறுவனம், 38/2A ஸ்றபரி கார்டன்ஸ், கொழும்பு -04.
V.P. பரமலிங்கம்- சிவசக்தி குடும்பத்தினர், ஐக்கிய அரசு இராஜ்யம்.

(சி/570600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லைக் கந்தன் அருள் ஆசி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும்
வேண்டி நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

## மாபெரும் தள்ளுபடி விற்பனை.




| | | |
|---|---|---|
| ★ The Oxford Children's Illustrated Encyclopedia | ~~7500~~/= | 3500/= |
| ★ ஆங்கிலம்- தமிழ் சொற்களஞ்சியம் University of Madras | ~~950~~/= | 450/= |
| ★ MEGA Deluxe Dictionary English- Tamil தற்கால சொற்களைக் கொண்ட ஒரே அகராதி | ~~1040~~/= | 800/= |
| ★ University Deluxe Dictionry English- English- Tamil. 21ஆம் நூற்றாண்டின் நிகரற்ற அகராதி | ~~1550~~/= | 950/= |
| ★ Oxford Elementary Learner's Dictionary. | ~~452~~/= | 370/= |
| ★ Oxford Learner's Pocket Dictionry. | ~~385~~/= | 300/= |
| ★ Collins Cobuild English Dictionry. | ~~1950~~/= | 900/= |
| ★ பிரிட்டானியா தகவல் களஞ்சியம் | ~~20000~~/= | 15000/= |
| தமிழர்களின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் படங்கள் கொண்ட தபால் அட்டைகள் விற்பனைக்குண்டு. | ~~50~~/= | 25/= |

கடன் வியாபாரம் கடனட்டைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
காசு வியாபாரம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ், 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



## லிபியாவில் வேலை வாய்ப்பு கட்டட நிர்மாணத்துறையில்

தொழிலாளர்கள் (Labourers)
சம்பளம் US$ 275 = Rs 31,000/=
2 மணித்தியால மேலதிக நேரத்துடன் ரூபா 50,000 இற்கு அண்மித்த சம்பளம் பெறலாம்.
மெக்கானிக் மோட்டர் (Mechanic - Car & Machinery )
சம்பளம் US$. 600 = Rs 67,000

* இந்தக் கொடுப்பனவு 8 மணிநேர வேலைக்காக மட்டுமே. மேலும் எல்லா நாள்களும் கட்டாய மேலதிக நேரவேலை (Over Time) 2 மணிநேரம் வேலை செய்ய முடியும்.
* ஒப்பந்த காலம் 2 வருடங்களாகும்.
* நீடித்துக் கொள்ள முடியும்.
* உணவு தங்குமிட வசதி, வைத்தியவசதி, காப்புறுதி உள்ளடங்கியது.
* வெள்ளிக்கிழமை விடுமுறை வழங்கப்படும்.
* திரும்பி வருவதற்கு விமான பயணச்சீட்டு வழங்கப்படும்.
* அரச அனுமதி பெற்றது.

### ஸ்ரீமாலி மேன்பவர்

இல.241/1, டுப்லிகேஷன் வீதி, கொழும்பு - 03
(கொள்ளுப்பிட்டி சுற்றுவட்ட பாதைக்கு அண்மையில்)
T.P011 2372340, 0775362995



## மாபெரும் புத்தகக் கண்காட்சி

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
08.09.2010 ஆம் திகதி வரை நல்லூர் பின் வீதியில்
அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலய
மைதானத்தில்...

எமது வெளியீடுகளுக்கு விசேட விலைக்கழிவு

காலை 9.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை

சிறுவர் நூல்கள், புலமைப்பரிசில் நூல்கள், பொது நூல்கள், பயிற்சி நூல்கள், கணனி நூல்கள், பாட சாலை உபகரணங்கள், இலக்கிய நூல்கள் மலிவு விலையில்...

பாடசாலை மாணவர்களுக்கு, நூலகங்களுக்கு விசேட விலைக் கழிவு

**காயத்திரி பப்ளிகேசஷன், கொழும்பு**
**011-2727621, 0777892028**



## Migration, Student and Visit Visa

- UK, Canada போன்ற நாடுகளுக்கான Student Visa
  - ⇨ Min. Qualification O/L
  - ⇨ Admission intake 2010 Oct, Nov. and 2011 January.
- Astralia, Canada Business and Migration Visa
  - ⇨ Engineers, Doctors, Accountants, IT and Nursing Degree Holders.
- Sponsor Facilities can be arranged.
- தொடர்பு:- Jaffna - 0774454646 / 0777849853
  82/12 A, Chetty Street,
  Nallur.

வடமராட்சி - 0773696904
தென்மராட்சி -0775143946

(102956)

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No, 22 A, Frankfort Place, Bambalapitiya, Colombo-04, Srilanka.
Tel: 011 2508443 / Mob: 0777849853, 0718246941
Web: www.etbclanka.com E-mail: etbc@etbclanka.com



## விற்பனைக்கு

புதிய Nokia-E63 (Black/Finland) Hand Phone உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 021 3211636


## தவறிவிட்டது

தொல்புரம் மேற்கு சுழிபுரம் என்னும் முகவரியை உடைய சிவானந்தன் சிவபாலன் என்பவரின் தேசிய அ.அ.(840543811V) நல்லூர் கோயிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0778075223 என்னும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

உடுப்பிட்டி மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த கோபால கிருஷ்ணன் துஷாந்தினி என்பவரது தே.அ.அ(875353454) பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவும் அல்லது 0772887670 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் கதைக் கப்பயில.By விக்னேஸ்வரன் ஆச்சாரி (15 வருட அனுபவம்) 426 K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. Tel. 077 6751649



## Personal Class

Bio & Chemistry
Tel. 0778894378



## விற்பனை பிரதிநிதி (Sales Representative) தேவை

இலங்கையில் முதற்றர விற்பனையில் முன்னோடிகளான Vimal Brand தயாரிப்புக்களை யாழ்.குடாநாட்டில் விநியோகிப்பதற்கு 2,3 வருட அனுபவமுள்ள விற்பனை பிரதிநி (Sales Representative) தேவை.
தொடர்புகளுக்கு :-

**S.V.MURUGESU (S.V.M)**
**154, Hospital Road,**
**Jaffna.**
**Tel: 021 222 8899**



## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் $2\frac{1}{2}$ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அருகில்.
தொடர்பு :- 0777111400


## தவறிவிட்டது

யாழ்.பல நோ.கூ. சங்கத்தின் 20ஆம் கிளைக்குரிய சமுர்த்தி நிவாரண முத்திரைகள் இலந்தைக்குளம் வீதியில் உள்ள நாச்சிமார் கோயிலுக்கும் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின் 20ஆம் அல்லது 17ஆம் கிளையில் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு :- 0775141161

## மணமகள் தேவை

இந்து, 1978ஆம் ஆண்டு பிறந்த கொழும்பில் வைத்தியராகப் பணிபுரியும் பாவம்குறைந்த மணமகனுக்கு பெற்றோர் படித்த சிறந்த குடும்பப் பின்னணியுடைய மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு : 0713056366
tkvnt@yahoo.com

ஸ்ரீ பரமானந்தா சிறுவர்
முதியோர் இல்லம்,
வதிரி, கரவெட்டி.

## பதவி வெற்றிடங்கள்

மேற்படி இல்லத்தில் கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

(1) கனரக வாகனச் சாரதி
(2) பெண் சிறுவர்கள் மேற்பார்வையாளர்
(3) முதியோர் பராமரிப்பாளர் (ஆண்/பெண்)
(4) சமையலாளர்

தகைமைகள் :-

- 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
- அந்தந்தப் பதவிகளில் அனுபவம் தேவை.
- சாரதி தவிர்ந்த மற்றையவர்களுக்கு விரும்பின் தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
- தொண்டூதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தர்மகர்த்தா சபையினர்.


## காணி விற்பனைக்கு

மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கு 100m தொலைவில் சிவன் கோயில் Road 9¾ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி. கந்தையா
077 1186548


## நான்காம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 25 - 03 - 1941 |  | 20 - 08 - 2006 |

அமரர் **நடராசா அருளானந்தம்**
திதி: 05.09.2010

*எங்கள் அன்புத் தெய்வமே*
*உங்கள் பசுமையான நினைவுகள்*
*என்றும் எம்மை விட்டு அகலாது*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை வேண்டுகிறோம்.*
*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

அ.சிவதாசன் (மகன்),
ந.சிவராசா (சகோதரன்),
த.நாகேஸ்வரி (சகோதரி).

(102958)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுச்சாமி அன்னம்மா

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி அன்னம்மா நேற்று (04.09.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமியின் மனைவியும் தட்சணாமூர்த்தி, சத்தியபாமா, நவநீதன், சந்திரோதயம் (கிளி), காலஞ்சென்ற ஞானமூர்த்தி மற்றும் அன்பழகன் (கீர்த்தி) ஆகியோரின் அன்புத் தாயும் நாகேஸ்வரி, சந்திரன், வரதாமணி, மோகனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் கிருசாந்தி, சகிலன், கோபகா, சஞ்சீவ், றாஜீவ், விரோஜா, சாருக்சன், கஜீபன், சுபியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சரசாலை கொம்பிக்குளம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(102954)

தகவல் :
குடும்பத்தினர்.

### திருமதி மரியம்மா அந்தோனிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பொன்னம்மா ஆசிரியர்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா ரீச்சர் நேற்றுமுன்தினம் (03.09.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், றெமிஜியூஸ் (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தாயாரும் துஸ்யந்தியின் அன்பு மாமியாரும் அஸ்ரில், லெளறின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான யோசப் (நெசவு மாஸ்ரர்) செல்வம், தங்கப்பொன், கில்லறி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மதுரநாயகம் மற்றும் பத்திமா ஜெயசீலி ஆகியோரின் சிறிய தாயாரும் சதா, ஜேமன், சிங்கன், யூட், லோகசீலன், வோணா, வேவி, ஸ்ரெலா, கிளி, லின்டா, காலஞ்சென்றவர்களான தங்கா, அன்ரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2010) திங்கட்கிழமை நெடுந்தீவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நெடுந்தீவு மத்தியிலுள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மருமகன் - யோசப் கமலநாதன் (வோணா),
விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி,
யாழ்ப்பாணம்.

நெடுந்தீவு மத்தி - 07,
நெடுந்தீவு.

(102965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தன் ஆலய வேல்விமான உற்சவம் நேற்று மாலை அடியார்கள் புடைசூழ இனிதே நடைபெற்றது. முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சகிதம் அடியார்களுக்கு காட்சி கொடுப்பதை முதற்படத்திலும் தங்கரதத்தில் எழுந்தருளி அருள்பாலிப்பதை இரண்டாவது படத்திலும் ஆலய வீதியில் தங்கரதம் அசைந்து வருவதை இறுதிப் படத்திலும் காண்கிறீர்கள்.

(படங்கள் - சுகந்தன்)

# டெங்கை ஒழித்துக்கட்ட களத்தில் குதிக்கும் யாழ். அரச அதிபர் தலைமையிலான குழுவினர்

## அதிகாரிகள் சகிதம் மோசமான பகுதிகளுக்கு நேரடி விஜயம்



யாழ்ப்பாணம், செப்.5

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 14ஆம் திகதி பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

டெங்கு நோய்க் காரணியான நுளம்பின் பெருக்கத்துக்குச் சாதகமாகவுள்ள இடங்களாக ஏற்கனவே இனங்காணப்பட்ட பகுதிகளான காக்கைதீவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சூழல், ரயில் பாதையை அண்டிய கொக்குவில், கோண்டாவில், சுன்னாகம் உள்ளிட்ட இடங்களுக்கு குழுவினர் நேரடி விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர். அதன்மூலம் அந்தப் பகுதியில் நுளம்பின் பெருக்கத்தைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதுதொடர்பாக அந்தந்தப் பகுதிகளுக்குப் பொறுப்பான தரப்புகளுடன் கலந்துரையாடி தீர்வு காண நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலர்கள், பிரதேச சபையின் செயலாளர்கள், மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்டோர் அடங்குவர்.

மாவட்ட மட்ட டெங்கு நோய்த் தடுப்பு செயலணிக்குழுவின் விசேட கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-14-09)

## அனுமதியின்றி பெற்றோல் விற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 5

அனுமதிப் பத்திரமின்றி வர்த்தக நிலையத்தில் பெற்றோல் விற்பனைக்கு வைத்திருந்த கல்வயல் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாகச்சேரி பொலிஸார் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரிக்க நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு வாரம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஒ- 207)

## சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சபையினரின் தலையீட்டால்

# வடமராட்சி கடற்பரப்பில் வான் பாதை புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப்.5

வடமராட்சிக் கடற்பரப்பில் மீனவர்கள் தொழில்புரியச் செல்வதற்கு வசதியாக மேற்கொள்ளப்பட்டு வந்த, படகுகள் உள் வந்து வெளிச்செல்லும் (வான் பாதை) புனரமைப்புப் பணிகள் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சபையின் தலையீட்டால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் சமாசத் தலைவர் அ. எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போர்க் காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைககள் காரணமாகவும், நிஷா புயல் அனர்த்தத்தாலும் மீனவர்களின் படகுகள் சென்றுவரும் 'வான்' பாதையில் கற்கள் நிரம்பியிருந்தன. இதனால் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். எனவே குறித்த 'வான்' பாதையைப் புனரமைத்துத் தருமாறு மீனவர்கள் கோரி வந்தனர். இந்நிலையில் வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கச் சமாசம், பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சின் நிதி உதவியுடன் 'வான்' பாதையை புனரமைத்து வந்தது.

எனினும் 'வான்' பாதையை புனரமைத்து, ஆழமாக்குவதற்குரிய அனுமதி பெறப்படவில்லை என்று தெரிவித்து சுற்றுச்சூழல் அபிவிருத்தி அதிகார சபையினர் குறித்த பணியை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தி உள்ளனர். இதனால் கடந்த மூன்று நாள்களாக வான்பாதைப் புனரமைப்புப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வான்பாதை புனரமைக்கப்படாததால் வடமராட்சிப் பிரதேச மீனவக் குடும்பங்களின் வாழ்வாதார நிலை கேள்விக்குறியாகி உள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்து வான் பாதைப் புனரமைப்புப் பணிகளை மீள ஆரம்பிக்க உதவ வேண்டும் என்று தெரிவித்தார். (ஒ-எ)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் வியாழன்று பாரதி விழா

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் ''பாரதி விழா'' எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக, தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்துகொள்வார். ஆசியுரையை அதி.வண.கலாநிதி எஸ்.ஜெபநேசனும் தொடக்கவுரையை கல்லூரியின் முதல்வர் என்.ஏ.விமலேந்திரனும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ15)

## அந்தணர்களுக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 5

வலி.மேற்கு காரைநகர் பிரதேச அந்தணர்களுக்கான கருத்தங்கு ஒன்று சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தால் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு, சித்தன் கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் சிவஸ்ரீ சபா. வாஸுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-15- 29)

## உத்தமர் காந்திக்கு யாழ்.நகரில் நேர்ந்த கதி!




யாழ்ப்பாணம், செப். 5

யாழ்நகரில் ஆஸ்பத்திரி வீதியில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மாகாந்தியின் திருவுருவச் சிலையில் பொறிக்கப்பட்டுள்ள விளம்பர அறிவிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகர முதல்வரிடம் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாநகர முதல்வருக்கு அகில இலங்கை காந்திசேவா சங்கச் செயலாளர் வி.ஜி.தங்கவேல் அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மணிக் கூட்டுக் கோபுரத்துக்குச் செல்லும் சந்தியில் அகிம்சாமூர்த்தி காந்தியடிகளின் திருவுருவச் சிலை கடந்த காலத்தில் பெரியோர்களால் நிறுவப்பட்டு யாழ். நகருக்கு அழகு சேர்க்கப்பட்டிருந்தது.

ஆனால் மிக அண்மையில் காந்தி சிலைக்கு வர்ணம் தீட்டியவர்கள் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களை மூடித்தீந்தை பூசியுள்ளதுடன் தமது நிறுவனத்தின் பெயரையும் கீழ் பகுதியில் விம்பரப் படுத்தி உள்ளனர்.

இதனை காந்தியின் அன்பர்களால் ஏற்றுக்கொள்ளமுடியா[illegible] அகற்றுவதற்கு நட[illegible] எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ-6-16)

# தல விருட்சத்தில் வெள்ளை நாகம் ஆர்வத்துடன் பார்வையிடும் மக்கள்

## கோப்பாய் மத்தி காளி கோயிலில் வழிபாடு

கோப்பாய், செப். 5

கோப்பாய் மத்தி காளிகோயில் ஆலய விருட்சத்தில் வெள்ளை நாகம் ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் பூசைகளில் காட்சியளிப்பதாக இதனை நேரடியாக பார்த்தவர்கள் கூறினார்கள்.

அதிசயமான இந்த வெள்ளை நாகத்தை ஏராளமான பொது மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். இந்த நாகப்பாம்பு அவ்வப்போது காட்சியளிப்பதால் பொதுமக்கள் இதனை பார்வையிடுவதற்காகக் காத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

மேலும் விசேட பொங்கல் வழிபாடுகளை நிறைவேற்றுவதில் பக்தர்கள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் எமது செய்தியாளர் அறிவிக்கின்றார். (ஒ-க-72)

# மாகாண நன்கொடை வேலைத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த அனுமதி

யாழ்ப்பாணம், செப். 5

மாகாணத்திட்டமில் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் மாகாண நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் வீதிப்புனரைப்புப் பணிக்கு உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாகாண நன்கொடை வேலைத் திட்[illegible] யாழ். மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இணைந்த அபிவிருத்தி மண் அகழ்வு முகாமைத்துவம், பிரதேசங்களிலுமுள்ள கிராம வீதிப் புனரமைப்புப் பணிகள் என்பவற்றை நடைமுறைப்படுத்த அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, கடந்த சில வருடங்களாக மாகாண நன்கொடை வேலைத் திட்ட துக்கான அனுமதியும் ஒதுக்கீடும் யாழ். மாவட்டத்துக்கு இடைநிறுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ-315-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு தீர்வினைக்காண கூட்டமைப்பு விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்

கொழும்பு,செப். 5

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும்விடயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இன்றைய கால மாற்றத்தை உணர்ந்து சில விட்டுக் கொடுப்புகளுக்கு தயாராக வேண்டும் என்று இந்தியா சென்றுள்ள ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க சென்னையில் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் சம்பந்தப்படுகின்ற அனைத்துத் தரப்பினருக்கும் ஒத்துழைப்பு வழங்க ஐ.தே.கட்சி தயாராக உள்ளது. நாம் தீர்வை வரவேற்கின்றோம். அதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை அரசு, இந்திய அரசு உட்பட சம்பந்தப்படுகின்ற தரப்பினருக்கும் ஆதரவு வழங்கத் தயாராகவே இருக்கின்றோம்.

வட மாகாணசபைத்தேர்தல்எப்போது நடத்தப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பிகள் 14 பேரும் ஒரு மனதாகத் தீர்மானிக்க வேண் டும்.

வட மாகாணத்தில் இயல்பு நிலை மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்காக உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் வட மாகாணத்துக்கு மிக மிக அவசியம். அகதி முகாம்களின் நிலை திருந்தி உள்ளது. ஏனெனில் அங்கு தங்கி இருந்த அநேகர் வெளியேறி விட்டார்கள்.ஆனால் அடுத்த மாதம் மாரி காலம் தொடங்குவதால் மீள் குடியமர்ந்த இடங்களில் தங்கமுடியாமல் அவர்களில் சிலர் முகாம்களுக்கு திரும்ப வரக் கூடும் - என்றார். (எ)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று நிறைவேறுவது உறுதியாகிவிட் டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச தரப்பைச்சேர்ந்த எம்.பிக்கள் 144 பேர் அண்மையில் கட்சி தாவிய திகாம்பரம், பிரபா கணேசன் மற்றும் ஐ.தே.க.விலி ருந்து ஆதரவு தெரிவித்துள்ள ஏர்ள் குண சேகரா, லக்ஸ்மன் செனவிரத்தின, உபேஷா சொர்ணமாலி,மனுஷா நாணயக் கார, ரங்கபண்டார, மொஹிதீன் அப்துல் காதர் உள்ளிட்ட எம்.பிக்களுடன் இன்னும் சில ஐ.தே.க எம்.பிக்களும் இந்த அரச மைப்புச் சட்டத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக அரச தரப்பு வட் டாரங்கள் நேற்றிரவு தகவல் தெரிவித்தன.

புத்தளம்,காலி, கண்டி, கம்பஹா ஆகிய தேர்தல் மாவட்டங்களைச் சேர்ந்த மற்றும் சில ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்னும் இரண்டொரு நாள்களில் அரசுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து அரசமைப்புத் திருத்த சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களிப்பர் என்றும் தெரி விக்கப்பட்டது. (அ-எ)

## சச்சின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமை சேர்த்தமைக்காகவே டெண்டுல்கருக்கு இக்கௌரவம் வழங் கப்பட்டதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை 1983 இல் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வெல்ல முக்கிய காரணியாக விருந்த அப்போதைய அணித் தலைவர் கபில்தேவுக்கு இராணுவத்தில் லெப்ரினண்ட் கேணல் விருதினை 2008ஆம் ஆண்டு இந்திய அரசு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (எ)

# முன்னாள் புலி உறுப்பினர்கள் 508 பேர் வவுனியாவில் பெற்றோரிடம் கையளிப்பு

அரசினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களான 508 இளைஞர், யுவதிகள் நேற்று சனிக்கிழமை பெற்றோரிடம் கையளிக்கப்பட்டார்கள்.

வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் விஜித முனி சொய்சா கலந்து கொண்டார். 508 பேரையும் அவரவர் பெற்றோரிடம் பிரதி அமைச்சர் ஒப்படைத்தார். விடு தலை செய்யப்பட்டவர்களில் 246 போ அண்மையில் இடம் பெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி யவர்கள் ஆவர்.

விடுவிக்கப்பட்டவர்களில் மூன்று மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் மணம் முடித்து வைக்கப்பட்ட 50 தம்பதிகளும் அடங்குகின்றார்கள். இராணுவத்தினரிடம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப் பினர்கள் 11 ஆயிரம் பேர் சரண் அடைந் திருந்தார்கள் என்றும் இன்னமும் 7500 பேர் வரையில் விடுவிக்கப்படாமல் புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் குற்றச் செயல்களில் முன்பு ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் ஏனை யோர் படிப்படியாக விடுதலை செய்யப் படுவார்கள் என்றும் பிரதி அமைச்சர் விஜித முனி சொய்சா அங்கு தெரிவித்துள்ளார். (ஒ)


NEW BATCHES START

இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

06 - 09 -2010 (Monday)
8.30 - 11.30 & 12.30 - 3.30

11 - 09 -2010 (Saturday)
8.30 - 11.30 & 12.30 - 3.30

Diploma in Information Technology with e-commerce
Diploma in Software Engineering
Diploma in Web Engineering
Diploma in Business Management

Special Discount for first 50 Students for our 1st year Anniversary

ESOFT
NO. 114 & 267, Navalar Road, Jaffna.
021 222 4142, 021 7501120/21 www.esoft.lk
No.153, Jaffna Road, Nelliyady, Karaveddy. T.P: 021 226 4940
Periya Arasady, Chavakachcheri. 021 227 0333

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கற்கைநெறிகள்
Advanced Dip. in Video mixing
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes
CBCA
கே.கே.எஸ் வீதி உப்புமடம் சந்தி அருகாமையில்
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

SUBRA (14)
சித்தங்கேணி - வட்டுக்கோட்டை
Spoken English and Grammar
By
BRITTO
Spoken Sinhala
By
லீலாகிருஸ்ணன்
ஆரம்பம் : 07.09.2010
செவ்வாய் காலை 7 மணி
அனுமதி வழங்கப்படுகிறது
2011 புலமைப்பரிசில் புதிய பிரிவு
10.09.2010 - மாலை 4 மணி


A/L BIOLOGY
PERSONAL & GROUP CLASSES
A பெறுபேற்றிற்கான மீட்டலும் எதிர்பார்க்கை வினா விடையும் சமாந்தரமாக இரு அலகுகளில்
OLD உயிரியலின் உள்ளடக்கம் & உயிரின் தொடர்ச்சி
NEW உயிரியல் அறிமுகம் & இனப்பெருக்கம்
Theory English / Tamil Medium
2011 Heredity 2012 Nutrition
S.SRIHARAN
11, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம்.

வீட்டுடன் காணி விற்பனைக்கு
யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ். பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு, நன்னீர் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0776641076

IIS
கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 05.09.2010 |
| பிரிவு 02 | 06.09.2010 |
| பிரிவு 03 | 24.09.2010 |
| பிரிவு 04 | 25.09.2010 |

இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டடணச் சலுகை வழங்கப்படுகின்றது
மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர்
IIS , #100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

வெளிவந்துள்ளது

நவாலி யூரானின்
(நவாலியூர்
நா.செல்லத்துரை)
சிறுகதைகள்
(102778)

Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre for International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

INFORMATION·TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology and Research
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office: 021 222 3641 Fax : 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

On-Line Class
Diploma in PC Application & Office Management
(MS Office syllabus included)

Diploma courses
Diploma in MS Office
Diploma in DTP

Work Shop Classes
Adobe Photoshop
Internet & E-mail

Certificate Courses

| | |
|---|---|
| Ms Word | Ms Excel |
| Ms Access | Visual Basic |
| CorelDRAW | PageMaker |
| Pascal | HTML & J Scripts |
| Java | C/C++ |

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-
விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 24/09/2010
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 25/09/2010
- Centre for Information Technology -
- Executive Officer -

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இதோ! ஒரு புதிய உதயம்
முதன்முறையாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பாடங்களுக்குத் தனித்தனி ஆசிரியர்களுடன் 11.09.2010 சனிக்கிழமை வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
"மழலைகள் கல்வியகம்"
மகிழ்ச்சியான கற்பித்தல்
ஆசான்கள் :-
(1) திரு.மு.ஜெயமதன் } பகுதி I, II
(2) திரு.S. நவகாந்தன் }
(3) திரு. V. சசிகுமார் - ஆங்கிலம்
(4) செல்வி N. சிவகாமி - சிங்களம்
(5) செல்வி S. தர்சினி - அழகியல்
(6) திரு. S.கிருபன் - வழிகாட்டல் ஆலோசனை
2011 - தரம் 2, 3, 4 02.10.2010 ஆரம்பமாகின்றது
கட்டுரை வகுப்பு தனியே இடம்பெறும்
உடன் பதிவுக்கு : நாள்தோறும் பிற்பகல் 3.30 மணி.
மழலைகள் கல்வியகம்
இந்துக்கல்லூரி அருகில்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(102943)

அறியத்தருகின்றோம்
நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு அன்னை புத்தகசாலையின் அனுசரணையில் சைவசமய பாட அறிவுப் போட்டி வினாக்கொத்து இலவசமாக வழங்கப்படுகிறது. அவற்றை நிரப்பி பூரணப்படுத்தி 08.09.2010 க்கு முன் அன்னை புத்தகசாலையின் யாழ்.கிளையிலோ அல்லது நல்லூர் உற்சவ கால சிறப்பு விற்பனை நிலையத்திலோ ஒப்படைக்கவும். 40 கேள்விகளுக்கும் சரியான விடை எழுதுவோருக்கு குலுக்கல் முறையில் தெரிவுசெய்து பரிசில்கள் வழங்கப்படும். பெறுபேறுகள் அன்னை புத்தகசாலை முன்றிலில் பார்வைக்கு வைக்கப்படும். பரிசில்கள், சான்றிதழ்கள் தபால் மூலம் வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு அன்னை புத்தக சாலையுடன் தொடர்புகொள்ளவும். தொ.பே.இல. 2229881
ஸ்ரீநிரஞ்சினி புத்தகசாலை
ஸ்ரார் பப்பிளிக்கேசன்,
190 A, ஜம்பட்டா வீதி, கொழும்பு.

இன்று மாலை மெகா மெஜிக்
இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி இருகாட்சிகள்
நேரம்: மாலை 3.30மணிக்கும் 6.30 மணிக்கும்
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
ரிக்கற் மண்டபவாயிலில்..
100/= 200/=

T.P: 077 8060 225


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org